
கோகுலம்

GOKULAM

ஜனவரி '99 ரூ. 6/-



பிருந்தாவனம்



வெங்காயத்தைத் தேடும்
இந்த அம்மாவுக்குக்
கொஞ்சம்
உதவுங்களேன்!




ஒளிந்திருக்கும் விலங்குகளைக்
கண்டுபிடியுங்கள்!

விடை. 1. ஒட்டகச் சிவிங்கி, 2. மாடு, 3. யானை, 4. குதிரை, 5. பூனை, 6. புலி, 7. முதலை, 8. குரங்கு, 9. அணில், 10. சிங்கம், 11. எலி

இரண்டு படங்களுக்கும்
இடையே இருக்கும்
ஐந்து
வித்தியாசங்களைக்
கண்டுபிடியுங்கள்! →

விடை: 1. குடை கைப்பிடி, 2. சிறுவனின் தலையில் இருக்கும் குடைக்கம்பி, 3. நெற்றி, 4. சட்டை, 5. மீனின் கண்



கோகுலம்



ஜனவரி 1999 மலர் : 16 இதழ் : 12

அன்பார்ந்த சிறுவர் சிறுமியரே,

1999ஆம் ஆண்டு பிறந்து விட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் தேதி அன்று பலர், 'நன்றாகப் படிக்க வேண்டும்; அளவோடு சாப்பிட வேண்டும்; கோபப் படக் கூடாது; உடற்பயிற்சி செய்ய வேண்டும்...' என்றெல்லாம் உறுதி மொழிகள் எடுப்பது வழக்கம். சிலர் உறுதி மொழியை கடைபிடிப்பதுண்டு. பெரும்பாலோர் உறுதி மொழியை மறந்து, நாட்களைக் கழித்து அடுத்த ஆண்டு மீண்டும் அதே உறுதிமொழியை எடுப்பதும் உண்டு. இந்த ஆண்டு நீங்கள் எடுக்கும் உறுதிமொழியை உறுதியாகக் கடைபிடிக்க வாழ்த்துகள்!

டிசம்பர் இதழில் வெளியான 'கடலில் உறங்கிய சண்முகர்' என்ற புராணக் கதை ஞாபகமிருக்கிறதா? தாமிரபரணி ஆற்றின் நடுவில் இருந்த பாறையில் செந்திலாண்டவருக்குப் புதிய மூலஸ்தான சிலையும், குறுக்குத்துறை சுப்பிரமணிய சுவாமி சிலையும் செய்ததைப் படித்திருப்பீர்கள். அந்தப் பாறையின் எஞ்சிய பகுதி என்னவாயிற்று? அது பற்றி ரா. கணபதி சுவையான செய்தியை அளிக்கிறார். 73 ஆம் பக்கத்தைப் படியுங்கள்!



இந்த ஆண்டு 'கோகுலம் சுழல் கோப்பை'யை வத்தலக்குண்டு பள்ளி பெற்றுவிட்டது. நீங்கள் படைப்புகளை அனுப்பும் போது மறக்காமல் பெயர், வகுப்பு, பள்ளி முகவரியையும் குறிப்பிடுங்கள். அப்போதுதான் சுழல் கோப்பை திட்டத்தில் வெற்றி பெற முடியும்.

அது சரி, உங்கள் பள்ளியின் நூலகத்துக்கு கோகுலம் வருகிறதோ? இல்லையென்றால் வாங்கும்படி உங்கள் தலைமை ஆசிரியரிடம் கேட்கலாமே?

அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல் வாழ்த்துகள்!



அன்புடன்

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
— தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

கோகுலம் ஜனவரி 1999

இந்த இதழில்...

பின் அட்டை வண்ணப்படம் : ஜெ.எம்.வி.

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெறும் இரண்டாவது கதை



பிரணவ மந்திரம்

பள்ளி முடிந்து வீடு வந்த சுதாகருக்கு எதிலுமே விருப்பம் இல்லாமல் இருந்தது. அவனுக்குப் பிடித்த டிபன் செய்திருந்தார் அம்மா. தொண்டையில் இறங்க மறுத்தது டிபனும் பாலும். 'ஹோம் வொர்க்' செய்யவும் நாட்டம் இல்லை.

சுதாகரின் மனம் முழுவதும் உயிர் நண்பன் ஹரிதான் நிறைந்திருந்தான்.

'பாவம் ஹரி! வகுப்பில் முதலாவதாக வருபவன். அவனுக்கு ஏன் இந்த வியாதி வந்தது? சாதாரண தலைவலி, ஜுரம் என்று வரக்கூடாதா? ஹார்ட் ப்ராப்ளமா வரணும்? இதெல்லாம் என்னைப் போன்ற பணக்கார பிள்ளைகளுக்கு வந்தால்தானே சமாளிக்க முடியும்? ஹரியைப் போன்ற வசதி குறைந்த பிள்ளைக்கு வரலாமா? பாவம் அவன் அப்பாவும் அம்மாவும். எப்படி துடித்துக் கண்ணீர் விட்டு அழுதாங்க? உடனே ஆபரேஷன் செய்யணுமாம். உடனடியா ஒரு லட்சம் ரூபாய் தேவைப்படுமாம் என்று நினைத்தபடி அமர்ந்திருந்தான்.

சுதாகர் அப்பாவின் வருகையை எதிர் நோக்கிக் காத்திருந்தான். இரவு எட்டரை மணிக்கு அப்பா வந்தார்.

"என்ன சுதாகர் படிக்கலே? இங்க உட்கார்ந்திருக்கே?" என்றார் அப்பா.

"அப்பா எனக்காக ஒரு உதவி செய்வீங்களா?" என்றான் சுதாகர்.

"இது என்ன கேள்வி? ம்.... என்ன வேணும் கேள்."

"அப்பா! என் நண்பன் ஹரி தெரியுமே உங்களுக்கு. அவனுக்கு இருதய ஆபரேஷன் பண்ணணுமாம்" என்று மென்று விழுங்கினான் சுதாகர்.

"அதுக்கென்ன இப்ப?"

"ஹரி ரொம்ப ஏழை. ஒரு லட்சம் ரூபாய் வரைக்கும் செலவாகுமாம். நீங்க தான் உதவி பண்ணணும்பா" என்றான் கெஞ்சும் பாவனையில் சுதாகர்.

"இங்கே பாரு சுதாகர். இந்தச் சின்ன வயசில் இவ்வளவு பெரிய இரக்க குணம் எல்லாம் உனக்குத் தேவையில்லை. படிப்பில் மட்டும் இப்ப நீ கவனம் செலுத்து" என்றார் அப்பா.

சுதாகருக்கு அப்பாவின் பதில் வருத்தத்தை அளித்தது. "இந்த ஆபரேஷன் மட்டும் பண்ணலைன்னா அவன் உயிருக்கே ஆபத்துப்பா" என்று கெஞ்சினான்.

"அவர்களுக்கு உதவ சேவா சங்கங்கள் நிறைய இருக்கு. நீ அநாவசியமாக கவலைப்படாதே! போய் படி" என்று கூறி விட்டு தன் அறைக்குச் சென்று விட்டார்.

சுதாகருக்கு அழுகையாக வந்தது. தன் ஆருயிர் நண்பனுக்கு உதவ முன் வராத

பா. சரண்யா

அப்பாவின் மேல் கோபப்பட்டான் சுதாகர். இரவு வெகு நேரம் விழித்திருந்த சுதாகர், அதிகாலையில் தூங்க ஆரம்பித்தான்.

அம்மா பள்ளிக்கு நேரமாகிவிட்டது என்று சுதாகரை எழுப்பவும் அவசர அவசரமாகக் கிளம்பினான்.

பள்ளிக்குச் சென்ற சுதாகர் அன்று மாலை வெகு நேரமாகியும் வீடு திரும்பவில்லை.

வீட்டிலிருந்த அனைவரும் மிகவும் பதற்றமடைந்து ஆளுக்கொரு பக்கம் சென்று தேடினர். எங்கு தேடியும் சுதாகரைக் காணவில்லை.

சுதாகரின் அப்பா காவல் துறை உயர் அதிகாரியான தன் நண்பருக்குத் தெரியப்படுத்தினார். அடுத்த பத்தாவது நிமிடம் உயர் அதிகாரி சுதாகரின் வீட்டில் இருந்தார்.

அப்போது தொலைபேசி மணி ஒலித்தது. சுதாகரின் அப்பா வேகமாக எடுத்தார்.

"உங்கள் மகன் சுதாகர் என்னிடம் இருக்கிறான். ஒரு லட்ச ரூபாய் பணத்துடன் வந்தால் அவனைக் கொடுத்து விடுகிறேன். போலீஸுக்குப் போனால் உங்களுக்குதான் நஷ்டம். இரவு எட்டு மணிக்கு புளியந்தோப்பு காளி கோயிலுக்கு வந்து விடுங்கள்" என்ற மர்மக் குரல் சட்டென நின்று போனது.

விஷயத்தை காவல்துறை அதிகாரியிடம் சொன்ன சுதாகரின் அப்பா அவசரமாக பணத்தை எடுத்துப் பெட்டியில் அடுக்கினார்.

"நான் பார்த்துக்கறேன். நீ கவலைப்படாதே" என்றார் காவல் துறை அதிகாரி.

"எனக்கு என் மகன்தான் முக்கியம், பணமில்லை. நீ வர வேண்டாம்" என்று கூறிய சுதாகரின் அப்பா காரை எடுத்துக் கொண்டு பறந்தார்.

காளி கோயிலுக்குச் சரியாக எட்டு மணிக்கு வந்து சேர்ந்தார்.

பணப்பெட்டி கிடைத்ததும் சுதாகர் விடுவிக்கப்பட்டு அப்பாவிடம் வந்து சேர்ந்தான்.

சுதாகரின் அப்பா நிம்மதியுடன் வீடு திரும்பினார்.

அடுத்த பத்தாவது நிமிடம் ஒரு போன் வந்தது.

"என்னது! குற்ற



வாளியைக் கண்டுபிடிச்சிட்டீங்களா?... ம்.... சரி! நான் பார்த்துக்கறேன். உன் உதவிக்கு நன்றி!" என்றபடி போனை வைத்தார் அப்பா.


உடனே சுதாகர், "அப்பா என்னை மன்னிச்சிடுங்க. நான்தான் என் நண்பன் மூலம் என்னைக் கடத்தும் ஐடியாவைக் கொடுத்தேன். ஹரியை காப்பாத்தத்தான் அப்படிச் செய்தேன்" என்று வருத்தத்துடன் கூறினான் சுதாகர்.

சுதாகரை அணைத்துக் கொண்ட அப்பா, "உன்னைக் காணோம்னு நான் அடைஞ்ச துயரத்தை உணர்ந்தபோதுதான் ஹரியின் பெற்றோர் கஷ்டம் எனக்குப் புரிந்தது. சிவனுக்கு பிரணவத்தை பாடமாக்கிய முருகன் போல இரக்கத்தை எனக்கு நீ உணர்த்திட்டே" என்று கூறி நிறுத்தினார்.

"நான் செய்ததும் தப்புதான்" என்றான் சுதாகர்.

"இனிமேல் இப்படிச் செய்யாதே. ஹரியின் ஆபரேஷன் செலவு முழுவதும் என்னோடது. உனக்கு திருப்தி தானே!" என்று சுதாகரிடம் கேட்டார் அப்பா.

சுதாகர் அப்பாவின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.





• தலைமை ஆசிரியரிடம் கோப்பையை பெறுபவர்கள் (வலமிருந்து இடம்) ஹாரூன் பாஷா, அமர்நாத், பாலபாரதி, அசனுல்லா

1997 டிசம்பர் இதழில் 'கோகுலம் சுழல் கோப்பை' திட்டத்தை அறிவித்திருந்தோம். 1998 ஜனவரி முதல் டிசம்பர் வரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 35 பள்ளி மாணவ மாணவியர்களின் படைப்புகள் கோகுலத்தில் வெளியாகியுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வத்தலக்குண்டு அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் 17 படைப்புகள் கோகுலத்தில் பிரசுரமானதால் கோப்பை அவர்களுக்கே!

திண்டிவனத்திலுள்ள பெரியதச்சூர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் 11 படைப்புகள் வெளியாயின. கோப்பையை அவர்கள் கோட்டை விட்டாலும் நம் பாராட்டுகள் உண்டு. அடுத்த ஆண்டு முயற்சி செய்வார்கள் என நம்புவோம்.

டிசம்பர் முதல் தேதி 'சுழல் கோப்பை' வழங்கும் விழா ஏற்பாடாகி இருந்தது.

கொடை ரோடிலிருந்து 20 கி.மீ தூரத்தில் கொடைக்கானல் செல்லும் வழியில் மலைகள், மரங்கள் சூழ அமைதியாக இருந்தது வத்தலக்குண்டு. வெற்றிலை அதிகம் விளைந்ததால் 'வெற்றிலைக் குன்று' என்று பெயர் ஏற்பட்டதாம். அது மருவி இன்று வத்தலக்குண்டாகி விட்டது.

அருகில் இருந்த மலையில் சூரிய ஒளி, நிழல் என மாறி மாறி விழுவதால் மலை பல நிறங்களாகக் காட்சியளித்

கோகுலம் சுழல் கோப்பை யாருக்கு?

தது.

பேருந்து நிலையத்திலிருந்து சிறிது தூரம் சென்றதும் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. ஐரோப்பிய கட்டடக் கலையில் 77 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இப்பள்ளி இன்றும் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது.

தலைமை ஆசிரியர் இராசமாணிக்கம் அவர்களைச் சந்தித்தோம். கோப்பை வழங்கும் செய்தியைப் படித்ததும் முதலில் அவர் நம்பவில்லையாம். நம் பள்ளிக்காக இருக்காது. முகவரி மாறி வந்திருக்கும் என்று நினைத்தாராம்!

பிறகு ஆசிரியர்களிடம் கடிதத்தைக் காட்டி



விசாரித்திருக்கிறார். அவர்களும் 'இது நம் பள்ளிக்கு வந்திருக்காது' என்று உறுதியாகக் கூறி விட்டார்களாம்!

பின் ஒரு சுற்றறிக்கை தயார் செய்து ஒவ்வொரு வகுப்பிற்கும் அனுப்பி இருக்கிறார். இறுதியில் பன்னிரெண்டாம் வகுப்பிலிருந்து நான்கு மாணவர்கள் தலைமை ஆசிரியரைப் பார்த்து விளக்கிக் கூறி, கோகுலத்தில் வெளி வந்த தங்கள் படைப்புகளையும் காட்டியிருக்கிறார்கள். பிறகுதான் அனைவரும் நம்பி இருக்கிறார்கள். தலைமை ஆசிரியர் நான்கு மாணவர்களையும் அறிமுகப்படுத்தினார். நிறையப் பேர் இந்தப் பள்ளியிலிருந்து கலந்து கொண்டார்களே! நான்கு மாணவர்கள் மட்டும்தானே இங்கிருக்கிறார்கள் என்ற சந்தேகத்தைக் கேட்டோம்.



சென்ற ஆண்டு பன்னிரெண்டாம் வகுப்பு படித்தவர்கள் இரண்டு பேர், இன்று கல்லூரிக்குச் சென்று விட்டார்கள். இந்த நான்கு பேரும் புனை பெயரில் பல படைப்புகளை அனுப்பிய விஷயத்தைக் கூறினார்கள்.

முகமது ஹாரூன் பாஷா, அமர்நாத், அசனுல்லா மூவருக்கும் எழுத ஆர்வம் வந்தது எப்படி? டெய்சி டீச்சர்தான் இதற்குக் காரணம் என்கிறார்கள். நடுநிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது அவர்தான் கோகுலத்தை அறிமுகப்



படுத்தி எழுதச் சொல்லி ஊக்குவித்தாராம்! பால பாரதிக்கோ அவரது தந்தையே வழிகாட்டி. அவர் கதை, கவிதைகளை எழுதியவர்.

பத்தாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெற்று முதல் நான்கு இடங்களைப் பிடித்தவர்கள் இன்று 'சுழல் கோப்பை'யை தங்கள் பள்ளிக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

இது தவிர இவர்களுக்கு கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி என பலவற்றிலும் ஆர்வம் உண்டு. 'முதல் ஆண்டு கோப்பையே தங்களுக்குக் கிடைத்ததில் பெருமையிலும் பெருமை' என்கிறார்கள்.

ஆசிரியர்களும் மாணவர்களும் உற்சாகத்துடன் விழா ஏற்பாடுகளை செய்து முடித்தனர்.

பன்னிரெண்டு மணிக்கு விழா தொடங்கியது. தலைமை ஆசிரியர், பள்ளி, ஊர், மாணவர்களைப் பற்றிக் கூறினார். தமிழ்நாட்டில் கூடைப் பந்து போட்டியில் முதல் இடத்தை வகிப்பது இந்தப் பள்ளி. மாநில அளவில் கல்லூரி மற்றும் பள்ளிகளுக்கிடையே கூடைப்பந்து போட்டிகளை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. இந்த மண்ணுக்கே கூடைப் பந்து ஆடக் கூடிய ஆர்வம் அதிகமிருக்கிறது என்று கூறினார். அவர் குறிப்பிட்டது போலவே எப்போதும் மாணவர்கள் பந்தை கூடையில் போட்டுப் பழகிக் கொண்டே இருக்கிறார்கள்!

உதவி தலைமை ஆசிரியர் வரவேற்றார். குழந்தை இலக்கிய வட்டத்தில் கோகுலத்திற்கு ஒரு தனி இடம் உண்டு. தமிழ் வாசிக்கச் சிரமப்படும் மாணவர்கள் கோகுலத்தை வாங்கிப் படிக்கும்படி நான் கூறுவது உண்டு என்று குறிப்பிட்டார் ஆசிரியர் ராஜசேகர்.

தமிழாசிரியை முத்துலட்சுமி கோகுலத்தை கவிதையால் வாழ்த்தினார்.

அடுத்த ஆண்டும் கோப்பையை நாங்களே தக்க வைத்துக் கொள்ள, மாணவர்களிடம் உற்சாகம் ஊட்டுவோம் என்று ராஜாங்கம் குறிப்பிட்டார்.

இறுதியில் தலைமை ஆசிரியர் கோகுலம் சுழல் கோப்பையை நான்கு மாணவர்களிடமும் வழங்கினார். பள்ளியில் படிக்கும் ஆயிரம் மாணவர்களும் தங்களுக்குக் கிடைத்த பரிசாக எண்ணி கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

கோப்பையை வழங்கச் சென்ற நமக்கு வாழ்த்து மடலும் நினைவுப் பரிசும் கொடுத்தனர்.

கூடைப் பந்தாட்டத்தின் மூலம் மட்டுமே அறியப்பட்ட இப்பள்ளியை எழுத்துலகின் மூலமும் அறியச் செய்த கோகுலத்திற்கு நன்றி தெரிவிப்பதாக ஜெ.என். நாகராஜன் கூற விழா முடிந்தது.

'இந்த ஆண்டு ஏப்ரலில் பரீட்சை முடிந்து சென்று விடுவோம். அடுத்த ஆண்டும் கோப்பை எங்கள் கைவசமாக வேண்டுமே! என்ன செய்வது?' என்ற கவலையுடன் நால்வரும் ரயில் நிலையம் வரை வந்தனர்.

கோகுலம் வாசகர்களே! 1999 ஆம் ஆண்டு 'கோகுலம் சுழல் கோப்பை'யை வெல்ல இப்போதே தயாராகுங்கள்.

அட்டையில்: **கோகுலம் சுழல்கோப்பையுடன் முகமது ஹாரூன் பாஷா**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**



கல்லும் கணக்கும்

ராமனிடம் இரண்டு அடி பக்கமுள்ள சதுரக்கல் ஒன்று இருந்தது. அதனை ஒரு அடி பக்கமுள்ள நான்கு சதுரக் கற்களாக வெட்ட நினைத்தார். கல் கொத்தனார் வேலனை அழைத்து வந்து காண்பித்தார். "கனமான கல்லா இருக்கு. உளி வச்சி மெள்ள கொத்தி உடைக்கணும். ரெண்டு நாளாகும். ஒரு நாளைக்கு கூலி ஐம்பது ரூபாய்" என்றார் வேலன்.

''சரி நாளைக்கு வந்து வெட்டிக் கொடுங்க'' என்றார் ராமன்.

மறுநாள் காலையில் வேலைக்கான சகலவிதமான சாமான்களுடன் வந்தார் வேலன். அன்று முழுவதும் வேலை செய்தார்.

மாலையில் ஒரு அடி பக்கமுள்ள சதுரக் கல் ஒன்றை வெட்டி எடுத்து விட்டார். மிச்சமிருந்த கல் 'ட' வடிவில் கிடந்தது.

அன்றைய கூலி ஐம்பது ரூபாயை வாங்கிக் கொண்டு போனார் வேலன்.

அடுத்த நாள் வேலனுக்கு உடல் நிலை சரியில்லை. தனது உறவினரான முத்துவை வேலைக்கு அனுப்பி வைத்தார்.

வேலன் அனுப்பி வைத்த ஆள் என்பதால் எல்லா விபரமும் சொல்லியிருப்பார் என நினைத்துக் கொண்டு ராமனும் முத்துவிடம் கூலி விஷயமாக எதுவும் பேசவில்லை.

முத்து மிச்ச வேலையையும் முடித்தார்.

மாலையில் ராமன் ஐம்பது ரூபாய் கூலி கொடுத்தார்.

''வேலன் ஒரு சதுரம் உடைச்சதுக்கு அம்பது ரூபா குடுத்திங்க. நான் மூணு சதுரம் உடைச்சிருக்கேன். எனக்கு நூத்தி அம்பது ரூபா தரணும்" என்றார் முத்து.

திடுக்கிட்டார் ராமன்.

"வேணும்னா கூட அஞ்சோ, பத்தோ கேட்டு வாங்கிக்கோ, அடாவடித்தனம் பண்ணாதே" என்றார்.

எவ்வளவோ நயமாக எடுத்துச் சொல்லியும் பிடிவாதமாய் இருந்தார் முத்து.

விவகாரம் பஞ்சாயத்துக்குப் போனது.

வழக்கை விசாரித்த தலைவருக்கு முத்து, ராமனை ஏமாற்ற நினைப்பது தெளிவாகப் புரிந்தது.

''ராமன் வீட்டுக்குப் போய் கல்லை நேரில் பார்த்தால்தான் தீர்ப்புச் சொல்ல முடியும்" என்றார்.

மூவரும் ராமனின் வீட்டிற்குப் போனார்கள்.

"சதுரங்கள் முதல்ல இருந்த மாதிரி வை."

முத்து கற்களை வெட்டுவதற்கு முன்பு இருந்த மாதிரி வைத்தார்.

"இதுல நீ வெட்டிய கல் எது? வேலன் வெட்டிய கல் எது?"

முத்து இரண்டையும் அடையாளம் காட்டினார்.

"வேலன் ஒரு சதுரத்தின் இரண்டு பக்கங்களை வெட்டியிருக்கிறான். அந்த சதுரத்திற்கு நேர் எதிரில் இருந்த சதுரத்தின் இரண்டு பக்கங்களை முத்து வெட்டியிருக்கிறான். எனவே இருவரின் உழைப்பும் சமமானதுதான். வேலனுக்குக் கொடுத்த ஐம்பது ரூபாய்தான் முத்துவுக்கும் கொடுக்க வேண்டும்.

"மேலும் ராமனை ஏமாற்றி பணம் பறிக்க முயற்சி செய்ததற்காக பத்து ரூபாய் ராமனுக்கும், வழக்கு நடத்தியதற்கு பஞ்சாயத்துக்கு பத்து ரூபாய் அபராதமும் தர வேண்டும்" என்று தீர்ப்பளித்தார்.


தம் திட்டம் பலிக்காததுடன் பணமும் பறிபோனதை நினைத்து வருந்தினார் முத்து.

கே. சுதர்ஷன்




இலையையும்

எங்கள் ஊரில் நடந்தது!



ஒட்டகம் வேணும்!

அன்று விடுமுறை. படிப்பதற்காக என் நண்பன் வீட்டிற்குச் சென்றேன். அவனோ புத்தகத்தைக் கொடுத்து படிக்கச் சொல்லி விட்டு குளிக்கச் சென்றான். நான் புத்த கத்தைப் பிரித்தேன். இரண்டு பக்கங்கள் கிழிந்து போயிருந்தன. நண்பனின் தம்பியிடம் "ஒட்ட கம் எடுத் துட்டு வா'' என்றேன்.



ஏன் கூப்பிட்டே?


என் நண்பனின் பெயர் சந்திரன். அவனை 'சந்திரா' என்றே அழைப்போம். ஒரு நாள் கடைத் தெருவில் நான் சென்று கொண்டிருக்கும் போது சந்திரன் என்னைக் கவனிக்காமல் சைக்கிளில் சென்று கொண் டிருந்தான். உடனே நான் "சந்திரா, சந்திரா" என்று அழைத்தேன். எனக்கு முன்னால் போய்க் கொண்டிருந்த பெண் திரும்பிப் பார்த்து, "எதுக்கு என்னை கூப்பிட்டே?'' என்று கேட் டார். "உங்க பேர் சந்திரான்னு எனக்குத் தெரியாது. என் நண்பனைத் தான் கூப்பிட்டேன்'' என்று விளக்கி னேன். அவர் நம்பவில்லை. அதற்குள் சந்திரன் திரும்பி வந்து உண்மையைக் கூறி அழைத்துச் சென்றான்.

– எம். செல்லையா, சாத்தூர்.

எல்லாவற்றையும் சாப்பிடணும்!

ஊரிலிருந்து உறவினர்கள் வந்திருந் தனர். அம்மா வடை, பாயசத்துடன் சமை யல் செய்தார். எல்லோரும் உட்கார்ந்து சாப் பிட ஆரம்பித்தோம். அப்போது "எதையும் விட்டு வைக்காமல், எல்லாத்தையும் சாப்பிட ணும்" என்றார் அம்மா. அருகிலிருந்த தம்பி "அம்மா இலையைக் கூட சாப்பிடணுமா?" என்று பரிதாபமாகக் கேட்டான். நாங்கள் சிரித் தோம். "இலையை மட்டும் வச்சிட்டு மத்ததெல் லாம் சாப்பிடணும்" என்றார் அம்மா சிரித்த படியே!


– மகேஸ்வரமணி, சோழபுரம்.



சாப்பிடணுமா?

"அண்ணா! ஒட்டகம் ராஜஸ்தானில் தானே இருக்கும். அது சரி! எதுக்கு இப்ப உங்களுக்கு ஒட்டகம்?" என்றானே பார்க்கலாம்! "தம்பி! பேப்பர் ஒட்ட பசை கொண்டு வர்றியா?" என்று கேட்டவுடன் சிரித்து விட்டு, கொண்டு வந்தான்.


– எல். சேகர், ஸ்ரீரங்கம்.



யார் டிக்கெட் வாங்கலை?

நானும் நண்பனும் பக்கத்து ஊர் நூலகத்திற்குச் செல்ல பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தோம். நடத்துனர் "இன்னும் ஒருத்தர் டிக்கெட் வாங்கலை, யார்?" என்று கேட்டுக் கொண்டேயிருந்தார். "சார் ரெண்டு பேர் வாங்கலை. நீங்களும் டிரைவரும்தான்" என்றான் என் நண்பன். அனைவரும் சிரித்தனர். "கண்டு பிடிச்சிட்டேன்! உங்களில் ஒருத்தன்தான் டிக்கெட் வாங்கலை" என்றார் நடத்துனர் கோபத்துடன். "நான் ரெண்டு டிக்கெட் வாங்கிட்டேன்" என்றபடி சட்டை பையில் இருந்து டிக்கெட்டை எடுத்தான் நண்பன். ஒரு டிக்கெட்தான் இருந்தது. எங்களை முறைத்தார் கண்டக்டர். "ரெண்டு டிக்கெட் தான் கேட்டேன். நீங்கதான்... நானும் பார்க்காமல் வச்சிட்டேன். மன்னிச்சிடுங்க" என்றான். அனைவரும் எங்களை பரிதாபமாகப் பார்த்தனர்.

– ஆர். திவாகர்,
மிட்டூர்.



புள்ளி புள்ளியாய்...

அன்று விடுமுறை. வீட்டில் அனைவரும் டீ.வி. முன் அமர்ந்திருந்தோம். கோலங்களைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது. திடீரென டீ.வி. திரையில் இரைச்சலும் புள்ளி புள்ளியாய் கோடுகளும் தெரிந்தது. "என்ன இப்படி தெரியுதே!" என்று அம்மா வருத்தப்பட்டார். உடனே அருகிலிருந்த தம்பி, "கோலங்கள் பற்றிய நிகழ்ச்சியில்ல. அதனால புள்ளி வரத்தான் செய்யும்" என்று சொல்லவும் அனைவரும் சிரித்து விட்டோம்.

– அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்.

கவர் வாங்கிட்டுவா!

என் அப்பா மூன்று ரூபாய் கொடுத்து ஒரு கவர் வாங்கிட்டு வரச் சொன்னார். 'ஒரு கவர் வாங்க எதுக்கு மூன்று ரூபாய்?' என நினைத்தபடி சென்றேன். கடையில் ஐம்பது பைசா கொடுத்து ஒரு பிளாஸ்டிக் கவர் வாங்கி அப்பாவிடம் கொடுத்தேன். அப்பா என்னைக் கோபமாகப் பார்த்தார். "உங்க பெரியப்பாவுக்கு கடிதம் எழுதணும்னு காலையிலேயே சொன்னதால் வெறும் கவர்னு சொன்னேன். ஏன் இப்படி பண்றே?" என்றார் அப்பா. "நீங்க காலையில் சொன்னது மறந்து போச்சு. இப்ப வாங்கிட்டு வந்திடறேன்" என்றபடி தபால் நிலையம் நோக்கி ஓடினேன்.

– எஸ். நாகராஜன், செஞ்சி.

முள்ளை முள்ளாலே...

வேகமாக நடந்து கொண்டிருந்தான் விநாயக சுந்தரம். அவனுக்கு முன்னே சற்றுத் தொலைவில் சென்று கொண்டிருந்தான் செல்லப்பன். விநாயகத்துக்குப் பின்னாலே ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தான் விவேகானந்தன்.

"டேய்... இருடா, நானும் வர்றேன். சேர்ந்து போவோம்!'' என்று கூவிக் கொண்டே வந்தான் விவேக்.

விநாயகம் திரும்பியும் பார்க்கவில்லை. அந்தக் குரல் தன் காதுகளில் விழுந்ததாகவும் காட்டிக் கொள்ளவில்லை. அவன் செல்லப்பனை நெருங்கி விட்டான். அப்போது விவேகானந்தன் குரல் செல்லப்பனுக்குத் தெளிவாகவே கேட்டது.

"என்னடா வினு! அவன் கத்திக்கிட்டே வர்றானே உன் காதில் விழலையா?" என்று விநாயகத்திடம் கேட்டான் செல்லப்பன்.

''அவனுக்கு வேற வேலையில்லை. வகுப்பிலேதான் தொந்தரவுன்னா வெளியிலே கூடவா?" என்று சலித்துக் கொண்டான் விநாயகம்.

"என்னடா வினு! என்னைப் போலவே அவனும் உனக்கு ஒரு சிநேகிதன்தானே. பார்க்கப் போனால் என்னைவிட அவன் தான் உனக்கு நெருக்கம். பக்கத்து சீட் இல்லையா?"

"அதான் தொந்தரவு! அவன் சிநேகிதம் வேண்டாமுன்னுதான், நான் ஒதுங்கி



பூவை அமுதன்

ஒதுங்கிப் போறேன். அவன்தான் என்னை விடாமல் வந்துகிட்டிருக்கான்!"

"அவன் நல்லவன்தானே! நம்மைவிட நல்லாப் படிக்கிறான். அவன் பக்கத்திலே நீ இருக்கியேன்னு எனக்குப் பொறாமையாக் கூட இருக்கு. நீ என்னடான்னா அவனை இப்படி வெறுக்கறே... ஏன்?"

"நான் ஒண்ணும் அவனை வெறுக்கலையே!"

"பேச்சு அப்படித்தானேயிருக்கு. அப்படி என்ன செய்யறான் விவேக்?"

"அவன் புத்திசாலிதான். நல்லாப் படிக்கிறவன்தான். அவன்கிட்டேயிருக்கிற கெட்டப் பழக்கம்..."

"நீ எதைச் சொல்றே விநு?"

"இதோ பாரு செல்லப்பா! நீ என்னை விநுன்னு சுருக்கிக் கூப்பிடறே. இன்னும் சில பேரு என்னை விநாயக் அப்படின்னு அழைக்கிறாங்க. ஆனால் இந்த விவேக் என்னை எப்படிக் கூப்பிடறான் தெரியுமா?" என்று சற்று கோபமாகவே கேட்டான் விநாயக சுந்தரம்.

"நான் கவனிச்சதே இல்லை. எப்படி அழைக்கிறான் உன்னை?" என்று ஆர்வத்தோடு கேட்டான் செல்லப்பன்.

"நீ கேட்டதே இல்லையா? அவன் என்னை 'வி...நாய்' அப்படின்னு கூப்பிடறான்" என்றான் வெறுப்பாக.

"ச்சே! ரொம்பவும்தான் திமிர்!" என்று ஆத்திரப்பட்டான் செல்லப்பன்.


"நான் பலமுறை சொல்லிட்டேன். நான் வருத்தப்படறேன்னு தெரிஞ்சும் அப்படியேதான் கூப்பிடறான். இடத்தை மாற்றிக்கவும் முடியல்லே. உயரப் பிரகாரம் வரிசையா உட்கார வச்சிருக்காங்களே!" என்றான். வருத்தம் அவனது வார்த்தைகளில் தெரிந்ததைக் கவனித்துச் செல்லப்பனும் வருந்தினான்.

"வகுப்பாசிரியரிடம் சொல்லி உன் இடத்தை நீ மாற்றிக்கிட்டா என்ன?"

"ஆசிரியருக்கு நான் காரணத்தைச் சொல்லணும். அப்புறம் இது எல்லாருக்கும் தெரியும். அவங்களும் அதே மாதிரி கூப்பிட ஆரம்பிப்பாங்க. இது மட்டுமில்லே. சும்மா தட்டித் தட்டிப் பேசறான். அவனுக்குச் சிரிப்பு வர்றபோதெல்லாம் ஓங்கி என் தொடையிலோ, முதுகிலோ தட்டறான். சில சமயம் நல்லா வலிக்குது. என்ன சொன்னாலும் கேட்க மாட்டேங்கிறான். எனக்கு அவஸ்தையாயிருக்கு!"

விநாயக சுந்தரத்துக்குக் கண்களில் நீர் முட்டிக் கொண்டு நின்றது.

"அவன் மகிழ்ச்சியைக் காட்டறதுக்கு, மற்றவங்களைக் கஷ்டப்படுத்தணுமா? வேண்டுமென்றே தான்





"எந்தக் கேள்வி கேட்டாலும் 'டாண், டாண்னு' பதில் சொல்றியே, உன் பெயர் என்னடா?"

"மணி சார்!"

— பா. ஜெயக்குமார், வந்தவாசி

செய்யறானா?" என்று கேட்டான் செல்லப்பன், விவேக் நெருங்கி வருவதைப் பார்த்துக் கொண்டே.

என்கிட்டே உன்னைப் பற்றிப் பேசறப்போ... உன்னைச் 'செல்லுப்பய செல்லுப்பயன்னு'தான் சொல்றான், தெரியுமா?"

"நல்லாப் படிக்கிறோம். ஆசிரியர்களிடத்திலே நல்ல மதிப்பு இருக்கு, அப்படிங்கிற கர்வம் அவன் கண்ணை மறைக்குதுன்னு நெனைக்கிறேன். அவனுக்கு எப்படியாவது நல்ல பாடம் கற்பிக்கணுமே" என்று தன் நெற்றியில் தட்டிக் கொண்டான் செல்லப்பன்.

மூச்சு வாங்க அவர்கள் அருகே வந்து நின்றான் விவேக்.

"ஹாய் வி...நாய்! ஹாய்... செல்!" என்று கூவிக் கொண்டே இருவர் முதுகிலும் தட்டினான்.

விநாயக சுந்தரம் ஏதும் பேசாமல் தள்ளிப் போய் நின்றான்.

"என்னடா இது... ஹாய் ஹோய்ன்னு அடிக்கிறே" என்று சீறினான் செல்லப்பன்.

"ஹாய் செல்! இது அடி இல்லேடா... அன்பா... ஒரு தட்டு...! இதுக்குப் போய் கோபப்படறீயே?" என்று சிரித்தான் விவேக்.

"நீ சும்மாவும் தட்ட வேண்டாம்... காசு கொடுத்தும் தட்ட வேண்டாம். அடிச்சிப் பேசறதுதான் அன்பா? என்னமா வலிக்குது? ..." என்று தன் முதுகைத் தடவிக் கொண்டே கடிந்து கொண்டான்.

"என்னடா செல், இதுக்குப் போய் இப்படிக் கோபப்படறே... நீயும் இந்த வி...நாய் மாதிரிதான் போலிருக்கு. ஐயே..." என்று பழித்துச் சிரித்தான் விவேக்.

"சிரிக்கிறதை நிறுத்துடா! நான் உன்னை விவேக்குன்னு கூப்பிடறேன். ஏதும் வித்தியாசமாத் தெரியல்லே. இதுவே... 'ஹேய்... விவே...காய்!' அப்படின்னா எப்படியிருக்கும்? என்னடா இது காயும் பழமும்ன்னு நீ கேட்க மாட்டே?"

"ஏன் இப்படிச் சொல்றே?" புரியாதவன்போல் கேட்டான் விவேக்.

"செல்லப்பனைச் செல்லுங்கிறே... விநாயகசுந்தரத்தை வி...நாயின்னு விநோதமா கூப்பிடறே... படிக்கிற உனக்கு சரியாத் தோணுதா?"

"சும்மா ஸ்டைலா கூப்பிட்டேன்பா" என்றான் விவேக்.

"எது ஸ்டைல்? மற்றவங்க நல்ல பேரை அசிங்கமா மாத்திக் கூப்பிடறதா? இல்லே... அடிச்சி அடிச்சிப் பேசறதுகூட ஸ்டைல் தானா?" என்று ஆத்திரத்தோடு கேட்டான் செல்லப்பன்.

"என் பழக்கம் அப்படித்தாம்பா. இது பெரிய தப்பா...?" என்றான் அலட்சியமாக, விவேக்.

"தப்பிலே பெரிசு என்ன, சின்னது என்ன.? மற்றவங்களைக் கஷ்டப்படுத்தறது எல்லாமே தப்புதான்!" என்று அழுத்தமாகச் சொன்னான் செல்லப்பன்.

"உன் பழக்கத்தை உன்னோடு நிறுத்திக்கோ. எங்ககிட்டே காட்ட வேண்டாம்" என்றான் அதுவரை மௌனமாக இருந்த விநாயக சுந்தரம்.

அதற்குப் பிறகு சிறிது நேரம் யாருமே பேசிக் கொள்ளவில்லை. மௌனமாக, நடந்து கொண்டிருந்தார்கள்.

வழியில் குரங்கை வைத்துக் கொண்டு வித்தை காட்டிக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன்.

அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது ஒரு கூட்டம். அந்தச் சிறுவன் செய்கிற சேஷ்டையும் அவனைப் பார்த்து அந்தக் குரங்கு செய்கிற கூத்தும் பார்த்துக் கொண்டிருந்தவர்களைச் சிரிக்க வைத்தன.

மூன்று பேரும் அந்த வேடிக்கையைப் பார்க்கச் சற்று ஒதுங்கி நின்றார்கள்.

செல்லப்பன் அந்தப் பையனையும், குரங்கையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அடக்க முடியாத அளவு சிரிப்பு வந்தது. அத்துடன் அவனுக்குள் ஒரு யோசனையும் வந்தது.

உடனே விவேக்கின் பக்கமாய்ப் போய் நெருங்கி நின்றான். சிரிப்பு வருகிற போதெல்லாம் அவனை முந்திக் கொண்டு அவன் முதுகிலும் தலையிலும் தன் கைகளால் தட்டித் தட்டிச் சிரித்தான்.

"விவே... காய்... இந்தக் குரங்கைப் பாரு! என்னமமா ஆடுது, ஒடுது... ஐயோ..." என்று சொல்லிச் சொல்லி விளையாட்டாகத் தட்டுவதைப் போல, வேடிக்கையை வியப்பதுபோல விவேக்கின் அடி வயிற்றில் அடிக்கடி குத்தினான் செல்லப்பன்.

விவேக் ஒதுங்கிப் போனாலும் விடவில்லை. தன்னை மறந்து செய்வதைப் போல அப்படியே செய்து கொண்டிருந்தான் செல்லப்பன்.

விநாயத்துக்கே பொறுக்கவில்லை. செல்லப்பனின் கைகளைத் தடுத்துக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். விவேக்கின் கண்களில் நீர் திரையிட்டது.

"தடுக்காதே விநாயக சுந்தரம். செல்லப்பன் நல்லா குத்தட்டும். எனக்குப் புத்தி வர்றவரை குத்தட்டும்" என்று முகத்தைத் துடைத்துக் கொண்டான் விவேக்.

அதற்குப் பின் மூவரும் மௌனமாகவே அந்த இடத்தை விட்டு அகன்றனர். அந்த மௌனத்தை மீண்டும் விவேக்தான் கலைத்தான்.

"நாம இனிமே, அடிச்சிப் பழகாத, கேலியாப் பேசிக்காத, நல்ல நண்பர்களாயிருப்போம்!" என்றான் விவேக்.


பறக்கும் பாலூட்டி!

இரவு வேளைகளில், நம் தலையை வெட்டி விடும் வேகத்தோடு ஒன்று பறந்து போவதை நீங்கள் பலமுறை பார்த்திருக்கக் கூடும். எலியின் தோற்றத்தோடு காட்சி தரும் அதன் பெயர் வெளவால்.

பகல் நேரத்தைவிட ராத்திரி நேரத்தில் தான் வெளவால் வெளியே செல்லும். சூரியன் மறைந்த பிறகு தன் இருப்பிடத்தை விட்டு வெளியே வந்தால் பிறகு விடியும் வரை ஒரே கூத்தும் கொண்டாட்டமும் தான்...! பெரிய கோயில்களில், கசகச என்று கத்திக் கொண்டு இருப்பதை உங்களில் பலர் பார்த்திருப்பீர்களே!

பறக்கும் போது தன்னிடமிருந்து உயர் அதிர்வலைகளால் ஆக்கப்பட்ட ஒலி அலைகளை- (high frequency sound waves) வெளியிட்டவாறே இவை பறக்கும். இந்த அலைகள், பறக்கும் வழியில் இருக்கும் பொருட்களின் மீது பட்டு, உடனே வெளவாலிடமே திரும்பி வரும். இதற்கு ஒலி எதிரொலிப்பு என்று பெயர். நூலிழை கொண்ட பொருள் இடைமறித்தால் கூட, தவறி விடாமல், இந்த ஒலி எதிரொலிப்பு மிகத் துல்லியமாய் நிகழும்.

இப்பொழுது சொல்லுங்கள்... வெளவால் பறக்கும் போது ஒலி எதிரொலிப்பு நிகழாவிட்டால் என்ன அர்த்தம்? எதிரே தடையொன்றும் இல்லை என்று தானே அர்த்தம்? இப்படித்தான் அவை பாதையறிந்து பறக்கின்றன. மாறாக, ஒலி எதிரொலிப்பு நிகழ்ந்தால், எதிரே ஏதோ தடையுள்ளது என அறிந்து விட்டு, உடனே தன் பாதையை மாற்றிக் கொண்டு பயணத்தைத் தொடரும்.



இது மட்டுமல்ல... அலைகள் திரும்பி வரும் போது, அந்த அலைகள், தன் இரை மீது பட்டுத் திரும்பி வருகின்றனவா என்றும் வெளவால்கள் சரியாக கணக்கிட்டு விடும். இவ்வாறு தான், கும்மிருட்டில் கூட அவை இரையைப் பிடித்து சாப்பிட்டு வாழ்கின்றன.

உடம்பில் துளி அழுக்குப் பட்டு விட்டால் போதும். உடனே ஏதாவது மரத்தில் போய் அமர்ந்து உடம்பைச் சுத்தப்படுத்திக் கொண்டால் தான் வெளவாலுக்குத் தூக்கமே வரும்! அதுவும் எப்படி...? மரத்தில் தலை கீழாய் தொங்கிய படி!

தன் உடம்பு மட்டுமின்றி தான் வாழும் இடமும் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் வெளவால் கறாராக இருக்கும்.

இவை குட்டிப் போட்டு பால் கொடுக்கும்.


வெளவால் விவசாயிகளின் தோழன். நூறு வெளவால்கள், ஓர் ஆண்டில், ஆறு லட்சம் புழுக்களைக் கபளீகரம் செய்கின்றன. இந்தப் புழுக்கள் மட்டும் அப்படியே வளர்ந்திருந்தால் பல்லாயிரம் கோடி பூச்சிகள் உருவாகி, அனைத்துப் பயிர்களையும் ஏப்பம் விட்டிருக்கும்.

வெளவால்கள் நன்மை செய்தாலும், உலக அளவில், மூட நம்பிக்கைகளினாலும், பய உணர்வினாலும் இவை கொல்லப் படுகின்றன.

— ஹரி ப்ரம்மேந்திரன்

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணி. இதற்கு வால் கிடையாது (3)

2. கிருஷ்ணதேவராயர் அவையில் இருந்த கவிஞர் (5)

9. தண்ணீர் எடுத்து வர உதவும் பாத்திரம் (3)

12. கடந்த ஒலிம்பிக் போட்டிகள் நடந்த இடம் (5)

வலமிருந்து இடம்

6. பாலைவனத் தாவரம் (3)

14. பல்லி இனத்தைச் சேர்ந்த விலங்கு. ராமனுக்கு உதவாதது என்ற கதையும் உண்டு (3)

மேலிருந்து கீழ்

1. பழங்களில் ஒன்று. சமையலுக்கு உதவும் (4)

2. வருகை என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)

3. அடித்து ஒலி எழுப்பக்கூடிய வட்ட வடிவ வாத்தியம் (4)

4. நிலத்திலும் நீரிலும் செல்லாத போக்குவரத்து (4)

8. அரபு நாடுகளில் இந்த இடத்தில் போர் அபாயம் ஏற்பட்டுள்ளது (4)

11. ஆங்கில மாதங்களில் ஒன்று (2)

கீழிருந்து மேல்

5. செங்கல் தயாரிக்கும் இடம் (2)

7. தென்னை மரத்தில் இது கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டும் என்ற பழமொழி உண்டு (2)

10. யானையின் எடையை இந்த அளவில் கூறலாம் (2)

12. நெருப்பிற்கு இன்னொரு பெயர் (4)

13. அரிக்கன் விளக்கை இப்படியும் அழைக்கலாம் (4)

14. ரவிவர்மா இக்கலையில் சிறந்தவர் (4)

— பி. ரம்யா,
பத்தாம் வகுப்பு,
வித்யாநிகேதன் மெட்ரிக் பள்ளி,
வேலூர்.

விடை 69 ஆம் பக்கம்

உதிர்த்த உயிரும் ஒரு இளை பழையதும்...

ஆர். மாலதி

பார்வதி, பரமசிவம் இருவரும் மிகவும் அன்பான தம்பதி. அதிலும் பரமசிவம் மிகவும் பொறுமைசாலி. விட்டுக் கொடுத்து, அனுசரித்துப் போகும் குணமுடையவர்.

வைகுண்ட ஏகாதசி வந்தது. ஏகாதசி தோறுமே பட்டினி கிடப்பார் பரமசிவம். ஆனால் பார்வதிக்கோ பசி தாங்காது.

அவரது தோழிகள் "பார்வதி, முன்னே தான் 'குழந்தைகளுக்காக உழைக்க வேண்டியிருக்கிறது. பட்டினி கிடந்தால் களைப்பாய் வருகிறது' என்று சாக்குச் சொன்னாய்! இப்போ நீங்கள் இரண்டு பேர்தானே! ஏகாதசிக்கு என்ன செய்யப் போகிறாய்? வெங்காய சாம்பாரா? பூரி மசாலாவா?" என்று கிண்டல் செய்தனர்.

ஆற்றிலிருந்து கொண்டு வந்த குடத்தை 'நங்'கென்று வைத்த பார்வதி கணவரிடம், "நாளை பெரிய ஏகாதசிக்கு நானும் சுத்தப் பட்டினிதான்! என்னாலென்ன பட்டினி கிடக்க முடியாதா? கேலி பேசுகிறவர்கள் வாயை அடைக்கப் போகிறேன்" என்றார்.

பரமசிவம் அன்புடன் "பார்வதி, நீ பசி தாளாமல் சுருண்டு விடுவாய்! நேரத்துக்கு சாப்பிட்டுப் பழகிய வயிறு கேட்காது" என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், பிடிவாதமாகப் பட்டினி இருக்கப் போவதாகச் சொல்லி விட்டார்.

"பின் ஏன் இத்தனை சாதம் வடித்தாய்?" என்றார் பரமசிவம்.

"நாளை மறுநாள் சாப்பிட்டுக் கொள்ளலாம். பானையில் போட்டுத் தண்ணீர் ஊற்றி வைத்தால் கெடாது!" என்று சமாதானமும் சொன்னார் பார்வதி.

ஏகாதசி அன்று கோவிலுக்குப் போய் பூஜை முடிந்து பாலும், பழமும் சாப்பிட்டார்கள். மாலையாயிற்று. விளக்கேற்றி ஹரி பஜனை செய்தார்கள். இரவு வந்தது. பாகவதம் படித்தார் பரமசிவம். மீண்டும் பாலும், பழமும் சாப்பிட்டனர்.

பரமசிவத்துக்கு ஆச்சரியமாக இருந்தது. "பரவாயில்லையே! பட்டினி இருக்கிறாளே!" என்று மனதுக்குள் பாராட்டினார்.

ஆனால் பார்வதிக்கோ வயிற்றைப் பிசைந்தது. "பேசாமல் உப்புமாவாவது கிளறி சாப்பிட்டிருக்கலாம். வீண் வம்பு" என்று மனதுக்குள் நொந்து கொண்டார். எப்படித்தான் கணவர் 'ஏகாதசி தோறும் பட்டினி கிடக்கிறாரோ' என்று மனதிற்குள் வியந்தார். 'அடுத்த வைகுண்ட ஏகாதசிக்கு க்ஷேத்ராடனம் போய் விட வேண்டும். ஊரிலே இருந்தால்தானே பிரச்னை!' என்று தீர்மானித்துக் கொண்டார்.

ஆனால் இரவுப் பொழுதை எப்படி தள்ளுவது? கூட நான்கு பழங்கள் சாப்பிடலாம் என்றால் கணவர் 'பகாசூரி' என்று நினைத்துக் கொள்வாரோ என்ற பயம்! இரவு ஆக ஆக வயிற்றைச் சுருட்டியது. மணியைப் பார்த்தார்.

'அட பத்து மணிதானா! நான்கு மணி வரை எப்படி சமாளிப்பேன்? நாளைக்கு சமைக்க தெம்பிருக்குமா? மயக்கம் போட்டு விழுந்து விடுவேனா' என்றெல்லாம் பயந்தார்.

பரமசிவம் படுத்து விட்டார். சிறிது நேரம் ஆயிற்று. தூக்கம் வராத பார்வதி, "என்னங்க, தூங்கிட்டீங்களா?" என்று கேட்டார்.

"இல்லை. பன்னிரண்டு மணி வரையிலாவது கண் முழிக்க வேண்டுமே! இடுப்பு வலிக்கிறது. உட்கார முடியாததால் படுத்திருக்கிறேன்" என்றார்.

சிறிது நேரம் சென்றதும் "கை கால் ஆடவில்லையே! தூங்கிட்டாங்க போலிருக்கு. பாவம்! அதிகாலை எழுந்து சொர்க்க வாசல் தரிசனம் போன அலுப்பு" என்றார் பார்வதி.

"இல்லை பார்வதி! சும்மாதான் படுத்திருக்கிறேன்" என்றார் பரமசிவம்.

சற்று நேரம்

சென்றதும் "தூக்கம் வந்தா தூங்குங்க! கட்டாயமா முழிச்சிட்டிருந்தா கண் கெட்டுப் போகுமுன்னு எங்க பாட்டி சொல்வாங்க" என்றார்.

பரமசிவம் பதில் சொல்லவில்லை. 'இவள் ஏன் இப்படிச் சொல்கிறாள்?' என்று யோசித்தார்.

கொஞ்ச நேரம் சென்றதும் மெதுவாக எழுந்தார் பார்வதி. கணவர் முகத்தருகே சென்று உற்றுப் பார்த்தார். பரமசிவம் உறங்குவது போல் பாசாங்கு செய்தார். உறங்குகிறார் என்று முடிவு கட்டிய பார்வதி, பூனை போல் நடந்து சமையலறைக்குச் சென்றார். புறக்கடையிலிருந்து மறுநாள் உபயோகத்திற்கென பறித்து வைத்திருந்த சுரை இலைகளை தரையில் விரித்தார். அதிலே பழையதைப் பிழிந்து எடுத்து வைத்தார். உறியிலிருந்து தயிரை ஊற்றி, உப்புப் போட்டுப் பிசைந்தார். தொட்டுக் கொள்ள பச்சைச் சுண்டைக்காயை மிளகாயுடன் பிழிந்து போட்டுக் கொண்டார். 'சுபசுப'வென்று அள்ளி அள்ளி சாப்பிட்டார்.

எல்லாவற்றையும் ஒளிந்திருந்து பார்த்த பரமசிவம் மௌனமாக வந்து படுத்துக் கொண்டார்.

கை கழுவி, சாப்பிட்ட இடத்தை சுத்தம் செய்து விட்டு வந்த பார்வதிக்கு 'அப்பாடா' என்றிருந்தது.

திரும்பிப் படுத்த பரமசிவத்திடம், "உங்களுக்கு எப்படித்தான் தூக்கம் வருகிறதோ? பாதி ராத்திரி வரையிலாவது கண் விழித்தால்தான் புண்ணியம்! ஒரு கதை சொல்லுங்களேன்" என்றார் பார்வதி.


எழுந்து உட்கார்ந்தார் பரமசிவம்.

"நம்மைப் போல் ஒரு தம்பதிகள். 'சிவராத்திரி விரதம் இருப்பேன்' என்று பிடிவாதம் பிடித்தாள் மனைவி. கணவர் பேச்சைக் கேட்கவில்லை!

"ராத்திரி அபிஷேகம் பார்க்க ஆலயம் சென்று விட்டான் புருஷன்.

"மனைவி சுரை இலையாம்; சுண்டைக்காயாம்! உறித் தயிராம்; ஒரு இலை பழைய அமுதாம், உருட்டி உருட்டிப் போட்டுக் கொண்டாளாம்!" என்றதும் பார்வதி வெட்கத்துடன் "பார்த்துட்டீங்களா?" என்றார்.

"அசடே! பட்டினி கிடக்க முடியாதவர்கள் எண்ணத்தால் தூய்மையாக இருந்தாலே போதும். பிறருக்காக வீண் ஜம்பம் ஆகாது" என்றார் பரமசிவம்.



கண் இமைகள் இமைப்பது ஏன்?



● **பி. கலைவாணி, காளையார்கோவில்.**

? கண் இமைகளை இமைப்பது ஏன்? இதனால் நமக்கு என்ன நன்மை?

! இமைகள் இமைப்பது ஓர் அனிச்சைச் செயல்; தற்காப்புச் செயலும் கூட! இமைகளில் இமை மயிர்கள் இருக்கிறதல்லவா? இவை கண்களில் தூசு விழுந்து விடாதவாறு பாதுகாக்கின்றன; அந்நியப் பொருள்கள் கண்களில் நுழையாதவாறு தடுக்கின்றன. மேலும் இமை ஓரங்களில் எண்ணெய்ச் சுரப்பிகள் உள்ளன. ஒவ்வொரு முறை இமைகள் மூடும்போது இச்சுரப்பிகளிலிருந்து எண்ணெய் கசிந்து கண்களையும், இமைகளையும் ஈரமாக்குகின்றன. இதனால் கண்களில் எரிச்சல் ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது; பார்வை தெளிவாக இருப்பதற்கு இது



உதவுகிறது. தவிர, இமைகள் இயங்கும் ஒவ்வொரு முறையும் கண்களின் ஓரங்களில் இருக்கும் கண்ணீர்ச் சுரப்பிகளிலிருந்து கண்ணீர் கசிந்து, கண்களை உலர விடாமல் பாதுகாக்கின்றது. ஆகவே கண்கள் பாதுகாப்பாக இருப்பதற்கும், வாழ்நாள் முழுவதும் நமக்குப் பார்வை நன்றாக இருப்பதற்கும் இமைகள் இயங்க வேண்டியது அவசியமாகும்.

● **த. திருப்பதி, ஆசனாம்பட்டு.**

? நரம்பு ஊசிகள் போடுவதால் நரம்பு உணர்ச்சிகள் பாதிக்கப்படுமா, டாக்டர்?


! பாதிக்கப்படாது தம்பி. நாம் பேச்சு வழக்கில்தான் 'நரம்பு ஊசிகள்' என்று சொல்கிறோமே தவிர நடைமுறையில் நரம்பு ஊசிகளை நரம்பில் (nerve) போடுவதில்லை; சிரைக் குழாய் (vein) என்று அழைக்கப்படுகிற அசுத்த ரத்தக் குழாய்களில்தான் போடுகிறோம். இதனால் நரம்புகளுக்கு பாதிப்பு வருவதில்லை.

● **கே. பிரபா, சத்தியமங்கலம்.**

? சிலருக்கு சிறுவயதிலேயே பற்கள் ஒழுங்காக வளர்வதில்லை... தெற்றுப்பற்கள் முளைத்து விடுகின்றன. இதற்கு என்ன காரணம்? எப்படி சரி செய்வது?

! தெற்றுப் பற்கள் வளர்வதற்கும், ஒழுங்கற்ற பற்கள் முளைப்பதற்கும் முக்கிய காரணம், பாரம்பரியம். தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா ஆகியோரது பற்கள் ஒழுங்கற்ற முறையில் இருந்தால் மகன், மகள், பேரன், பேத்தி ஆகியோருக்கும் இந்த அமைப்பு தொடரும். அடுத்த காரணம், இயக்குநீர் கோளாறு. பிட்யூட்டரி சுரப்பியில் உள்ள வளர்ச்சி இயக்குநீர் அதிகமாகச் சுரந்தால் தாடை எலும்பின் வளர்ச்சி அதிகமாகும். அப்போது முகம் விகாரமாகத் தோன்றுவதோடு, தெற்றுப் பற்கள் வளரவும் வழி கிடைக்கும். இப்போதுள்ள நவீன சிகிச்சை முறைகளில் இக்குறைபாடுகளை எளிதில் சரி செய்து விடலாம். பற்கள் வரிசை மாறாமல் தூக்கலாக மட்டும் இருந்தால் 'சாதாரண கிளிப்' போட்டு நேர் செய்து விடலாம். கோணலாகவும் தூக்கலாகவும் ஒழுங்கற்றும் இருக்கும் பற்களை 'fixed clip' போட்டு சீரமைத்து விடலாம். ஆனால், தாடை எலும்பு வளர்ச்சி அதிகமான காரணத்தால் தெற்றுப் பற்கள் தோன்றியிருந்தால் மேற்சொன்ன முறைகள் உதவாது;





அறுவை சிகிச்சைதான் மேற்கொள்ள வேண்டும்.

● எல். ரம்யா, ஆறுமுகனேரி.

? பாக்டீரியா தாக்குதல் வராமல் தடுக்க என்ன செய்யலாம்?

! இதற்கு ஆறு வழிகளை நாம் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். 1) சுத்தமான தண்ணீரைக் குடிக்க வேண்டும். 2) சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டும். 3) சுயசுத்தம் பேண வேண்டும். 4) சுற்றுப் புறத்தையும் வெகு சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். 5) உடலில் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கும் சத்துள்ள, சுத்தமான உணவை உண்ண வேண்டும். 6) தடுப்பூசிகளை காலத்தோடு போட்டுக் கொள்ள வேண்டும்.

● வி. கௌரி, சீர்காழி.

? புற்று நோய்க்கும், ரத்தப் புற்று நோய்க்கும் வித்தியாசம் உண்டா, டாக்டர்?

! புற்றுநோய் என்பது பொதுவான பெயர். ரத்தப் புற்றுநோய் அதில் ஒரு வகை. புற்று நோய் நம் உடலில் உள்ள எந்த அணுக்களையும் தாக்கலாம். ரத்தப் புற்றுநோய் ரத்த அணுக்களில் மட்டும் ஏற்படுவது. புற்றுநோயின் வகையைப் பொறுத்து உடலில் அறிகுறிகள் தோன்றுவது வேறுபடும்; பரிசோதனை முறைகள் வித்தியாசப்படும்; சிகிச்சை மற்றும் நிவாரணம் எல்லாமே மாறுபடும்.



● சி. சுமதி, ஈரோடு.

? இருமல் வந்தால் பெரியவர்கள் யாராவது நினைத்துக் கொள்கிறார்கள் என்று வீட்டில் கூறுகிறார்கள். இது சரியா?

! இல்லை, சுமதி. காலங்காலமாக இருந்து வரும் ஒரு மூடநம்பிக்கை இது. அறிவியல் யுகத்தில் வாழ்கின்ற நீ இதையெல்லாம் நம்பக் கூடாது. உடலியங்குயியல்படி நமக்கு இருமல் எப்படி வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ள அடுத்த கேள்வி-பதிலைப் படி.

● கோ. ஆனந்தன், சோழன்மாளிகை.

? இருமல் எதனால், எப்படி வருகிறது?

! சாதாரணமாக இருமல் என்பது ஒரு தற்காப்பு அனிச்சைச் செயல்: பல சமயங்களில் ஏதாவது ஒரு நோயின் அறிகுறியாகவும் இது ஏற்படும். தேவையற்ற ஓர் அந்நியப் பொருள் மூச்சுக் குழல், மூச்சுக் கிளைக் குழல் வழியாக நுரையீரலுக்குள் நுழைந்து விட்டால் அதை அகற்றுவதற்காக இருமல் வரும். உதாரணமாக உணவு உண்ணும் போது சோற்றுப்பருக்கை மூச்சுக் குழலுக்குள் சென்று விட்டால் உடனே இருமல் வந்து விடுவதைப் பார்த்திருப்பாயே! இதுபோல் தொண்டை, மூச்சுக்குழல், நுரையீரல் இவற்றில் புண் அல்லது சளி ஏற்பட்டு விட்டால் இருமல் வரும். அதாவது நம் சுவாசப்பாதை அந்நியப் பொருளால் பாதிக்கப்படுவதை நமக்குத் தெரிவித்து அதை வெளிப்படுத்த இருமல் உதவுகிறது. சாதாரண ஜலதோசத்தில் துவங்கி காச நோய் நிமோனியா, ஆஸ்துமா, நுரையீரல் புற்று நோய் போன்ற ஆபத்தான நோய்கள் வரைக்கும் ஆரம்ப அறிகுறி இருமலாகத்தான் இருக்கும். ஆக, இருமல் எதனால் வருகிறது என்பது இப்போது உனக்குப் புரிந்திருக்கும். சரி, இருமல் எப்படி வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறாயல்லவா? இதோ அதற்குரிய விளக்கம்... நம் மூளைத் தண்டில் 'இருமல் மையம்' என்று ஒரு பகுதி உள்ளது. சுவாசப் பாதையில் அந்நியப் பொருள் நுழைந்ததும் இந்த இருமல் மையம் தூண்டப்படுகிறது. உடனே அங்கிருந்து தொண்டைக்கும், நுரையீரலுக்கும் 'ஆணை' கிளம்புகிறது, 'அந்நியப் பொருளை விரட்டு' என்று. இதன் விளைவாக நுரையீரலின் உள்காற்று அழுத்தம் பெற்று மிக வேகமாக வெளியேறுகிறது. அப்போது ஏற்படும் சத்தம்தான் லொக்...லொக்... லொக்....! இருமல்!



டாக்டர் கு. கணேசன்



மரக் கன்று!

மு. நடராசன்

வகுப்பாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்த போது ஒரு சுற்றறிக்கையுடன் உள்ளே நுழைந்தார் பள்ளி ஊழியர்.

"நவம்பர் 14 நேரு பிறந்த நாளை முன்னிட்டு நாளை பள்ளிக்கு விடுமுறை" சுற்றறிக்கையை வாசித்ததும் மாணவர்கள் முகத்தில் சந்தோஷம்.

"நானும், நேரு மாமாவின் பிறந்த நாளை முன்னிட்டு உங்களுக்காக ஒரு புதிய திட்டத்தை வகுத்து வைத்துள்ளேன்" என்று சொல்லி நிறுத்தினார் வகுப்பாசிரியர்.

மாணவர்கள் ஆர்வமாய் ஆசிரியரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

"நமது வேளாண் துறையிடமிருந்து கொஞ்சம் மரக் கன்றுகளை வாங்கி வர ஏற்பாடு செய்துள்ளேன். இன்று மாலை அவை கிடைத்து விடும். நீங்கள் அனைவரும் நாளை காலை ஒன்பது மணிக்கு இங்கு வந்து விடுங்கள். இரண்டு பேருக்கு ஒரு மரக்கன்று வீதம் ஒதுக்கீடு செய்யப்படும். அந்த மரக்கன்றை பராமரிக்கும் பொறுப்பு அவர்களுடையது. நன்றாகப் பராமரிக்கப்படும் மரக்கன்றின் பொறுப்பாளர்கட்கு ஆண்டு விழாவில் பரிசுகள் வழங்கவும ஏற்பாடு செய்துள்ளேன்" என்று கூறி முடித்தார் ஆசிரியர்.

தனது நண்பர்களை அழைத்துக் கொண்டு பள்ளி விளையாட்டுத் திடலில் இருந்த மரத்தடியில் வந்து அமர்ந்தான் முத்து.

"என்னடா இந்த வகுப்பாசிரியர், புதிய திட்டம் அது இதுன்னு ஏதேதோ சொல்லிட்டுப் போறார். ஒரு விடுமுறை நாளை மகிழ்ச்சியாய் அனுபவிக்க விடாமல் இது என்ன தொல்லை?" என்று வெறுப்பாய் பேசினான் சுந்தர்.


"ஆமாண்டா, அவருக்கு வேற வேலையே கிடையாதுடா. பள்ளியில் கிடைக்கிற ஓய்வு நேரத்தில் அனைவரையும் மைதானத்திற்கு அழைத்து வந்து குப்பை பொறுக்கச் சொல்றார். மாணவர்கள் கையில் துடைப்பத்தைக் கொடுத்து வகுப்பறையைச் சுத்தம் செய்யச் சொல்றார். இதுல நாம தாண்டா அடிக்கடி மாட்டிக்கறோம். ஒரே அசிங்கமா இருக்குடா. இதுக்கு ஒரு முடிவே இல்லையா?" கோபமாய்க் கேட்டான் மூர்த்தி.

"குப்பை பொறுக்கவும், மரம் நட்டு வளர்க்கவுமாடா நம்மைப் பள்ளிக்கு அனுப்பினாங்க. நாம மரம் வளர்க்க, எவனோ நிழலை அனுபவிக்கப் போறான். இது நமக்கு தேவையாடா?" – இது முருகன்.

"டேய் சும்மா இருங்கடா. நாளைக்கு

மரக் கன்றுகள் இருந்தாதானே மரம் நடு வாங்க. கன்றுகளையே இல்லாம பண்ணிட்டா...!" - புதிர் போட்டான் முத்து.

"அது எப்படிடா? கன்றுகள்தான் வந்து சேர்ந்து விட்டதே. அதோ தலைமையாசிரியர் அறைக்கு முன் அழகாக அடுக்கி வைத்திருக்கிறார்களே நீ பார்க்கலையா?'' என்று கேட்ட சுந்தரைப் பார்த்து சிரித்துக் கொண்டே, "நாளைக்குத் தானேடா நடப் போறாங்க. என்ன நடக்குதுன்னு காலைல பாரு'' என்று சொல்லி விட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாகப் போய் விட்டான் முத்து.



மறுநாள் காலை, ஆசிரியரின் சொல்படி செடிகளுக்கு நீரூற்றுவதற்காக அதிகாலையிலேயே பள்ளிக்கு வந்த வகுப்புத் தலைவன் ரமணிக்கும் அசோக்கிற்கும் தூக்கிவாரிப் போட்டது. செடிகள் அனைத்தும் பிடுங்கி கசக்கி எறியப்பட்டிருந்தன. பாலிதீன் பைகள் காலால் நசுக்கப்பட்டு அந்த இடமே அலங்கோலமாய் இருந்தது!

மனது படபடப்பாய் இருந்தது இருவருக்கும். என்ன செய்வதென்றே புரியவில்லை. இந்தக் கன்றுகளை வாங்கி வர ஆசிரியர் எவ்வளவு சிரமப்பட்டார். அவரின் நல்ல மனதுக்கு இப்படி ஒரு வேதனையா?

இது எப்படி நடந்திருக்கும் என்பதை வகுப்புத் தலைவனான ரமணியால் ஓரளவு யூகிக்க முடிந்ததென்றாலும், தற்போது ஏதாவது செய்தாக வேண்டுமே என்று யோசித்தான். அந்த நேரத்தில்தான் கணேஷும் அகமதுவும் அங்கு வந்து சேர்ந்தனர்.

அகமதைப் பார்த்ததும் திடீரென ஓர் எண்ணம் பளிச்சிட்டது ரமணிக்கு.

"அகமது உனது உறவினர் ஒருவர் வேளாண்துறையில் வேலை செய்வதாகச் சொன்னியே?"

"ஆமாம்! அதற்கென்ன இப்ப?"

"வாடா. அவரைப் போய்ப் பார்த்து, இந்த நிலையை விளக்கிச் சொல்லி, ஏதாவது உதவி கேட்போம். கட்டாயம் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு" என்று அவசரப்படுத்தவே உடன் புறப்பட்டு விட்டான் அகமது.

அங்கு இருந்த அசோக், பீட்டர் மற்றும் நண்பர்கள் சுறுசுறுப்பானார்கள். இறைந்து கிடந்தவற்றுள் நல்ல நிலையில்

இருந்த செடிகளை எடுத்து ஒழுங்குபடுத்தி, அந்த இடத்தைச் சுத்தம் செய்தனர்.

சரியாக ஒன்பது மணிக்கெல்லாம் வந்து விட்டார் ஆசிரியர். நடந்ததை மாணவர்கள் சொல்லக் கேட்ட போது சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது அவருக்கு.

ரமணியும் அகமதுவும் சற்றுத் தூரத்தில் வருவது தெரியவே, "அதோ வந்துட்டாங்க சார்" மகிழ்ச்சியில் கத்தினான் அசோக்.

ஆம், அகமதுவின் உறவினரிடம் நயமாக, வற்புறுத்திக் கேட்டு தேவையான மரக்கன்றுகளைப் பெற்றுக் கொண்டு முகத்தில் மகிழ்ச்சி பொங்க அங்கு வந்து சேர்ந்தனர்.

சமயோசிதமாய்ச் செயல்பட்ட அவர்களை வெகுவாகப் பாராட்டினார் ஆசிரியர்.

முதல் கன்றை அகமது, ரமணி பொறுப்பிலேயே விட்டு நடச் சொன்னார். அவர்கள் முதல் கன்றை நட்டு திட்டத்தைத் துவங்க, மற்ற மாணவர்கள் தங்களின் கன்றுகளை நட்டு, நீரூற்றி, வேலி கட்ட அந்த இடமே விழாக் கோலம் பூண்டது!

"சார்... சார்... நம்ம முத்துவை போலீசில் பிடிச்சி வச்சிருக்காங்க சார்" படபடப்பாய்ச் செய்தியைச் சொன்னார்கள் தாமதமாய், அங்கு வந்த வாசுவும் பாலுவும்.

"என்னடா விஷயம்?" என்று ஆசிரியர் கேட்க, "தெரியலை சார், நாங்க பள்ளிக்கு வந்து கொண்டிருந்தபோது முத்துவின் அப்பா காவல் நிலையத்துக்குப் போய்க் கொண்டிருந்தார். அவர் சொல்லித்தான் சார் எங்களுக்குத் தெரியும்" என்றனர்.

ரமணியை மட்டும் உடன் அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்று காவல் துறை அதிகாரியிடம் முத்துவைப் பற்றி விசாரித்தார் ஆசிரியர்.

"ஓ.... அந்தப் பையனா. உங்க மாணவன்தானா அவன்! ஒன்னுமில்லை சார். நேற்று இரவு உங்கள் பள்ளியிலிருந்து சுவரேறிக் குதித்து ஓடியிருக்கிறான். அந்த நேரம் ரோந்துப் பணியில் இருந்த காவலர் சந்தேகப்பட்டு பிடித்து வந்து வைத்திருக்கிறார்" என்று விளக்கினார்.

நடந்தது என்ன என்பதை தெளிவாய் யூகித்துக் கொண்டார் ஆசிரியர்.

முத்து தன்னுடைய மாணவன்தான் என்றும், இனி அவன் நன்னடத்தைக்கு தான் பொறுப்பு என்றும், இந்த ஒருமுறை அவனை மன்னித்து விடும்படியும் காவலரிடம் உறுதி கூறி முத்துவை அழைத்துக் கொண்டு வெளியே வந்தார் ஆசிரியர்.

எந்த ஆசிரியர் மீது வெறுப்புக் கொண்டு அந்தக் காரியத்தைச் செய்தோமோ, அந்த ஆசிரியரே சிரமம் எடுத்துக் கொண்டு வந்து, தன்னை விடுவித்ததை நினைத்து அவமான உணர்ச்சியால் குன்றிப் போனான் முத்து. ஆசிரியரின் முகத்தைப் பார்ப்பதற்கே அவனுக்கு வெட்கமாயிருந்தது.

அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.




ஆதிரட் என்ற கிறிஸ்துவ மதகுரு 1631-ல் முதல் முறையாக பெருக்கலுக்கு X குறியைப் பயன்படுத்தினார். இவர்தான் முக்கோணத்தின் பக்கங்களுக்கும் கோணங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பைக் குறிக்கச் சுருக்கமாக சைன், காஸ் மற்றும் டேன் என்னும் வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.

ஆதாரம் : அறிவியல் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அறிஞர்கள்
தகவல் : நெ. இராமன், சென்னை - 74.

2 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

படம் : லலிதா, அமைப்பு : விஜி






மீன் தாக்க வருது. கப்பலை சீக்கிரமா நகர்த்துங்க!
இன்னும் சிலர் கப்பலில் ஏறலையே!
வேறு வழி இல்லை!
கப்பல் சென்றது –
பாவிங்க... விட்டுட்டுப் போயிடாங்களே... ஐயோ! என்ன செய்வது?
சிந்துபாத்திற்கு பயம் வந்தது.
ஐயோ மீன் தண்ணீருக்குள் செல்கிறதே....


இந்த ராட்சஸ அலைகள் திருப்பி உள்ளே அமுக்கிடும் போலிருக்கே...
நீண்ட போராட்டத்துக்குப் பின்...
ஏதோ மிதந்து வருதே....!
ஆ! பெரிய மரக்கிளை. இதை வைத்து நீந்த வேண்டியதுதான்!
மரக்கிளையில் அமர்ந்த சிந்துபாத் நினைவிழந்தான்.


இரண்டு நாட்கள் சென்றன. சிந்துபாத் ஒரு தீவில் ஒதுங்கி இருந்தான்.
கண் விழித்த சிந்துபாத் –
நான் உயிரோடுதான் இருக்கேனா?
மெதுவாக எழுந்து நின்றான்.
பசி பயங்கரமா இருக்கே...! ஏதேனும் சாப்பிடணும்.
சுற்றும் முற்றும் பார்த்தான்.
ம்ம்ம்... ஒரு கை பார்க்க வேண்டியது தான்.
சாப்பிட்ட பின் தெம்பாக நடக்க ஆரம்பித்தான்... அப்போது....

தொடரும்



வாழ்த்து அட்டை செய்யுங்கள்!



இது ஒரு வித்தியாசமான வாழ்த்து அட்டை. செய்வதற்கு பொறுமையும் நேரமும் தேவை.

என்னென்ன தேவை?

1. அரச இலைகள்
2. வாட்டர் கலர் அல்லது ஆயில் பெயிண்ட்
3. ஸ்கெட்ச் பேனாக்கள்
4. கறுப்பு, சிவப்பு போன்ற சின்ன அட்டைகள்
5. பசை

எப்படி செய்வது?

1. முதலில் அரச இலைகளை கொதித்த நீரில் போட்டு மூடி வைக்கவும். பெற்றோர் உதவியை நாடுங்கள். கவனம் தேவை.

2. 4 அல்லது 5 நாட்கள் கழித்து இலைகளை எடுத்து மெதுவாக கழுவுங்கள். இலைகளிலுள்ள பச்சையம் நீங்கி நரம்பு மட்டும் தெரியும்.


3. பச்சையம் முழுவதும் நீங்கிய பின் நரம்பு இலைகளைக் காய வையுங்கள்.

4. பிறகு நரம்பு இலைகளை எடுத்து ஸ்கெட்ச் பேனாவால் மெதுவாக உங்களுக்குப் பிடித்த படத்தை வரையுங்கள்.

5. நீங்கள் வரைந்த படத்திற்கு மேல் பொருத்தமான வண்ணங்களை இடுங்கள்.

6. வண்ணம் காய்ந்தவுடன் வண்ண அட்டையில் இலையை ஒட்டுங்கள். இதோ அருமையான வாழ்த்து அட்டை தயார்.

உங்கள் நண்பர்களுக்கு, உறவினர்களுக்கு நீங்களே தயாரித்த இலை ஓவியத்தை புத்தாண்டு வாழ்த்தாக அனுப்புங்கள்.





விண்கற்கள் விழுவது ஏன்?

நவம்பர் மாதம் 18, 19 தேதிகளில் உலகின் கவனத்தை ஈர்த்துக் கொண்டவை விண்கற்கள்தான்!

விண்கற்கள் எப்படி உருவாகின்றன? நமது சூரிய குடும்பத்தில் செவ்வாய் கிரகத்திற்கும் வியாழன் கிரகத்திற்கும் இடையில் 'அஸ்டிராய்டுகள்'என்ற விண்கற்களின் குழுமம் உள்ளன. அவைகளும் சூரியனைச் சுற்றி வந்து கொண்டுள்ளன. அவற்றில் சில சூரியனின் ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்பட்டு அவ்வப்போது சுற்றுப் பாதையிலிருந்து விலகி சூரியனை நோக்கி வருகின்றன. அவை பூமியைத் தாண்டும் போது பூமியின் ஈர்ப்புவிசையால் ஈர்க்கப்பட்டு பூமியின் காற்று மண்டலத்தில் நுழைகின்றன. அப்போது உராய்வினால் எரிந்து ஒளிர்கின்றன. இதையே "வானில் வாணவேடிக்கை" என்றனர்.

இவை தவிர சூரியனைச் சுற்றி வரும் வால் நட்சத்திரங்கள் பூமிக்கு அருகில் வந்து செல்லும்போது, தூசு, துகள்களை விட்டுச் செல்கின்றன. அவ்வாறு விட்டுச் சென்ற துகள்கள் எப்போதாவது பூமியின் சுற்றுப்பாதையைக் கடக்க நேர்ந்தால் புவி ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்பட்டு, எரி நட்சத்திரமாக விழுகின்றன.

விண்கற்களின் வேகம் நொடிக்கு 42 கி.மீ. இவ்வளவு வேகத்துடன் பூமியின் வாயு மண்டலத்துக்குள் நுழையும் விண்கற்கள் காற்றுடன் உராய்ந்து மிகவும் சூடாகி தீப்பற்றிக் கொள்கின்றன. இதைத் தான் நாம் விண்கல் பொழிவு என்கிறோம்.

சாதாரணமாக நாம் காணும் 'எரி நட்சத்திரம்' ஒரு விண்கல் தான்!

இந்த விண்கற்கள் பொழிவினால் நமக்கு ஏதும் ஆபத்து ஏற்படுமோ என்று நீங்கள் அஞ்சத் தேவையில்லை. பெரும்பாலான விண்கற்கள் வாயு மண்டலத்திலேயே முழுவதுமாய் எரிந்து விடுகின்றன. இதனால் நமக்கு ஆபத்து இல்லை.

ஆனால் சில பிரமாண்டமான விண்கற்கள் முழுவதும் எரிந்து விடாமல் அதிக

வேகத்துடன், மிகுந்த ஒளி வீசி பெரிய சத்தத்துடன் பூமியில் விழுவதுண்டு. இது மிகவும் அரிதாகவே நடைபெறும்.

அப்படியே பூமியில் விழுந்தாலும் இது வரை கடல், காடுகள் போன்ற மக்கள் வசிக்காத பகுதிகளிலேயே விழுந்துள்ளன.

அமெரிக்காவில் உள்ள அரிசோனா பாலைவனத்திலும் சைபீரியாவில் உள்ள காட்டிலும் இத்தகைய பெரிய விண் கற்கள் விழுந்திருக்கின்றன. விண் கற்கள் விழுந்த இவ்விரு இடங்களிலும் மிகப் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது.

ஒருமுறை இல்லினாய்ஸ் என்ற இடத்தில் உள்ள வீட்டின் கார் நிறுத்தும் கூடத்தில் முட்டை அளவு விண் கல் ஒன்று விழுந்தது. ஷெட்டின் மேற் கூரை, காரின் மேற்புறம், இருக்கை மற்றும் அடிப் புறத்தையும் துளைத்து விழுந்தது. இந்த வீட்டின் சொந்தக்காரர், கார் மற்றும் விண்கல்லின் புகைப் படங்கள் வானியல் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

சமீபத்தில் பெரிதும் பேசப்பட்டு, எதிர் பார்ப்பை உருவாக்கிய விண் கற்களின் பொழிவு, டெம்பிள்-டட்டில் என்ற வால் நட்சத்திரத்தின் வால் பகுதி விட்டுச் சென்ற துகள்களிலிருந்து பூமியில் விழுந் துள்ளவைதான். தாய்லாந்து நாட்டில் பிர காசமாகத் தெரிந்துள்ளது. அந்நாட்டு மக்கள் மலைகளில் ஏறி விண்கற்கள் பொழிவை ரசித்ததுடன் வணங்கவும் செய்தனர்.

உலகின் பல இடங்களிலும் இந்த விண்கற்கள் பொழிவை மக்கள் மிகுந்த ஆரவாரத்துடன் ரசித்தனர்.

இந்த விண்கற் பொழிவு கிட்டத்தட்ட 33 ஆண்டுகளுக்கொருமுறை நிகழும். டெம்பிள்-டட்டில் என்ற இந்த வால் நட்சத்திரம் 33 ஆண்டுகளுக் கொருதரம் பூமியின் சுற்றுப் பாதையைக் கடப்பதே இதன் காரணம்!

எதிர்பார்ப்பை உருவாக்கிய விண் கல்பொழிவு கடைசியில் ஏமாற்றமாகத் தான் முடிந்தது. இந்தியாவில் யாரும் இதை சரியாகப் பார்க்க முடியவில்லை. அடுத்த முறையாவது வாய்ப்பு கிட்டுமா பார்க்கலாம். ஆம்! ஏறக்குறைய கி.பி.2030 வாக்கில் மீண்டும் இந்த அதிசயம் நிகழும்.

— விஜு

என்ன பழமொழி? — போட்டி முடிவு

இப் போட்டியில் ஏராளமான வாச கர்கள் கலந்து கொண்டனர். பெரும் பாலானோர் சரியான விடைகளையே எழுதியிருப்பதால் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்கப்பட் டார்கள்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. பி. நாதராணி, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்
2. எம். பூபதிராஜ், சதுமுகை, ஈரோடு மாவட்டம்
3. வி. பூர்ணிமா, ஆம்பூர்பேட்டை, வாணியம்பாடி
4. எஸ். செல்வகணேஷ், பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம்
5. ஈ. பாகீரதி, இராஜபாளையம்
6. கோ. திருவேங்கடம், தாத்தியம்பட்டி, சேலம் மாவட்டம்
7. என். அன்றன் அமலா நேருஜி, இடிந்தகரை, திருநெல்வேலி மாவட்டம்
8. எஸ். செந்தில் முருகன், கொள்ளாம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்
9. ஜெ. அனிதா, முதலியார்பேட்டை, பாண்டிச்சேரி
10. சி. கண்ணன், செல்லூர், மதுரை
11. மு. மஞ்சுளா, கிழாய், மணல்மேடு, நாகை மாவட்டம்
12. அ. பிரசன்னா, உடுமலைப்பேட்டை, கோவை மாவட்டம்
13. எஸ். பெர்னோலின் பிரபு, கருமவிளை, கன்னியாகுமரி மாவட்டம்
14. அ. சரஸ்வதி, கோபாலபுரம், நீர்விளங்குளம்
15. அ. தில்லை ஆனந்த், சென்னை

சரியான விடை

வெய்யிலின் அருமை நிழலில் தெரியும்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

உபமன்யுவின் உறுதி!

இரவில் மரமேறி வில்வதளங்களைப் பறிக்க வேண்டும் என்பதற்காக சிவபெருமானை வேண்டி, புலி நகங்களைப் பெற்று அதன் காரணமாக வியாக்ர பாதர் என்று பெயர் பெற்ற முனிவருக்கு சந்தான பாக்கியம் இல்லை. அவரது மனைவி வசிஷ்டரின் சகோதரி. இருவரும் சிவனை நோக்கித் தவம் செய்ய சிவ பெருமான் அருளால் பிறந்த குழந்தைக்கு உபமன்யு என்று பெயர் சூட்டினர்.

குழந்தை இரண்டு வயது வரை வசிஷ்டர் ஆசிரமத்திலுள்ள காம தேனுவின் பாலைக் குடித்து வளர்ந்தது. அந்தப் பழக்கத்தில் வேறு மாட்டின் பால் அதற்குப் பிடிக்கவில்லை! சதா அழுது கொண்டிருந்தது.

கடைசியில் தாயார் கோபத்துடன், "சிவ பெருமானை நோக்கித் தவம் செய்து காம தேனுவைப் பெற்றுக் கொள்" என்று கூறினார்.

குழந்தை அதை வேதவாக்காகக் கொண்டு காட்டிற்குச் சென்று கடும் தவம் செய்தது.

பரமசிவன் இந்திரன் வடிவில் உபமன்யு எதிரில் தோன்றினார்.

"குழந்தாய்! நீ யார்? உன் பெயரென்ன? எதற்காக, யாரை நோக்கித் தவமிருக்கிறாய்?" என்று அன்புடன் கேட்டார்.

தவம் கலைந்து விழித்த சிறுவன் "ஐயா!




என் பெயர் உபமன்யு. வசிஷ்டரின் சகோதரி மகன். வியாக்ர பாதரின் குமாரன். திருப்பாற் கடலைப் பெற வேண்டி கைலைநாதனை நோக்கித் தவமிருக்கிறேன்'' என்றான்.

இந்திரன் வடிவில் இருந்த பரமசிவன் சிரித்தார். உபமன்யுவை சோதிக்க நினைத்தார்.

''உபமன்யு! உன் கைலாசநாதன் ஒரு ஆண்டிப் பண்டாரம். அவரது வாகனமோ காளை மாடு. போட்டுக் கொள்ள நகை இல்லாமல் எலும்பு மாலை அணிந்து கொண்டிருக்கிறார். சந்தனம் பூச வக்கில்லாமல் சாம்பலைப் பூசிக் கொள்கிறார். கையில் ஏந்தியிருப்பது மண்டை ஓடு. பட்டாடை அணிய வக்கில்லாமல் மிருகங்களின் தோலை உடுத்திக் கொண்டிருக்கிறார். இருக்க இடமில்லாமல்தானே சுடுகாட்டில் அலைகிறார்? தனக்கே வகை இல்லாதவர் உனக்கென்ன தரப் போகிறார்?'' என்றார்.

உபமன்யுவுக்குக் கட்டுக்கடங்காத



கோபம் வந்து விட்டது. அகோராஸ்திரத்தை ஜபித்து, திருநீற்றை வாரி இறைத்து, "சிவனை நிந்தித்த பாவி! ஒழிந்து போ" என்று உறுமினான்.

நந்தி சடாரென்று அவர்களிடையே குதித்து அகோரா ஸ்திரத்தைத் தடுத்தார். "உபமன்யு! நீ யாரை நோக்கித் தவமிருந்தாயோ அந்த சிவன் மீதே போர் தொடுக்கிறாய்" என்று கூறினார்.

அப்போதுதான் இந்திரன் வடிவில் தன்னைச் சோதிக்க வந்தது பரமசிவன் என்பதை உணர்ந்து கொண்டான் உபமன்யு.

'பாதகம் செய்து விட்டேனே' என்று அழுதான். எவர் தடுத்தும் கேளாமல் தீமூட்டி அதில் குதிக்க முனைந்தான்.

பரமசிவன் அம்பிகையோடு ரிஷப வாகனத்தில் தோன்றி உபமன்யுவைத் தடுத்தார்.

"பார்வதி! உபமன்யு திருப்பாற்கடலைக் கேட்கிறான். மகாவிஷ்ணு கிருஷ்ணாவதாரம் எடுத்திருக்கிறார். அவரது சயனக் கிரகம் திருப்பாற்கடல். அந்தத் திருப்பாற் கடலுக் குரியவருக்கே இவன் உபதேசம் செய்யப் போகிறான்! ஜாம்பவதி என்ற தன் மனைவிக்குப் புத்திரப் பேறு வேண்டி இவனிடம் வருவார் கண்ணன். அவருக்கு பஞ்சாட்சர மந்திரோபதேசம் செய்தபின் திருப்பாற் கடலிலேயே இவன் வாழ்ந்திருப்பான்" என்றார்.

பார்வதியும் உபமன்யுவைத் தழுவி எடுத்து, "உபமன்யு! சிவனாரின் அன்பைப் பெற்ற நீ பாக்கியசாலி. உன் மாமாவான வசிஷ்டரிடம் கேட்டு சிவபெருமான் மகிமையைத் தெரிந்து கொள்" என்று ஆசிர்வதித்தார். இருவரும் மறைந்தார்கள்.


அதற்குள் மருமகனைத் தேடிக் கொண்டு அங்கே வந்த வசிஷ்டர், "உபமன்யு! லட்சியத்தை அடைவதில் நீ கொண்ட உறுதியைப் பாராட்டுகிறேன்" என்று வாழ்த்தி விட்டு ஒரு கதை கூறினார்:

சித்திராதன் என்ற அரசன் இந்திரனையே ஜெயித்தவன். அழகிய குணமுள்ள மனைவி. பெற்றோர் குறிப்பறிந்து நடக்கும் பிள்ளைகள். இப்படி அனைத்துப் பேறுகளையும் பெற அவன் தனது முற்பிறவியில் செய்த புண்ணியம் என்ன தெரியுமா?

அவந்தி நாடு மழையில்லாமல் வறண்டிருந்தது. அரசன் தர்மபாலன் அன்னக் கொடி கட்டி அனைவரையும் பசியின்றிக் காத்தான். ஆனால் சித்திராதன் (முன்பிறவியில்) மிக ஏழையாய் பிறந்திருந்தாலும் நேர்மை நெறி தவறாது வாழ்ந்தான். வானம் பொய்த்தாலும் உழைத்தே பிழைக்க வேண்டும் என்ற உறுதி கொண்டிருந்தான். அதனால் காட்டிற்குச் சென்று விறகு வெட்டி விற்று, அதில் வரும் வருவாயில் வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் விறகு வெட்டிக் கொண்டு வரும் போது வழியில் மழை வேண்டி சில வேதியர்கள் ஹோமம் நடத்தினர். அந்த ஹோமத்துக்கு அந்த நிலையிலும் தனது உபயமாக விறகுக் கட்டைக் கொடுத்தான் வறியவன். அன்று முழுவதும் அவன் குடும்பத்தினர் பட்டினியாக இருந்தனர். அன்றே அவனது காலமும் முடிந்தது.


உழைத்துப் பிழைக்க வேண்டும் என்ற உறுதியும் தரித்திர நிலையிலும் செய்த தானமும் அவனை ராஜாதி ராஜனாக்கியது. எவ்வளவு தருமம் செய்கிறோம் என்பது முக்கியமல்ல! இதயபூர்வமாகத் தரும் எளிய தானத்துக்கு மகிமை அதிகம். அதேபோல் சிவ பெருமானைப் பார்க்க வேண்டும் என்ற உன் உறுதி, அவரைத் தூஷித்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாத உன் பக்தி இதெல்லாம்தான் இன்று உன்னை கிருஷ்ணருக்கே உபதேசம் செய்யும் தகுதியைப் பெறச் செய்திருக்கிறது. திருப்பாற்கடலில் வாழ்ந்து தவம் செய்யும் பேறு சாதாரணமானதா? உன்னால் உன் குலமே பெருமை பெற்றது" என்று வாழ்த்தி மருமகனைக் கட்டித் தழுவினார். கூடி இருந்த அனைவரும் உபமன்யுவைக் கொண்டாடினர்.



"நேத்து பாலு வீட்லே சாப்பிட்ட சேமியா உப்புமா சரியா சீரணமா கலை!"

"அப்போ செரியா உப்புமான்னு சொல்லு!"

— நெ. இராமன்



கம்பிக்குள் செல்லும் கள்வனை கண்ணால் காண இயலாது!

1. ஆள் இறங்காத ஆழத்திலே
ஆடு இறங்கி கூத்தாடுது!
2. ஒட்டியிருந்த மகனை
விட்டுப் பிரிந்து வந்தேனே!
3. கடலில் வளர்வேன்
மழையில் மடிவேன்.
4. ஐந்து தலைப் பாம்பு
அதன் வாயெல்லாம் நெருப்பு!

சத்ய நாராயணன்,
ஒன்பதாம் வகுப்பு,
வியோ மெட்ரிகுலேஷன்
மேல்நிலைப்பள்ளி, சென்னை

> **விடை: 1. கிணறு – கயிறு – வாளி, 2. உமி – நெல், 3. உப்பு, 4. குத்து விளக்கு**

1. சிவந்தால் விழுவான், விழுந்தால் மணப்பான். அது என்ன?

2. ஆமை ஓடு, வெள்ளை வீடு, உள்ளே கறுப்பு மனிதன் அது என்ன?

3. எண்ணெய்யும் வேண்டாம், திரியும் வேண்டாம். தொட்டால் ஒளி தருவேன். நான் யார்?

பி. செங்கோட்டையன்,
வி.என். பாளையம்,
வெற்றிலைத் தோட்டம்.

> **விடை: 1. பனம்பழம், 2. சீதாப்பழம், 3. மின்சார விளக்கு**

1. கம்பிக்குள் செல்லும் கள்வனை கண்ணால் காண இயலாது – அவன் யார்?

2. ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம் அது என்ன?

3. தீயிலிருந்து உண்டாகும். நமக்கு எரிச்சல் உண்டாக்கும். – அது என்ன?

து. கார்த்திகேயன், பதினோராம் வகுப்பு,
நாடார் மேல்நிலைப்பள்ளி, கோவில்பட்டி.

> **1. மின்சாரம், 2.கை, 3. புகை**

1. ஓட்டு வீட்டிலே ஓட்டை ஏழு.
2. இரு புறமும் பாதை இடையிலே தூண்.
3. நீரில் வாழும் மீனல்ல; கொம்புண்டு மாடல்ல.
4.மாளிகை உள்ளே முத்துச் சிப்பிகள்.

சிவபெருமாள்,
சின்மயா வித்யாலயா,
திருவனந்தபுரம்

> **விடை: 1. தலை, 2. மூக்கு, 3. நத்தை, 4. பற்கள்.**

1. ஈரேழாம் பதினாலாஞ் சோலை
இருபுறமும் தச்சருடைய வேலை அது என்ன?
2. கோணக் கோணப் புளியாங்காய்
கொங்கு நாட்டுப் புளியாங்காய்
உங்க நாட்டிலிருந்து எங்க நாட்டுக்கு வருது. அது என்ன?
3. தண்ணீருக்குள் இருக்கும் மரம்.
சத்தத்தைக் கொடுக்கும் மரம்.
அது என்ன?
4. வட்ட வட்டக் குளத்திலே
வட்ட மீன் மிதக்குது.
ஆசையோடு எடுக்கலாம்,
கிள்ளி கிள்ளி திங்கலாம்.
அது என்ன?

இரா. செண்பகப் பூங்குழலி,
ஏழாம் வகுப்பு,
செயிண்ட் பிரான்சிஸ் ஆங்கிலோ
இந்தியப் பள்ளி, கோவை – 18

> **விடை: 1. பல்லாங்குழி, 2. சாலை, 3. நாக்கு, 4. வடை**



வானில் சிறு கிளைடர் விமானம் போல் வட்டமிடும் பறவையைப் பார்த்திருக்கிறீர்களா? இந்தப் பறவையை அருகில் பார்க்கும் வாய்ப்பு அபூர்வமாகத்தான் கிடைக்கும். டீ.வி நிகழ்ச்சிகளில் கண்டு களித்திருக்கலாம்.

இதுவே நம்மால் கருடன், பருந்து என்று அழைக்கப்படும் கழுகு. இது மிகவும் வேகமாகப் பறக்கக் கூடியது. கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளிப்பது. இதைப் பறவைகளின் அரசன் என அழைக்கிறார்கள்.

கழுகுகள் ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. உலகின் மற்றப் பகுதிகளிலும் வாழ்கின்றன. இவற்றில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன.

பிரௌன், மஞ்சள், வெள்ளை மற்றும் கறுப்பு நிறத்தோடு காட்சி தரும் கழுகுகளுக்கு உறுதியான பாதங்களும் சக்தி வாய்ந்த அலகும் உள்ளது. இந்த உறுதிதான் கழுகை பறவைகளின் அரசனாக்கியது.

கழுகின் இறக்கைகள் 2.3 மீட்டர் நீளமுடையவை. இறக்கையும் வால் இறகும் வேகமாகப் பறப்பதற்கு பேருதவி



புரிகின்றன.

இரையைப் பிடிக்கும்போது இவற்றின் வேகம் அதிகம். மிக உயரமான இடத்திலிருந்து இரையைத் தன் கூர்மையான

எஸ். சுஜாதா

கம்பீரமான பறவை

பார்வையால் கவனித்துக் கொண்டேயிருக்கும். தக்க தருணம் வந்தவுடன் தன் உடலை அம்பு போல் சுருக்கி வேகமாக வந்து காலால் பிடித்து தூக்கிச் சென்று விடும். இரையைப் பிடித்துச் செல்லும்போது இவற்றின் வேகம் 180 கி.மீ

பறவைகள், பாம்பு, எலி, முயல் போன்றவையே உணவு. சில நேரங்களில் நரி போன்ற பெரிய மிருகங்களையும் கொன்று சாப்பிடுவதுண்டு. இது தவிர இறந்து போன பிராணிகளையும் தமது இரையாக்கிக் கொள்கின்றன கழுகுகள். கால் விரல்களைப் பயன்படுத்தி இரையைப் பிடித்து தன் கூர்மையான அலகால் கொத்திச் சாப்பிடுகின்றன.

கழுகுகள் 100 கி.மீ தூரம் வரை தங்கள் வசிப்பிட எல்லையை நிர்ணயித்துக் கொள்கின்றன.

மிகவும் உயரமான மரங்கள், மலைகள், பாறைகளில் கூடுகளை அமைக்கின்றன. இரண்டு, மூன்று கூடுகளைக் கட்டி ஒன்றில் குஞ்சுகளும் மற்றவற்றில் தாயும் தந்தையும் தங்கிக் கொள்கின்றன.

பெண் கழுகு இளவேனிற் காலத்தில் இரண்டு முட்டைகளை இடும். முட்டைகளை எதிரிகளிடமிருந்து காப்பாற்றி அடை காக்கும். அப்போது ஆண் கழுகு வெளியில் சென்று வேட்டையாடி பெண் கழுகிற்கு உணவைக் கொண்டு வந்து கொடுக்கும்.

குஞ்சுகள் பொரிந்





மனிதர்கள் இவற்றின் கூடுகளைக் கலைத்தால் தன் குஞ்சுகளை விட்டு விட்டுப் பறந்து விடுகின்றன. கோழி, ஆடு போன்ற வளர்ப்புப் பிராணிகளைக் கழுகுகள் வேட்டையாடுவதால் மனிதர்கள் இவற்றை வேட்டையாடி வருகின்றனர்.

இவை நாற்பது ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.

சில நாடுகளின் தேசியச் சின்னமாகவும் இவை போற்றப் படுகின்றன. இருந்தாலும் இன்று அழிந்து வரக்கூடிய பிராணிகளின் பட்டியலில் கழுகும் இடம் பெற்றுள்ளது.

• கழுகுகள் உலகம் முழுவதும் பரவியுள்ளன. ஐம்பது வகைகளுக்கு மேல் காணப் படுகின்றன.

• அசைவ உண்ணிகள்

• உறுதியான வளைந்த அலகு, சக்தி வாய்ந்த கால் விரல்கள் இவைகளின் சிறப்பு அம்சங்கள்.

• மிக உயரத்தில் பறக்கும் பறவை கழுகு மட்டுமே. பறந்து கொண்டிருக்கும் போதே இரையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே இருக்கும். பார்வைச் சக்தி அதிகம்.

• ஆணும் பெண்ணும் அன்புடன் குடும்பம் நடத்தும்.

• இரண்டிற்கு மேற்பட்ட கூடுகளைக் கட்டுகின்றன. ஒன்றில் குஞ்சுகளும் மற்றவற்றில் தாயும் தந்தையும் வசிக்கின்றன.

• நாற்பது ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

தவுடன் முடிகளற்று காணப்படும். முதலில் பிறந்த குஞ்சு இரண்டாவது குஞ்சை சாப்பிட்டு விடும்! தாய், தந்தைக் கழுகுகளும் இதைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டே இருக்கும்.

ஆண் கழுகை விட பெண் கழுகுகள் எடை மிகுந்தவை. பெண் ஆறரை கிலோவும், ஆண் நான்கு கிலோவும் இருக்கும்.

பறவைகளின் அரசனாக ஜம்மென்று வலம் வரும் கழுகிற்குக் கூட பயம் உண்டு. யாரிடம் தெரியுமா? நம்மிடம்தான்!

கோகுலம் க்விஸ்

1. கழுகு இறக்கைகளின் நீளம் எவ்வளவு?
2. இரையைப் பிடித்த பின் பறக்கும் வேகம் என்ன?
3. உணவு என்னென்ன?
4. எத்தனை ஆண்டுகள் உயிர் வாழ்கின்றன?

விடை: 1. 2.3 மீட்டர், 2. 180 கி.மீ., 3. பறவைகள், பாம்பு, மீன், முயல், 4. 40 ஆண்டுகள்



புத்திசாலி இளவரசன்!

மாயாபுரி மன்னர் எதிர்பாராதவிதமாக மூன்று பேரை, ஏதோ சதிகாரணமாகக் கைது செய்து மரண தண்டனை விதித்து விட்டார். மூன்று பேரும் மிக முக்கியமானவர்கள். ஒருவர் சேனாதிபதி. இன்னொருவர் மந்திரி. மூன்றாமவர் கல்வி புகட்டும் ஆசான்.

குருகுலம் நிறுவி கல்வி புகட்டி வந்தவர் அந்த ஆசான். அங்கே இளவரசனும் கல்வி பயின்று வந்தான். அவனுக்குத் தெரியும். தனது ஆசான் நிரபராதி என்று. சேனாதிபதியும் மந்திரியும்தான் சதித் திட்டம் தீட்டியவர்கள். வேண்டுமென்றே குரு மீதும் பழிசுமத்தி விட்டனர். தனது தந்தையும் கண்மூடித்தனமாக அவசரப்பட்டுத் தண்டனை விதித்து விட்டதை எண்ணி மனம் நொந்து யோசித்தான் இளவரசன். அவனுக்கு எப்படியும் தனது குருவைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

ஒரு உபாயம் தோன்றவே மறுநாள் மாறுவேடம் பூண்டு மன்னரிடம் சென்று முறையிட்டான். மன்னன் அவன் முறையிடலுக்கு இறங்கி அவர்களில் யாரையாவது ஒருவரை விடுதலை செய்வதாகவும், அது யார் என்று அவனையே கூறும்படியும் கேட்டார்.

இளவரசன் ஆசானை விடுதலை செய்யும்படி கோரினான்.

வேந்தன் வியந்து அவரை விடுவிக்க வேண்டியதன் காரணத்தைக் கேட்டார்.

"அரசே! இந்த மந்திரி போனால் இன்னொரு மந்திரியை நியமித்துக் கொள்ளலாம். மந்திரியை விடுவித்து விட்டால், நம்மைதான் விட்டு விட்டார்களே என்று திரும்பவும் சதிசெய்யும் எண்ணம் தோன்றும். அதே போல்தான் சேனாதிபதியும். கல்வி கற்பிக்கும் ஆசான்கள் அப்படியில்லை. அவர்கள் நமக்குத் தெய்வம். அறிவு மிகுந்த சான்றோர். அவர்கள் எந்தத் தீய எண்ணமும் இல்லாதவர்கள். மேலும் வருங்கால இளைஞர்களை சான்றோராக்குபவர்கள். நம் நாட்டு ஆசானின் மீது வேண்டுமென்றே பழிசுமத்திச் சதியில் ஈடுபட்டதாகப் பொய் கூறியுள்ளனர். கண்ணால் பார்ப்பது, காதால் கேட்பது எல்லாம் பொய். தீர விசாரிப்பதே மெய். நீர் அவசரப்பட்டு தண்டனை அளித்து விட்டீர்" என்றான் மாறுவேடத்திலிருந்த இளவரசன்.

அப்போது அரசர் அருகே சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த அரசியார், "இவர் குரல் நம் மகன் குரல் போல் இருக்கிறதே" என்று கூறியபடி எழுந்து அவனருகே போனார். இளவரசன் தன்னையும் மீறி "அம்மா!" என்று கூவ, அவன் மாறுவேடம் கலைந்தது.

அரசனும் மனமகிழ்ந்து ஆசானை விடுதலை செய்தார்.

— ஏழ்வரைக்கடியான்

1999

ஜனவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

பிப்ரவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28						

மார்ச்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			



ஜூலை

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

ஆகஸ்ட்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

செப்டெம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

1999

ஏப்ரல்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

மே

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

ஜூன்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			



அக்டோபர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

நவம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

டிசம்பர்


ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

கோகுலம்

பூமி தொழும் பொங்கல்!

பொங்கல் தமிழ்ப் பொங்கல்!
பூமி தொழும் பொங்கல்!
திங்கள் தையில் ஒன்றாம்
தேதி வரும் பொங்கல்!

பொங்கும் வியர்வை மண்ணில்
பொழிந்து விளைந்து மின்னும்
தங்கச் சம்பாச் செந்நெல்
தலை வணங்கும் பொங்கல்!




செங்க ரும்பு, இஞ்சி,
செழித்த வாழை, மஞ்சள்
பங்கு பெற்றுக் கொஞ்சும்
பசுமைப் புரட்சிப் பொங்கல்!

செங்க திரோன் விண்ணில்
சிரித்து எழக் கண்டு
மங்க லங்கள் கொண்டு
மனைக்கு வரும் பொங்கல்!

– நளவை இளங்குமரன்,
செங்கற்பட்டு


ஈற்று வாக்கியக் கதைப் போட்டி!



அரையாண்டு விடுமுறையில் இருப்பீர்கள். அதை உரிய முறையில் செலவிடவே கதைப் போட்டி. இந்தக் கதை ''..... திகைத்து நின்றாள்'' அல்லது ''.... திகைத்து நின்றான்'' என்பதில் முடிய வேண்டும். இது சமூகக் கதையாக இருக்கலாம்; வரலாற்றுக் கதையாக இருக்கலாம்; ராஜா ராணிக் கதையாக இருக்கலாம். ஆனால், கதை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். உள்நாட்டுக் கடிதத்தில் (Inland Letter) எழுதப்பட்டிருக்க வேண்டும். கதை உங்கள் சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உங்கள் பெற்றோர் அல்லது ஆசிரியரிடம் ஒப்புதல் வாங்கி அனுப்ப வேண்டும். முகவரிக் கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்ப வேண்டும். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியையும் கண்டிப்பாகத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முடிவு தேதி 31.1.99.

ஆசிரியர்
கோகுலம்
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.





3 நின்ற ரயில் கிளம்பியது!

மேஜிக் மாதவன்!

மாது தோப்புக் கரணம் போட்ட காட்சி, பாட்டிக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

"என் ராஜா, தங்கமான பையன்! மந்திரம், தந்திரம் எல்லாம் உனக்கு வேண்டவே வேண்டாம். வேடிக்கைக்குக்கூட இதையெல்லாம் கத்துக்கக் கூடாது. கெட்ட தேவதைகள், இப்படித்தான் ஆசை காட்டி மோசம் பண்ணிடும். கவனமா இருடா கண்ணா" என்று அவன் கன்னத்தை வழித்து திருஷ்டி கழித்து விட்டுப் போனார்.

அம்மா, தட்டில் தோசையைக் கொண்டு வந்து வைத்து, மிளகாய்ப் பொடியில் எண்ணெய் ஊற்றினார், மாது குழைத்தான்.

"மாது, நீ வகுப்பில் முதல் மாணவன். ஓவியம், பாட்டு, பேச்சு, விளையாட்டு என்று எல்லாவற்றிலும் பரிசு வாங்கும் புத்திசாலிப் பையன். வீட்டிலும் அம்மா அப்பாவின் தேவைகளை அறிந்து உதவி செய்கிறாய். இருந்தாலும் ஏன் இப்படியெல்லாம் 'மேஜிக்' பண்ணி எல்லோரையும் கலவரப்படுத்துகிறாய்? இதையெல்லாம் யாரிடம் கற்றுக் கொள்கிறாய்?" என்று அவன் தலையை வருடிக் கொண்டே கேட்டார் அம்மா.

அந்த நிலையிலும் மாதுவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. "அம்மா, நீங்க நினைக்கிற மாதிரி நான் மேஜிக் எதுவும் செய்யவே இல்லை, யாரிடமும் மேஜிக் கற்றுக் கொள்ளவும் இல்லை" என்று பரிதாபமாக விழித்தான் மாது.

"பொய் சொல்லாதே. மேஜிக் தெரியாமயா பாட்டியோட கற்பூரத்தை வெறும் கையால தொட்டு எரிய வைச்சிருக்கே? இனிமே இந்த மாதிரி மந்திர ஜாலங்களெல்லாம் பண்ணாதே" என்று அம்மா சிடுசிடுத்தபடி உள்ளே போனார்.

ரேவதி

மாதுவால் எதிர்த்துப் பேசி அம்மா வுக்கு விளக்க முடியவில்லை. அவனே பெரிதும் குழம்பிப் போயிருந்தான்.

அடுத்த நாள் வகுப்பில் இரண்டா வது பீரியட். கணக்குப் பாடம் நடந்து கொண்டிருந்தது. தலைமை ஆசிரியர் இன்னொருவரையும் அழைத்துக் கொண்டு வகுப்புக்குள் நுழைந்தார். அந்த இன்னொருவர், முந்தின தினத்தன்று பாதிக்கப்பட்ட அதே சர்பத் கடைக் காரர்.

"பாருங்கள், நீங்கள் குறிப்பிடும் சிறு வன் இந்த வகுப்பில் இருக்கிறானா?" என்று சர்பத் கடைக்காரரிடம் கேட்டார் தலைமை ஆசிரியர்.

சர்பத் கடைக்காரர் தலைமையா சிரியருக்கு அருகே நின்றபடி வகுப்பை, மாணவர்களை ஒரு நோட்டம் விட்டார். அவர் தேடுவது தன்னைத்தான் என் பது மாதுவுக்குப் புரிந்து விட்டது. சீருடை அவன் படிக்கும் பள்ளியைக் காட்டிக் கொடுத்து விட்டது. எப்படித் தப்புவது? மின்னலாக ஒரு யோசனை பளிச்சிட்டது.

பென்சிலை பெஞ்சுக்குக் கீழே நழுவ விட்டு, அதை எடுக்கக் குனிவதுபோல் தலையைக் கீழே மறைத்துக் கொண்டான் மாது. குனிந்தபடியே, பாக்கெட் சீப்பை எடுத்து கிராப்பை மாற்றி வாரிக் கொண் டான். மாறுகண் பார்வையாகக் கண்ணை வைத்துக் கொண்டு தலை நிமிர்ந்தான்.

சர்பத்காரர் வரிசை வரிசையாகத் தன் பார்வையைக் கொண்டு வந்து கொண்டிருந்தார். மாதுவிடம் வந்ததும் அவர் பார்வை நிலைத்தது. முகத்தில் சந் தேகம்; குழப்பம்.

"சார் அந்தப் பையன் மாதிரியேதான் இருப்பான். ஆனால் வேற கிராப். மாறு கண் இல்லே" என்று மாதுவை அடை யாளம் காட்டினார் சர்பத் கடைக்காரர். அவர் பார்வை ஊடுருவியது.

"சார், சார் இவனேதான் சார். என்னைக் குழப்பி ஏமாற்ற வேற கிராப், மாறு கண் பண்ணிட்டிருக்கான். இவனே தான். சந்தேகமே இல்லை. இவனால பழம் பிழியும் மேல் பகுதி தெறிச்சு



ஷோகேஸ் கண்ணாடியில் பட்டு எல்லாம் உடைஞ்சு போச்சு. கடையிலே இருந்த சிப்பந்திங்க, வாடிக்கைக்காரங்க எல்லாரோட உடையும் பாழாயிடிச்சு."

தலைமை ஆசிரியர் சர்பத்காரரை அமைதிப்படுத்தித் தம்முடன் கூட்டிக் கொண்டு போனார். அடுத்த அரை மணியில் மாது தலைமை ஆசிரியரின் அறையில் இருந்தான் விசாரணைக்காக.

"சர்பத் கடைக்காரர் பெரிய முரடர். வம்புக்கு அலைபவர். அவரிடம் வாலாட்டியிருக்கியே...! சும்மா விடு வாரா? நான் கவனிக்கிறேன்னு இப் போதைக்கு சமாதானப்படுத்தி அனுப் பிட்டேன். நாளைக்கு வருவாரே....? எப்படி சமாளிக்கப் போறே?" என்று கேட்டார் தலைமையாசிரியர்.

"சார், உண்மையில் எனக்கு எதுவுமே தெரியாது சார். கடைக்கு முன் விழுந்து விட்ட பேப்பர் ஏரோவை, 'சனியனே,



நீயே வந்து எடுத்துக்கொண்டு போடா'ன்னு, அவர்தான் திட்டி அனுமதித்தார். அதை எடுத்தேன். அவ்வளவு தான். அந்த மிக்சி ஓட ஆரம்பிச்சிடுச்சு" என்று கலங்கினான் மாது.

"என்னவோ, நாளைக்கு வரும்போது உங்க அப்பாவையும் கூட்டிக்கிட்டு வா. உங்கப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதித் தரேன். கொடுத்து விடு. அவரிடம் பேசணும்" என்றார் தலைமை ஆசிரியர்.

மாது மௌனமாகத் தலையாட்டினான். தலைமையாசிரியர் கடிதம் எழுத உட்கார்ந்தார். எழுதி முடித்துக் கடிதத்தை மடித்தார்.

"மாதவன், அந்த மூலைல இருக்கும் மேசைல ஒரு டேபிள்ஃபேன் இருக்கு பார்; அதுக்குப் பக்கத்துலே நிறைய காகித உறை இருக்கு. அதில் ஒன்றைக் கொண்டு வா" என்றார் தலைமையாசிரியர்.

மாது மேசையை நெருங்கினான். பள்ளியின் பெயர், முகவரி, அச்சிடப் பட்ட உறைகள் மேசையில் இருந்தன. உறைகளுக்கு மேல் பிளக்கில் சொருக வேண்டிய டேபிள் மின்விசிறியின் பிளக் பின், ஒயரோடு இருந்தது. அவன் பிளக் பின்னை இடது கையால் தூக்கி நகர்த்தினான். ஒரு விநாடி கூட ஆகியிருக்காது. மின் இணைப்புக் கிடைத்து, மின் விசிறி முழு வேகத்துடன் சுழன்றது. மேசையில் இருந்த காகிதங்கள், டஸ்டர் துணி எல்லாம் பறந்தன!

மாது குழப்பத்துடன் கலங்கினவனாக தலைமை ஆசிரியரைப் பார்க்க, அவர் பயத்துடன் அவனைப் பார்த்தார். மாது பதற்றத்துடன் பிளக் பின்னை நழுவ விட்டான். பறந்து சிதறிக் கிடந்த உறைகளில் ஒன்றை எடுத்து, கடிதத்தைப் போட்டு மாதுவிடம் தந்த தலைமை ஆசிரியர், "மாதவன் உன்னை அனுமதிக்கிறேன். இப்பவே நீ வீட்டுக்குக் கிளம்பலாம். உங்கப்பாவை அழைத்து வராமல் பள்ளிக்கு நீ வரக் கூடாது" என்று உறுதியாக எச்சரித்தார்.

வகுப்புக்குச் சென்று பையை எடுத்துக் கொண்டு மனம் குழம்பியவனாக வீட்டுக்குக் கிளம்பினான் மாது.

மாது கூறியதை எல்லாம் அம்மா கவனமாகக் கேட்டார். அவர் முகத்தில் கவலை நிறைந்தது.

"அப்பா இப்பத்தான் அவசர வேலையாக வேலூர் போவதாக ஆபீசிலிருந்து தகவல் சொன்னார். நாளை இரவுதான் வருவாராம். அதனால் நாளை மறு நாள்தான் அவரால் பள்ளிக்கு வர முடியும். அதுவரை வாலைச் சுருட்டிக் கொண்டு நல்ல பிள்ளையாக இரு. புது பிரச்னைகளைக் கொண்டு வராதே" என்றார் அம்மா.


"சரிம்மா" என்று மாது தலையாட்டினானே தவிர நடந்தது வேறாகத்தான் இருந்தது. மாலை ஆறு மணி இருக்கும். மனம் குழம்பியிருந்ததால் கவனம் படிப்பில் போகவில்லை. கார்ட்டூன் சேனலில் கார்ட்டூன் பார்த்துக் கொண்டிருந்தான்.

சேது வந்து அழைக்கும் குரல் கேட்டது. கார்ட்டூனை அணைத்து விட்டு வெளியே வந்தான்.

"மாது, ஒரு முக்கியச் செய்தி..." என்று சேது என்னவோ சொல்ல வந்தான்.

"அப்பா சேதுராமா. உனக்கு ஒரு கும்பிடு. உன் வீட்டு ஓமப் பொடிக்கு ஒரு கும்பிடு. எனக்கு இனிமேல் எதுவுமே வேண்டாம்" என்று நாடக பாணியில் பேசிக் கழன்று கொள்ள முயன்றான் மாது.

"டேய், இது ஓமப் பொடி சமாச்சாரம் இல்லேடா. வேறு விஷயம். அடுத்த வாரம் பேட்டைத் தெருப் பசங்களுக்கும் நம்ப சின்னத் தம்பித் தெருப் பசங்களுக்கும் இடையே காத்தாடிப் போட்டி வைச்சிருக்கோம் இல்லே... அது நடக்காது போலிருக்கு. இருபது ரூபாய் செலவு பண்ணி நாம்ப மாஞ்சா போட்டுத் தயாரா வைச்சிருந்தோம்... அந்த நூல் கண்டு நம்ம கைக்கு வராது போல இருக்குடா" என்றான் சேது.



"ரோம் நகரம் எரியும்போது ஃபிடில் வாசித்தவர் நீரோ!"

"ஐயய்யோ நா இல்ல!"

— பொறையாறு கங்காகணேசன்

"என்னடா இப்படி குண்டைத் தூக்கிப் போடறே? குமார்கிட்டதானே அந்த மாஞ்சா நூல் கண்டைக் கொடுத்து வைச்சிருக்கோம்? என்னாச்சு அதுக்கு?" என்று பதறினான் மாது.

"இந்த மிட்டேர்ம் தேர்வில் குமார் கணக்குல டொக்கு! அவங்க அண்ணனுக்கு ஒரே கோபம். அரை மணி முன்னாலதான் அந்த மாஞ்சா நூல் கண்டை எடுத்து தலையைச் சுற்றி எறிந்து விட்டாராம். தன்னையும் நூல் கண்டையும் நம்ப வேண்டாம்னு குமார் தன் தம்பிக்கிட்டே தகவல் சொல்லியனுப்பியிருக்கிறான்!"

"அந்த நூல் கண்டு எங்கே விழுந்ததாம்? எப்படி எறிஞ்சாராம்?"

"அவங்க வீட்டுக்குப் பின்னாலதானே புறநகர் மின்சார ரயில் ஓடுது. அதுல டிரைவர் கேபின்ல விழுந்து விட்டதாம். குமார் தன் வீட்டு மாடியில் இருந்து பார்த்தானாம்."

"ரயில் அடையாளம் ஏதாவது தெரியுமா?"

"018-ன்னு எண்ணைச் சொன்னான்."

அடுத்த ஒரு மணியில் சேதுவும் மாதுவும் தாம்பரம் ரயில் நிலையத்தில் இருந்தனர். இரவு மணி ஒன்பதாகி விட்டது. ஸ்டேஷன் மாஸ்டரிடம் விசாரித்தனர்.

"அதோ, இரண்டாவது பிளாட்பாரத்தில் வந்து நிற்கிறதே அதுதான் 018. இன்னும் அரைமணியில் கடற்கரைக்குக் கிளம்பும்" என்று பதில் கூறிய ஸ்டேஷன் மாஸ்டர், "ஆமாம், என்னது புதுமையா ரயில் நெம்பரைச் சொல்லி விசாரிக்கறீங்க! என்ன வேணும்?" என்று கேட்டார் திகைப்புடன்.

"அதன் டிரைவர் எங்க அப்பாவுக்கு நண்பர் சார். அப்பா அவரிடம் ஒரு தகவல் கூறச் சொல்லி அனுப்பியிருக்கிறார்" என்று திறமையாகப் புளுகிவிட்டு, சேதுவோடு விரைந்தான் மாது.

018 ரயிலின் டிரைவரும், கார்டும் ஓய்வறைக்குப் போயிருந்தார்கள். அதனால் நண்பர்கள் இருவருக்கும் வசதி

யாக இருந்தது. அதோடு நேரமாகி விட்டிருந்ததால் பயணிகள் கூட்டமும் அதிகம் இல்லை. டிரைவர் கேபினில் ஏறித் தேடினார்கள். மாஞ்சா நூல்கண்டு கிடைக்கவில்லை.

"நிச்சயம் 018 ரயில்தானா?" என்று மாது கேட்டான்.

"ஆமாம் நிச்சயம் இதே ரயில்தான்" என்று உறுதியாகக் கூறினான் சேது.

"அப்படியானால் டிரைவர் கேபினில் நூல்கண்டு இல்லையே? டிரைவரையே கேட்டுப் பார்க்கலாமா?" என்று யோசித்த மாதுவுக்கு திடீரென்று நினைப்பு வந்து மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான்.

"டிரைவர் கேபின் என்பது ரயிலின் முன்பக்கம்தான் இருக்கும். கார்டு கேபின் பின்பக்கம் இருக்கும். தாம்பரத்திலும் கடற்கரை ஸ்டேஷனிலும் ஒவ்வொரு முறையும் இதை கார்டும், டிரைவரும் மாற்றிக் கொள்வார்கள். இப்போ தாம்பரத்தில் இருந்து வண்டி புறப்படப் போகிறது. முன்பக்கம்தான் டிரைவர் கேபின். நாம தேடினது பின்பக்கக் கேபினில். இது தவறு. முன் பக்கக் கேபினில்தான் அந்த நூல்கண்டு விழுந்திருக்க வேண்டும்" என்றான் மாது.

இருவரும் முன்பக்கம் பறந்தடித்துக் கொண்டு ஓடுவதற்குள் ரயில் நகரத் தொடங்கி விட்டது. மழைக் காலமானதாலும், நேரமாகி விட்டதாலும் பெரும்பாலான பெட்டிகள் காலியே. அருகே இருந்த ஒரு பெட்டியில் இருவரும் ஏறிக் கொண்டனர். அந்தப் பெட்டியை கிராமத்துத் திருமணக்கூட்டம் ஒன்று முழுவதுமாக ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. கட்டு சாத இட்லியை எல்லோரும் பகிர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பட்டுப் புடைவைகளும், கல் நகைகளுமாக பெட்டியே டாலடித்தது.

தாம்பரத்தில் வண்டி கிளம்பியதும் மழை பிடித்துக் கொள்ள ஜன்னல் கதவுகளை திருமண கோஷ்டி மூடி விட்டது. என்ன முயன்றும் நண்பர்களால் அடுத்தடுத்து வந்த ஸ்டேஷன்களில் இறங்கி டிரைவர் கேபினுக்கு முன்னேற முடிய



''அவருக்கு அல்சர் இருக்கு, காரமே கூடாதுன்னுட்டாராம் டாக்டர்.''

''அதுக்காக நமஸ்'காரம்'ங்கற வார்த்தையைக்கூட சொல்ல மாட்டேன்னு அடம் புடிக்கிறாரே!''

— டி.என். பாலகிருஷ்ணன்

வில்லை. இருவரும் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

ரயில் கிண்டி ஸ்டேஷனில் நின்று விட்டுக் கிளம்பியது. மழை வெள்ளம் தண்டவாளத்தை மூடிவிட முயன்று கொண்டிருந்ததால் ரயில் மிக மெதுவாகப் போனது.

சைதாப்பேட்டை அடையாறு பாலத்திற்குமுன், ஒரே அத்வானம். ரயில் அங்கே வந்ததும் விளக்கொளி அணைந்தது. ரயில் நின்றது. பெட்டிக்குள் ஏறிய ஒரு கொள்ளைக்கூட்டம் கத்தியைக் காட்டி திருமண கோஷ்டியை மிரட்டி நகைகளைப் பறிக்க ஆரம்பித்தது. சில கொள்ளையர்கள் டிரைவர் கேபினுக்குள்ளும் கார்டு கேபினுக்குள்ளும் நுழைந்து அவர்களைக் கட்டிப் போட்டு விட்டு வெளியே வந்தனர். மின் இணைப்பைத் துண்டித்தனர்.

சமயத்தை எதிர்பார்த்திருந்த நண்பர்கள் இருவரும் இன்னொரு பக்கம் இறங்கி, டிரைவர் கேபினுக்குள் ஏறி இருட்டில் நூல்கண்டைத் தேடினர். ஸ்விட்ச் போர்டில் மாது கைகளைப் பரப்பித் தேடினான். அவ்வளவுதான். மின் இணைப்புக் கிடைத்து ரயில் படு வேகத்துடன் கிளம்பி விட்டது!

(தொடரும்)

கோலப் போட்டி கோலங்கள்!





↑ வி. வேங்கடசுப்ரமணியன்,
சென்னை.

கே. புஷ்பா,
மேட்டூர் அணை, சேலம். ↓


ஆர். லட்சுமி,
கன்னியாகுமரி. ↓









இரா. முத்து நகை,
பாண்டிச்சேரி.



வி. சுபஸ்ரீ,
தென்பாதி, சீர்காழி.

எஸ். பரமேஸ்வரி,
சென்னை.





க. பிரஸாத்,
திருவானைக் கோவில், திருச்சி.

பட்டின்




சீனா, இந்தியா, பிரேசில், தாய்லாந்து, ரஷ்யா மற்றும் தென்கொரியா நாடுகளில் பட்டு உற்பத்தி செய்யப்பட்டாலும்கூட, இதில் முன்னணியில் நிற்பது அமெரிக்க ஐக்கிய நாடுகளே! முதன்முதலில் பட்டைக் கண்டுபிடித்த பெருமை சீனாவுக்கே சேரும்! சீனர்கள் எத்தனை ஆண்டுகட்கு முன் பட்டைக் கண்டுபிடித்தனர் தெரியுமா? கி.மு.2700க்கு முன்பே கண்டுபிடித்து விட்டனர். ஆனால் அவர்களது கண்டுபிடிப்பை ரொம்ப காலத்துக்கு ரகசியமாகவே வைத்திருந்தனர்.

பட்டு கண்டுபிடிக்கப்பட்டதே ஒரு சுவையான வரலாறாகும்! இது சீனச் சக்கரவர்த்தி ஹுவான் ஹாடியின் தோட்டத்தில்தான் துவங்குகிறது. ஹுவான் ஹாடி தோட்டத்தை நோட்டம் விட்டுக் கொண்டிருக்கும்போது, சில விநோதமான புழுக்கள் 'மல்பெரி' மரங்களை அழித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவருடன் அவரது மனைவி சியிங்ஷியும்கூட, வெள்ளை நிறமுடைய புழுக்கள் மல்பெரி இலைகளைச் சாப்பிடுவதையும், அவைகளில் சில புழுக்கள், தங்களைச் சுற்றி பளபளப்பான சுற்றுச் சுவரை எழுப்புவதையும் பார்த்தாள்; அது கூட்டுப்புழு என்பது ராணிக்குத் தெரியாது. ஆகையால் அவற்றைக் கையில் எடுத்துப் பார்த்த சியிங்ஷி, கை தவறி அவற்றை வெந்நீருக்குள் போட்டு விட்டாள். சுடு நீரில் விழுந்த கூட்டுப்புழுவை நீருக்குள் அமுக்கி விளையாடிக் கொண்டிருந்தபோது, ஒரு மென்மையான, பளபளக்கும் இழை கூட்டுப் புழுவிலிருந்து பிரிந்து வந்ததைப் பார்த்து, அதனை லேசாக இழுத்துப் பார்த்தாள். அந்த இழை இழுக்க, இழுக்க நீண்டு கொண்டே வந்ததுடன் மிக உறுதியாய் இருப்பதையும் உணர்ந்து அதிசயப்பட்டாள் சியிங்ஷி!



எனவே பட்டு இழையைக் கண்டுபிடித்தவர் சீனத்து ராணி சியிங்ஷியே! பின்னர் சியிங்ஷி, தன் கணவரிடம், பட்டுப் புழுக்களை வளர்க்க மல்பெரி மரங்கள் சிலவற்றை வேண்டினாள். மேலும் பல பட்டுப் புழுக்கள்,





கதை

பட்டுக்கூட்டை நெய்தன. பட்டுக்கூட்டிலிருந்து பட்டு இழையைப் பிரித்து நெய்து உடுத்திய முதல் மானுடர் சியிங்ஷிதான்! ஆனால் பட்டுப் புழுக்கள் பற்றிய ரகசியத்தை வெளியில் யாருக்கும் தெரியவிடாமல் சுமார் 3000 ஆண்டு காலம் சீனர்கள் பாதுகாத்து வந்தனர்.


'ஹான்' என்பவரின் ஆட்சி கி.மு. 202ல் நிறுவப்பட்ட பின்னர்தான், சீனர்கள் பட்டை மற்ற நாடுகளுக்கு வாணிபம் செய்யத் துவங்கினர். ஒட்டகங்கள் மூலம், சீனர்கள் ஆசியாவைக் கடந்து பட்டினைக் கொடுத்து, பண்டமாற்று வாணிபம் செய்து பெரும் பொருள் பெற்றனர்.

எஸ். மோகனா


ரோமாபுரிச் சக்கரவர்த்தியான 'ஜஸ்டினி'யன் என்பவர்தான் சீனாவிலுள்ள பட்டு பற்றிய தகவல்களைக் கண்டறியவும், கொண்டு வரவும் இரு புத்த பிட்சுகளை அனுப்பி வைத்தார். புத்த பிட்சுகள் இருவரும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பட்டுப் புழுக்களின் முட்டைகளையும், மல்பெரி விதைகளையும் மூங்கில் குழாய்க்குள் அடைத்து, கடத்தி வந்தனர். இப்படி பட்டு ரோமாபுரிக்குச் சென்றபின்தான், சீனா மற்றும் பெர்ஷிய நாட்டினரின் பட்டு ஆதிக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.


அதன் பின் சீன எல்லைக்கு அருகிலுள்ள அஸ்ஸாம், வங்கம் மற்றும் காஷ்மீர் போன்ற இடங்களுக்கும் பட்டின் பெருமையும் வளர்ச்சியும் பரவியது. திப்புசுல்தான் பட்டுப் புழுக்களை சீனாவிலிருந்து கர்நாடகத்திற்குக் கொண்டு வந்து, பட்டு உற்பத்தியைச் செழிக்கச் செய்து, கர்நாடகத்திலுள்ள மைசூரை பட்டு உற்பத்திக்குப் பெயர் போன ஊராக்கிவிட்டார். பின் தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிபுரத்திலும் பட்டு உற்பத்தி பெருகி இன்று, 'காஞ்சிபுரம் பட்டு' உலகளவில் பெருமை பெற்றுள்ளது.

பருத்தி அல்லது கம்பளி இழை போல பட்டு இழை குட்டையானது அல்ல. ஒரு பட்டுக்கூடு என்பது ஒரே ஒரு பட்டு இழையால் ஆனது. எவ்வளவு நீளம் தெரியுமா? ஒரு பட்டுக் கூட்டை அறுக்காமல் பிரித்தெடுத்தால் அந்தப் பட்டிழையின் நீளம் 300லிருந்து 1800 மீட்டர் நீளம் வரைகூட இருக்கும்! அடேயப்பா! இந்தச் சின்ன உடலுக்குள் இத்தனை அற்புத சக்தியா? பட்டைக் கொடுக்கும் பட்டுப் புழுக்களின் தியாகத்தை மனித இனம் நினைக்குமா?



பாட்டுக்கு உணவு!
ரத்தினபுரி காட்டில் சோம்பேறி நரி வாழ்ந்து வந்தது. ஒரு நாள் –
தலைவரே! இந்த நரி தினமும் எங்கள் உணவைத் திருடுது.
எங்களுக்கு நீதி வழங்குங்கள்.
இனிமேல் நரியார் திருடினால் காட்டை விட்டே அனுப்பி விடுவேன்.
திருட மாட்டேன்.
நரி உணவு தேடி புறப்பட்டது. காட்டை விட்டு வெளியே வந்தது.
அங்கு சுற்றுலாப் பயணிகள் குழுமியிருந்தனர். ரேடியோ பாடிக் கொண்டிருந்தது.
யாரும் பார்க்கா வண்ணம், நரி ரேடியோவை எடுத்துக் கொண்டு ஓடியது.
அப்பாடா! என் இடத்துக்கு வந்தாச்சு!
நரி ரேடியோவைப் போட்டது.
பாட்டுச் சத்தம் கேட்டு காட்டு விலங்குகள் கூடின.
கதை : வி.ஆர். கிருத்திகா; படம் : சசி


என்ன எல்லோரும் வந்திருக்கீங்க?
ரேடியோவில் பாட்டுக் கேட்கத்தான்.
ம்... இந்த ரேடியோவை வைத்து நம்ம காரியத்தைச் சாதிக்க வேண்டியதுதான்!
உடனே ரேடியோவை நிறுத்தியது.
பாட்டுப் போடேன்.
தயவு செய்து போடு.
அப்ப நான் சொல்வதைச் செய்வீங்களா?
ம்... சரி! செய்யறோம்.
பின்னாடி ஒத்துக்க மாட்டேன்னு சொல்லக் கூடாது.
பாட்டுக்காக என்ன வேணுமானாலும் செய்வோம்.
தினமும் எனக்கு உணவு கொண்டு வந்து கொடுத்தீங்கன்னா பாட்டுப் போடறேன்.
இது அநியாயம்.
அப்ப பாட்டும் கிடையாது. போங்க!
மற்ற விலங்குகள் கூடிப் பேசி ஒரு முடிவெடுத்தன.


சரி. தினமும் உனக்கு உணவு தர்றோம். நீ பாட்டுப் போடணும்.
சரி!
மறுநாள் –
இந்தாங்க நரியாரே! சாப்பாடு.
தினமும் விதவிதமா கொண்டு வாங்க.
பாட்டுக்காக இதுக்கு என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கு!
என்ன யோசிக்கறே?
சரி. உங்க விருப்பப்படியே செய்யலாம்.
பாட்டுப் போடுங்க.
பாட்டுப் போட்ட சிறிது நேரத்தில் –
ஏன் நிறுத் திட்டீங்க?
இந்தச் சாப்பாடுக்கு இவ்வளவுதான் பாடும்.
நாட்கள் சென்றன. ஒரு நாள் இரவு –
இந்த ரேடியோவால் எனக்கு ராஜ மரியாதைதான். காலமெல்லாம் இப்படியே வாழலாம்!
நரி வேலை செய்யாமல் சாப்பிட்டதால் உடல் பெருத்தது. அன்று உணவு முடித்ததும் –
என்ன நரியாரே ரேடியோ பாடலே.
எனக்கும் தெரியலை!
நரி ரேடியோவை ஆட்டிப் பார்த்தது. பாவம் ரேடியோவில் பேட்டரி தீர்ந்த விஷயம் அதற்கு தெரியவில்லை.
சரி. நீங்க போய் அடுத்த வேளை சாப்பாடு எடுத்துட்டு வாங்க. சரி பண்ணிடறேன்.
பாட்டுக்காக சாப்பாடு போட்டோம்.
அப்ப இனிமேல்?
இந்த உடம்பைத் தூக்கிட்டு உணவு தேடு.
ஐயோ! என் திட்டம் இப்படியாகி விட்டதே!

போட்டிக்குப் போக மாட்டேன்!



விவேக் தோட்டத்தில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தான். அங்கு வந்த அப்பா, "விவேக்! இந்த முருங்கை மரம் பட்டுப் போச்சு. வெட்டிடலாமா?" என்று கேட்டார்.

"வேண்டாம்பா! இன்னும் கொஞ்ச நாள் பார்க்கலாம். மறுபடியும் துளிர்க்கும்னு எனக்கு நம்பிக்கை இருக்கு" என்றான் விவேக்.

"எனக்கென்னவோ நம்பிக்கையே இல்லை. ரொம்ப நாளாவே இப்படி தான் இருக்கு. சரி, இன்னும் கொஞ்ச நாள் பார்க்கலாம்" என்று சொன்ன அப்பா வீட்டிற்குள் சென்றார்.

விவேக் தினமும் அந்த முருங்கை மரத்திற்குத் தண்ணீர் ஊற்றி வந்தான்.

மறுவாரம் தோட்டத்திலிருந்தபடி விவேக் " அம்மா, அப்பா சிக்கிரம் வாங்க" என்று கத்தினான்.

பதறியபடி ஓடி வந்தனர் இருவரும்.

"முருங்கை மரத்துல துளிர் விட்டிருக்குப்பா" என்றான் மகிழ்ச்சியுடன் விவேக்.

"சரி! இன்னிக்கு உனக்கு பேச்சுப் போட்டி இருக்கே! கிளம்பு" என்றார் அம்மா.

அவசரமாகக் கிளம்பிப் போனான் விவேக்.

அன்று மாலை தனது அறையில் சோகமாக உட்கார்ந்திருந்தான்.

"விவேக், ஏன் இப்படி பேசாமல் உட்கார்ந்திருக்கே?" என்றார் அம்மா.

"அம்மா எனக்கு மூணாவது பரிசு கூட கிடைக்கலை. இனிமேல் போட்டிக்குப் போக மாட்டேன்" என்றான் விவேக்.

"இதுதான் விஷயமா? இதுக்குப் போய் நம்பிக்கை இழக்கலாமா? ம்.... அந்த முருங்கை மரம் துளிர்க்கும்னு நீ நம்பினே. மரத்துக்கும் அந்த நம்பிக்கை இருந்திருக்கு. அதான் இப்ப புதுப் பிறவியா தளதளன்னு வளருது. ஆனா ஒரு போட்டியிலே தோற்றதுக்கு இப்படியா முடிவெடுப்பது?" என்றார் மகனைப் பார்த்தபடி அம்மா.


சிறிது நேரத்திற்குப் பின் "மறுபடியும் கலந்துக்குவேன். பரிசு வாங்குவேன் என்ற நம்பிக்கை வந்துருச்சு" என்ற விவேக்கை அம்மா பாராட்டினார்.

— கமலா நாகராஜன்


1999

சந்திரலோகப் பூனை!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



காட்சி – 1

இடம் : ரவி வீடு

ஸ்ரீதர் : ரவி! ஓவியப் போட்டியிலே நீ வெற்றி பெற்றதற்கு எங்கள் வாழ்த்துகள்!

கஜபதி : நீ வரைஞ்ச ஓவியத்தை இன்றைய செய்தித்தாள்லே பிரசுரிச்சு, உன்னைப் பத்திய விவரங்களையும் போட்டிருந்தாங்க! பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது ரவி!

ரவி : உங்களுக்கு ரொம்ப நன்றி! உங்களுக்கு இன்னொரு செய்தி! நாம போன வருஷம் பொங்கலன்னிக்கு எடுத்த முடிவுப் படியே முந்நூறு வாழ்த்து அட்டைகளைத் தயார் பண்ணிட்டேன்.

ஸ்ரீதர் : சபாஷ்! எங்கே காட்டு பார்க்கலாம்!

ரவி : இந்தாங்க, எப்படியிருக்குன்னு சொல்லுங்க?

கஜபதி : ரவி! ஒவ்வொரு வாழ்த்து அட்டையும் ரொம்பப் பிரமாதம்! எப்படி இவ்வளவு வரைஞ்சே ரவி?

ரவி : தினம் ஒரு அட்டையா வரைஞ்சு முடிச்சேன்! வெளியிலே வாங்கற வாழ்த்து அட்டையோட விலையிலே நாலுலே ஒரு பங்கு விலைதான் ஆகும். அதாவது ஒரு ரூபாய்!

கஜபதி : அடேயப்பா ரொம்ப மலிவு தான்.

ரவி : இன்னும் பாதி அட்டைகளுக்கு வாழ்த்து வரிகள் எழுதணும்! ராத்திரிக்குள்ளே முடிச்சிடுவேன்!

ஸ்ரீதர் : ரவி! எப்படியும் நாளைக்கே முடிச்சிடு! நண்பர்கள் எல்லார்கிட்டேயும் இதைப் பத்தி சொல்லி எல்லா வாழ்த்து அட்டைகளையும் நாங்களே வித்துக் கொடுத்துடுறோம். வர்றோம்.

காட்சி – 2

இடம் : ரவி வீடு

ஸ்ரீதர் : ரவி! ரவி!

கஜபதி : டேய் ரவி! உனக்கு என்னடா ஆச்சு? ஏன் இப்படி சோகமா உட்கார்ந்துக்கிட்டிருக்கே... அழுதிருக்கே போலிருக்கு!

ரவி : ஆமாண்டா, நான் கஷ்டப்பட்டு வரைஞ்சு வச்சிருந்த அத்தனை பொங்கல் வாழ்த்து அட்டைகளும் காணாமல் போச்சுடா!

ஸ்ரீதர் : டேய் ரவி என்னடா சொல்றே?

ரவி : நேத்து நீங்க வந்துட்டுப் போனப்புறம் இந்த ஜன்னலோரமாத்தான் வச்சிருந்தேன். யாரோ ஜன்னல் வழியா

கையை விட்டு எடுத்துக்கிட்டுப் போயிருக் காங்கடா!

கஜபதி : நல்லா தேடிப் பார்த்தியா?

ரவி : பார்த்துட்டேன், கிடைக்கலே!


ஸ்ரீதர் : டேய் கவலைப்படாதேடா! நம்ம மோகனுக்கு துப்பறியறதுன்னா ரொம்பப் பிடிக்கும். அவனும் நாங்களும் சேர்ந்து எப்படியாவது கண்டுபிடிச்சுட றோம்!

காட்சி – 3

இடம் : சாலை

ஸ்ரீதர் : கஜபதி! நமக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சியான விஷயம்! இந்த நோட் டீஸைப் படிச்சுப் பாரு!

கஜபதி : என்ன நோட்டீஸ்? கொண்டா இப்படி! (வாங்கிப் படிக் கிறான்) அத்தியூர் கிராமத்தில் படித்து வரும் மாணவமணிகளே! உங்களுக்கு ஒரு நல்ல செய்தி! இனிமேல் நீங்கள் உங் களுக்கு வேண்டிய பள்ளிக்கூட நோட்டுப் புத்தகங்களையும், மற்ற பொருட்களையும் வாங்க தொலைவிலுள்ள நகரத்துக் கடை களுக்குச் செல்ல வேண்டியதில்லை. இந்த அத்தியூர் கிராமத்திலேயே ஒரு புதிய கடை வந்து விட்டது. உங்களுக்கு வேண் டிய எதுவும் இந்தக் கடையில் கிடைக்கும்! அன்புடன் வருக! உங்கள் ஆதரவைத் தருக! – செல்வராஜ், அமெரிக்கன்



ஃபான்ஸி ஸ்டோர்ஸ்! ஸ்ரீதர் அண்ணா! நீ சொன்னபடியே இது ஒரு மகிழ்ச்சியான செய்திதான். நமக்கு நிறைய நேரம் மிச்சமாகும்!

மோகன் (ஓடிவந்து) : ஸ்ரீதர், கஜபதி, கண்டுபிடிச்சுட்டேன்! நம்ம ரவிகிட்டே யிருந்து காணாமற்போன அத்தனை பொங்கல் வாழ்த்துகளையும் கண்டுபிடிச் சுட்டேன்.

ஸ்ரீதர் : அப்படியா! எங்கேடா?

மோகன் : எல்லாம் அந்த அமெரிக்கன் ஃபான்ஸி ஸ்டோர்ஸ்லேதான். அந்த வாழ்த்து அட்டைகளைப் பார்வைக்கு வச்சிருக்காங்க!

கஜபதி : அப்படீன்னா அந்த அமெரிக்கன் ஃபான்ஸி ஸ்டோர்ஸ் கடைக்காரர் செல்வராஜ்தான் இந்த அட்டைகளைத் திருடியிருப்பாரா?

ஸ்ரீதர் : உடனே வாங்க, நாம் எல்லாரும் அந்தக் கடைக்குப் போய் உண்மையை விசாரிச்சுத் தெரிஞ்சுப்போம்!

கஜபதி : அதோ ரவி கூட இந்தப் பக்கமா வந்துகிட்டிருக்கான். அவனையும் கூட அழைச்சுக்கிட்டுப் போகலாம் வாங்க!

காட்சி – 4

இடம் : கடை

கடைக்காரர் : அடேடே! வாங்க தம்பிகளா! மொத மொதல்லே என் கடைக்கு வர்றீங்க! இந்தாங்க, இனிப்பு எடுத்துக்குங்க. அட தயங்காம எடுங்க! தாராளமா அள்ளுங்க! உள்ளே வாங்க! தம்பி! அது என்ன உங்க பூனையா? கூடவே வந்துக்கிட்டிருக்கு! கொழு கொழுன்னு இருக்கு...

கஜபதி : ஆமாம்! நாங்க வளர்க்கிற பூனைதான்!

கடைக்காரர்: ஆனா கடைக்குள் வராம பார்த்துக்குங்க தம்பி! உங்களுக்கு என்ன வேணும்?

ஸ்ரீதர் : ம்... இந்த நோட்டுக்கெல்லாம் என்ன விலை?

கடைக்காரர் : மலிவான விலைதான்! நோட்டுப் பின்னாடியே விலையும் போட்டிருக்கு... சும்மா எடுத்துப் பாருங்க!



ஸ்ரீதர் : ஐய்யய்யோ!

கடைக்காரர் : என்ன தம்பி?

ஸ்ரீதர் : சார்! இந்த நோட்டோட விலை பத்து ரூபாயா?

கடைக்காரர் : ஆமாம் தம்பி, ஏன்?

ஸ்ரீதர் : போன வாரந்தான் டவுனுக்குப் போயிருந்தேன். இதே நோட்டு அங்கே அஞ்சு ரூபாய்க்குக் கிடைக்குது.

கடைக்காரர் : கிடைக்கும் தம்பி! மூணு ரூபாய்க்கும் கிடைக்கும்! ஆனா அது வேற.... இது வேற!

கஜபதி : சார் இந்தப் பென்சிலோட விலை அஞ்சு ரூபாயா?

கடைக்காரர் : ஆமாம் தம்பி!

கஜபதி : இது டவுன்லே 2 ரூபாய்க்குக் கிடைக்குது சார்!

கடைக்காரர் : அது வேற, இது வேற தம்பி! என் கடை அமெரிக்கன் ஸ்டோர்ஸ்! இதோ இந்த நோட்புக் இருக்கே, இது கனடாவிலேயிருந்து நேத்து தான் வந்தது. பேப்பர் சும்மா எப்படி வழவழன்னு இருக்கு பாரு! எழுதிக் கிட்டே இருக்கலாம்னு தோணும்! அப்புறம் இந்தப் பென்சில் இருக்கே - இது டென்மார்க்குலேயிருந்து 'டென் டேஸ்' முன்னால வந்தது. இதுலே எழுதினா மார்க்கும் 'டன் டன்'னா வரும்! அதனால தான் தம்பி இந்த விலை!

மோகன் (இரகசியமாக கஜபதியிடம்) : டேய்! இவர் சரியான பேராசைக்காரர். நல்லவரா தெரியல்லே. டேய் ரவி! இதோ இங்கே பாருடா! உன் வாழ்த்து அட்டை இங்கே இருக்கு!

ரவி : கடைக்காரரே! இந்த வாழ்த்து அட்டை உங்களுக்கு எப்படி கிடைச்சது?

கடைக்காரர் : தம்பி! நேத்துதான் யாரோ ஒருத்தர் வந்து இந்த வாழ்த்து அட்டைகளை எனக்கு ஐம்பது ரூபாய்க் குக் கொடுத்துட்டுப் போனார்!

ஸ்ரீதர் : அப்படியா? ஐயா! இந்த வாழ்த்து அட்டைகள் ரவியோடது! இவனே கஷ்டப்பட்டு தயாரிச்ச வாழ்த்து அட்டைகள்! உள்ளே ஓவியத்து நடுவிலே இவன் பேர் கூட இருக்கும்! இதை யாரோ திருடி உங்ககிட்டே வித்திருக்காங்க!

மோகன் : தயவுசெய்து இதை ரவி கிட்டே திருப்பிக் கொடுத்துடுங்க!

கடைக்காரர் : தம்பி, இந்த வாழ்த்து அட்டையை எனக்கு வித்த ஆளைப் பிடிச்சுக் கொண்டு வாங்க, அப்புறம் இதைப் பத்திப் பேசலாம்!

கஜபதி : ஐயா, நாங்க உண்மையைத் தான் சொல்றோம்! இந்த வாழ்த்து அட்டைகளை நீங்க ரவிகிட்டே திருப்பிக் கொடுத்தாத்தான், உங்க கடையிலே நாங்க நோட்புக், பேப்பரெல்லாம் வாங்குவோம்!

கடைக்காரர் : அப்படிக் கொடுக்க முடியாது தம்பி! உங்களுக்கு சேவை செய்யத்தான் இந்தக் கிராமத்துலே கடையை வச்சிருக்கேன். என் கடையிலே வாங்கல் லேன்னா நீங்க பழையபடி டவுன் பக்கம் போக வேண்டியதுதான். உங்களுக்காக வேணும்னா இந்த வாழ்த்து அட்டைகளை கொஞ்சம் விலை குறைச்சு நாலு ரூபாய்க்கு தரேன்!

மோகன் : ஐம்பது ரூபா கொடுக்கறோம். எல்லா அட்டைகளையும் கொடுத்துடுங்க... உங்களுக்கும் அதனால நஷ்டமில்லை!

கடைக்காரர் : முடியாது! போயிட்டு வாங்க!

காட்சி - 5

இடம் : கஜபதி, ஸ்ரீதர் வீடு.


கடைக்காரர் : கஜபதி தம்பி! ஸ்ரீதர் தம்பி!

கஜபதி : யாரு கடைக்காரரா? என்ன இந்த ராத்திரி வேளையிலே எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க?

"ஆழம் தெரியாமல் காலை விட்டால் என்ன ஆகும்?"

"துணி நனைஞ்சு போகும்!"

- சு. அருணாசலம்.



கடைக்காரர் : தம்பி, அவசரமா ஒரு உதவி செய்யணும்! நீங்க வளர்த்துக்கிட்டு வர அந்தக் கொழு கொழு பூனையைக் கொஞ்ச நேரம் எனக்குக் கொடுக்கணும்!

கஜபதி : எங்க பூனை உங்களுக்கு எதுக்கு?

கடைக்காரர் : வந்து... இந்தக் கிராமத்துலே எலி உபத்திரவம் ரொம்ப அதிகம்னு எனக்குத் தெரியாது. கடையிலே இருந்த சின்னப் பொந்துகளைக் கவனிக்காம, நோட்டுப் புத்தகங்களையும், மத்த பொருட்களையும் வாங்கிக் குவிச்சிட்டேன்! இப்ப ரெண்டு நாளா ஒரே எலித் தொல்லை! சுமாரா நூறு எலிகள் உள்ளே நுழைஞ்சு கும்மாளம் போட்டுக்கிட்டிருக்கு! சாமான்களையெல்லாம் கடிச்சுக் குதறிக்கிட்டிருக்கு. விரட்ட முடியல்லே!

ஸ்ரீதர் : ஐய்யய்யோ... அங்கே பாருங்க! உங்க கடை பென்சிலைத்தான் ஒரு எலி கவ்வியபடி ஓடிக்கிட்டிருக்கு!

கடைக்காரர் : அதுக்காகத்தான் தம்பி உங்க பூனையைக் கேக்கறேன். அதுக்கு வாடகையா பத்து ரூபா பணம் தரேன்!

கஜபதி : என்ன பத்து ரூபாய்க்கா எங்க பூனையைக் கேக்கறீங்க? ஐந்நூறு ரூபா கொடுங்க... பூனை தர்றோம்!

கடைக்காரர் : என்ன போயும் போயும் பூனைக்கு ஐந்நூறு ரூபா வாடகையா?


ஸ்ரீதர் : இது சாதாரணப் பூனை இல்லை சார்; சந்திரலோகப் பூனை! போன மாசந்தான் சந்திரலோகத்துலேயிருந்து ராக்கெட்டுலே வந்து இறங்கிச்சு...

கஜபதி : ஆமாம்! இது ஒரே நிமிஷத்துலே ஒன்பது எலிகளை அடிச்சுப் போட்டுடும் தெரியுமா?

ஸ்ரீதர் : நூறு எலிகளை இந்தப் பூனையாலேதான் சார் துரத்த முடியும்! தாராளமா ஐந்நூறு ரூபாய் கொடுக்கலாம் சார்!

கடைக்காரர் : நிறுத்துங்க! பூனை கேட்டா சந்திரலோகப் பூனைன்னு பொய் சொல்லி கிண்டலா பண்ணறீங்க!

கஜபதி : உங்க கடை நோட்டு கனடாவிலேயிருந்து வந்ததா சொன்னீங்க; பென்சில் டென்மார்க்குலேயிருந்து வந்ததா சொன்னீங்க! அதான் அவ்வளவு விலைன்னீங்க. அப்படியிருக்கறப்போ எங்க பூனை மட்டும் சந்திரலோகத்துலேயிருந்து ஏன் சார் வந்திருக்கக் கூடாது?



"அட்டை ரத்தத்தை உறிஞ்சும்!"

"இந்த நோட்டு அட்டைக்கு வாய் இல்லையே! எப்படி உறிஞ்சும் சார்?"

- எம்.பி.எம். ராஜவேலு

கடைக்காரர் : தம்பி! தம்பி! தயவு செய்து பூனையைக் கொடுத்து என் கடையையும், என் குடும்பத்தையும் காப்பாத்துங்க தம்பி!

கஜபதி : வாடகை ஐந்நூறு இருக்கா?

கடைக்காரர் : தம்பிகளா! என்னை மன்னிச்சிடுங்க! நான் அன்னிக்கு உங்ககிட்டே அப்படி நடந்துக்கிட்டது தப்புதான். பேராசையாலே அதிக லாபம் சம்பாதிக்க ஆசைப்பட்டுத்தான் அப்படியெல்லாம் பொய் சொன்னேன்... இனிமே நியாய விலைக்கே உங்க எல்லாருக்கும் என் கடைப் பொருட்களை விக்கறேன்... என்னை இன்னொரு குற்றத்துக்காகவும் மன்னிச்சிடுங்க. ரவித் தம்பியோட வாழ்த்து அட்டைகளை காசுக்கு ஆசைப்பட்டு நான்தான் ஒரு பையன்கிட்டேயிருந்து வாங்கினேன். வாழ்த்து அட்டைகளையும் உங்ககிட்டே திருப்பிக் கொடுத்துடறேன். போதுமா? வாடகைப் பணமும் வேணுமா?


ஸ்ரீதர் : ஐயா! நாங்க பேராசைக்காரங்க இல்லை! ரவி கஷ்டப்பட்டு தயார் செய்த வாழ்த்து அட்டைகளை திரும்பக் கொடுக்கவும், நியாய விலைக்குப் பொருட்களைத் தரவும் நீங்க சம்மதிச்சதே எங்களுக்குப் போதும்! ஏய் சந்திரமதி! சந்திரமதி!

கடைக்காரர் : சந்திரமதியா?

ஸ்ரீதர் : ஆமாம்! அதான் எங்க பூனையோட பேர்! இதோ சந்திரமதி வந்தாச்சு! நாங்களே உங்க கடைக்குக் கூட்டிக்கிட்டு வரோம்! நீங்க சீக்கிரமாப் போங்க!


பூனை : மியாவ்! மியாவ்!





எங்கே கிடைக்கிறது?


ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். உலக வரைபடத்தைக் காட்டி எங்கெல்லாம் பெட்ரோல் கிடைக்கிறது என்பதைக்



குறைவான மதிப்பெண்

கணித வகுப்பு. காலாண்டுத் தேர்வு விடைத் தாள்களை ஆசிரியர் கொடுத்தார். கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்த மாணவன் மிகவும் குறைவான மதிப்பெண்களை வாங்கியிருந்தான். அவனிடம் ஆசிரியர் "ஏன் இவ்வளவு குறைவா வாங்கியிருக்கே?" என்றார். "சார்! நான் கடைசி வரிசையில் உட்கார்ந்து இருக்கேன். முன்னாலே உட்கார்ந்து இருக்கிறவங்களே எல்லா மார்க்கையும் வாங்கிடறாங்க. அப்புறம் நான் எப்படி?" என்றான். நாங்கள் சிரித்தோம். "பேசறதெல்லாம் நல்லாதான் இருக்கு. படிப்பிலேயும் கொஞ்சம் கவனம் செலுத்து" என்றார் ஆசிரியர்.

– சி. லோகேஸ்வரி,
வெள்ளையாம்பட்டு.



நம்பரைக் காணோம்!


நான் பத்தாம் வகுப்பு பரிட்சை எழுதியிருந்தேன். தேர்வு முடிவு அன்று வெளியான செய்தித் தாளை வாங்கி எனக்கு ஒரே படபடப்பாக இருந்தது. அவசர அவசரமாகப் பார்த்தேன். என்னுடைய தேர்வு எண்களைக் காணோம். அழுதபடி பள்ளிக்கு வந்தேன். என் ஆசிரியர் செய்தித்தாளை வாங்கிப் பார்த்துவிட்டு "உன் நம்பர் இதோ இருக்கே!" என்றார். நானும் பார்த்தேன். நம்பர் இருந்தது. நான் முதலில் பார்த்த பக்கத்தை மீண்டும் புரட்டிய போது தான் அது லாட்டரிச் சீட்டு முடிவு என்பது தெரிந்தது!

– இரா. உதயகுமார்,
முறையூர்.

பெட்ரோல் எங்கே கிடைக்கிறது?

குறிப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு மாணவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பி "பெட்ரோல் எங்கே கிடைக்கிறது?" என்று கேட்டார். அவனோ "பெட்ரோல் பங்க்குகளில் கிடைக்கிறது" என்றான். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம்.


– ஆர். காயாம்பு,
சோழபுரம்.



யார்?

சமூக அறிவியல் பாட வேளை. ஒரு மாணவனை எழுப்பி "சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்தது யார்?" என்று கேட்டார் ஆசிரியர். "முன்னாள் முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன்" என்றான். அப்போது பின்னால் இருந்த மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவனை எழுப்பிய ஆசிரியர் "வாரம் ஒரு முறை முட்டை போடும் திட்டத்தைக் கொண்டு வந்தது யார்?" என்று கேட்டார். "கோழி சார்!" என்றானே பார்க்கலாம். வகுப்பே சிரித்தது.

– க. எழிலரசி,
பத்தாம் வகுப்பு, பெரியதச்சூர்.



உருவாக்கியது யார்?

வரலாறு பாட வேளை. "பிரமிடுகளை முதலில் உருவாக்கியவர் ஓயோஸ்குபு" என்றார் ஆசிரியர். சிறிது நேரத்தில் பாடம் நடத்தி முடித்ததும் ஒவ்வொருவரிடமும் அந்தப் பாடத்தைப் பற்றி கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வந்தார். என் நண்பனிடம் "பிரமிடுகளை உருவாக்கியவர் பெயர் என்ன?" என்றார். பதட்டத்தில் எழுந்தவன் "கேஸ் குப்பு" என்றவுடன் வகுப்பே சிரித்தது. ஆசிரியரும் சிரித்து விட்டு "கேஸ்ஸும் இல்ல, குப்புவும் இல்ல ஓயோஸ் குபு" என்றார்.

எல். மோகன் பிரசாத்,
ஒன்பதாம் வகுப்பு,
கிருஷ்ணகிரி

பஸ்ஸா, ரயிலா?

பள்ளி உணவு இடைவேளை. எங்கள் தோழிகளுடன் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தேன். பல விஷயங்களைப் பேசிய பின் யார் யார் பஸ்ஸிலும் ரயிலிலும் பள்ளிக்கு வருகிறார்கள்? என்பதில் ஆரம்பித்தது. என் தோழி ஒவ்வொருவரிடமும் "நீ பஸ்ஸா, ரயிலா?" என்று கேட்டுக் கொண்டு வந்தாள். அப்போது அடுத்த வகுப்பு மாணவி வந்து எங்களுடன் அமர்ந்தாள். அவளிடமும் அதே கேள்வியைக் கேட்டாள் தோழி. "அவள் சைக்கிள்" என்றாள். "உன்னிடம் சைக்கிள் இல்லையே" என்று கேட்டாள் தோழி. "நான் சைக்கிள் வேகத்துக்கு நடப்பேன்" என்றவுடன் அனைவரும் சிரித்தோம்.

– கே. தீபா,
அயனாவரம்.



காளி கோயில் வைரங்கள்!

மங்களாபுரி என்ற நாட்டை வீர சேனன் என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவருக்கு ஐந்து வயதில் ஒரு மகன் இருந்தான். அவனை சிறுவயதில் இருந்தே காட்டுக்கு அனுப்பி வேட்டையாடுவதற்கான பயிற்சிகளை கற்றுத் தரச் சொல்லி இருந்தார் அரசர்.

ஒரு நாள் காலை சில வீரர்களுடன் இளவரசன் காட்டுக்குச் சென்றான். அங்கு வேட்டையாடிவிட்டுத் திரும்பும் போது ஒரு செப்புத் தகட்டைக் கண்டான். அதை எடுத்துப் பார்த்தான். அதில் வடமொழி எழுத்தில் ஒரு வாசகம் எழுதியிருந்தது. அதை எடுத்து மன்னர் வீரசேனனிடம் தந்தான். அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

மறுநாள் காலை அரசவையைக் கூட்டி அதில் உள்ள வாசகத்தை படிக்கச் சொன்னார். "இக்காட்டில் ஒரு காளி கோயிலில் அளவிட முடியாத தங்கமும், வைரமும், ரத்தினமும் இருக்கின்றன" என்று படித்து முடித்தார் புலவர். "அதை எடுக்க யார் செல்வது?" என்று கேட்டார் அரசர்.

புலவர்களுள் ஒருவர், "அரசே காட்டில் எந்தக் காளி கோயிலும் இல்லை. ஆதலால் இச்செப்புத் தகட்டில் எழுதியிருப்பது பொய்யாக இருக்கும் என்று கருதுகிறேன்" என்றார்.

அரசரோ, "இல்லை. செப்புத் தகட்டில் இருப்பது எப்படி பொய்யாகும்? நம் படையில் இருக்கும் ஒரு சிறந்த வீரனை அழைத்து வாருங்கள்". என்று உத்தரவிட்டார். தளபதியோ, "அரசே சுந்தரன் என்ற வீரன் இருக்கிறான். அவனை அழைத்து வருகிறேன்" என்றார்.

சற்று நேரத்தில் சுந்தரன் வந்தான் அவன் தோற்றமும் நடையும் அவனுடைய வீரத்தை இன்னும் அதிகப்படுத்தின. அவனிடம் செப்புத் தகட்டில் எழுதியிருந்த வாசகத்தைக் கூறினார் அரசர். சுந்தரன் "அரசே, நான் அந்தப் புதையலை எடுத்து வருகிறேன்" என்று கூறினான்.

"உனக்கு எத்தனை வீரர்கள் வேண்டுமோ அழைத்துச் செல்" என்று அரசர் கூறினார். சுந்தரனோ "அரசே! எனக்கு என் வீரமும் இந்த வாளும் போதும்" என்று கூறினான்.

மறுநாள் காலை சுந்தரன் தன் குதிரையின் மீது ஏறிச் சென்றான். காட்டை ஒரு சுற்று சுற்றி வந்தான். காடு முழுவதும் தேடியும் காளி கோயிலை கண்டு பிடிகக முடியவில்லை. சிறிது நேரம் ஓய்வெடுக்கலாம் என்று ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்தான்.

அவன் பின்னே ஒரு சிங்கம் ஆவேசத துடன் உறுமிக் கொண்டு வந்தது. அதைக கவனித்த சுந்தரன் தன் வாளை உருவினான். அதனுடன் சற்று நேரம் போரிட்டு


"சார் என்னைத் தெரியுதா? உங்ககிட்டே படிக்கறப்போ எல்லா பாடத்திலேயும் முட்டை வாங்குவேனே!"

"ஆமா! இப்போ என்ன பண்றே?"

"முட்டை வியாபாரம் பண்றேன்!"

- டி.என். பாலகிருஷ்ணன்





தன் வாளால் வெட்டினான். அந்தச் சிங்கம் ஒரு அழகிய மனிதனாகியது.

அதைக் கண்டு ஆச்சர்யமடைந்தான் சுந்தரன். சிங்கத்தில் இருந்து வந்தவன், "நான் வீரபுரி நாட்டின் படைத் தளபதி. ஒருநாள் காட்டில் நானும் இளவரசரும் வேட்டையாடச் சென்றோம். நான் ஒரு மானை நோக்கி அம்பை எய்தேன். அது அருகில் தவம் செய்து கொண்டிருந்த முனி வரின் மேல் பட்டு விட்டது. அவர் தன் உயிர் போகும் முன் இந்த அம்பை எய் தவன் எவனோ அவன் சிங்கமாக உரு மாறட்டும் என்று சாபமிட்டார். நான் அவ ரிடம் சென்று அழுதேன். அவர் மன மிறங்கி உன்னை ஒரு வீரன் தன் வாளால் கொன்றால் உன்னுடைய உருவத்தை அடைவாய் என்று சாபவிமோசனம் கூறி விட்டு இறந்து விட்டார். இன்று உங்களால் எனக்கு சாபவிமோசனம் கிடைத்தது. என் பெயர் மகேந்திரன். உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள். நான் உதவுகி றேன்" என்றான்.

சுந்தரன் "இக்காட்டில் காளி கோயில் இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். அதைக் காண வந்தேன்" என்று கூறினான். "அந்தக் காளி கோயில் எனக்குத் தெரி யும், என் பின் வாருங்கள்" என்று கூறி விட்டு முன் நடந்தான் மகேந்திரன்.


மகேந்திரன் ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் வந்து நின்றான். அங்கு இருந்த ஒரு ஆலம் விழுதைப் பிடித்து இழுத் தான். ஆலமரம் இரண் டாகப் பிளந்தது. அதனுள் அழ காகக் காளி கோயில் தோற்றமளித்தது. பின் இரு வரும் உள்ளே சென்றார் கள். அக்கோயிலுக்குள் விஷப் பாம்புகள், அதிக மாய் இருந்தன. அவற் றைக் கொன்று முன்னே றினார்கள்.

அங்கிருந்த பெட்டி களை சுந்தரன் திறந்தான். அதில் நவரத்தினங்களும் வைரங்களும் பளபளத் தன. அதைப் பார்த்தவுடன் மகேந்திர னுக்கு மனசு மாறியது. பொன் பொருளின் மீது பேராசை வந்தது. தன் வாளை உருவி சுந்தரனின் தலையை நோக்கி வீசத் தயா ரானான். அப்போது அவன் காலருகே நின்ற ஒரு பாம்பு அவனைத் தீண்டியது. அவன் கீழே விழுந்தான். சுந்தரன் பட படத்தான். "நான் மூலிகையைப் பறித்து வருகிறேன்" என்றான். "எனக்கு தகுந்த தண்டனைதான்" என்று கூறிவிட்டு இறந் தான் மகேந்திரன்.

பின்பு சுந்தரன் பொன் பொருளை அள்ளிக் கொண்டு வெளியே வந்தான். திரும்பவும் அந்த ஆலமரத்தின் விழுதை இழுத்தான். அது மூடிக் கொண்டது. மறு நாள் மன்னரிடம் சென்று பொருள்களைக் கொடுத்து விட்டு நடந்த விஷயத்தைக் கூறி னான்.

மன்னர் அதைக் கேட்டு சபையில் "ஒருவனுக்கு தன்னம்பிக்கைதான் வேண் டும். நீங்கள் யாரும் காட்டிற்குச் செல்ல மறுத்தீர்கள். கோயிலைப் பார்த்ததில்லை என்று கூறினீர்கள். ஆனால் சுந்தரன், 'நான் சென்று வருகிறேன்' என்று தன் வீரத் தையும், தன்னம்பிக்கையையும் துணை யாகக் கொண்டு சென்றான். இவன் இன்று முதல் நம் தளபதி" என்று கூறி, பாராட்டி பொன்னும் பொருளும் அளித்தார்.

— எம். ராஜதுரை



அழகு நிலா, பாவ. நடராஜன், பக். 16, ரூ. 5/ புவனம் பதிப்பகம், 54/7, சாய்கிருபா வளாகம், கோவிலூர் சாலை, காரைக்குடி - 630 001.

கற்பனையும், சந்தமும் கொஞ்சும் 14 பாடல்களின் சரம் இது.

மியாவ் மியாவ் பூனைக்குட்டி
மீசை யுள்ள பூனைக்குட்டி
வவ்வல் வவ்வல் நாய்க்குட்டி
வாலை ஆட்டும் நாய்க்குட்டி
மேமே மேமே ஆட்டுக்குட்டி
மேயப் போகும் ஆட்டுக்குட்டி
பாப்பா பாப்பா படுசுட்டி
பாட்டுப் பாடுவா கைதட்டி -

பக். 14.

மே மே மே மே ஆட்டுக்குட்டி
மேயப் போகும் ஆட்டுக்குட்டி!

பாடல்களில் குழந்தைக் கவிஞரின் தாக்கம் இருக்கிறது என்பது பெருமைக்குரிய சிறப்பு. நல்ல தாள். சிறந்த தயாரிப்பு.

✣ ✣

சிந்தனை வளர்க்கும் சிறுவர் கதைகள், சுடர் வண்ணன், பக். 128, ரூ. 25/- சகுந்தலை புத்தகாலயம், 12/1, திருவள்ளுவர் காலனி, கே.கே. நகர், சென்னை - 78.

சிறுவர்கள் எந்த வகைகளில் பண்பாடற்றுப் போகிறார்கள் என்பதை அத்தகைய சிறுவரையே கதை மாந்தர்களாக்கி, அவர்களின் தீக்குணங்களைப் படிப்போர் மனதில் பதியவைத்து, திருத்திக் காட்டும் எட்டுக் கதைகளின் தொகுப்பு. தாமரையின் முழுப் பக்கப் படங்கள் அழகூட்டுகின்றன.

✣ ✣

நன்றியுள்ள பறவைகள், ஹெலன் ஞானப் பிரகாசம், பக். 56, ரூ. 12/- செந்தூரான் பதிப்பகம், 6, ஜெய்சங்கர் தெரு, மே. மாம்பலம், சென்னை - 33.

பேராசையால் பொறியில் சிக்கிய குரங்குகள், சோம்பேறி ரவி சுறுசுறுப்புள்ளவனாக மாறித் தோட்டம் போடுவது, தந்தையைப் போலவே ஆட்கொல்லிப் புலியைக் கொல்லும் காடன் - இப்படி வித்தியாசமான பல கதைமாந்தர்களை அறிமுகப்படுத்துகிறார். பாராட்ட வேண்டிய முயற்சி.

✣ ✣

குணக்குன்று குன்சாரிலால் நந்தா, நிகரியவாதி, பக். 92, ரூ. 17/- மணி மேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

வெளியுலகத்திற்கு அதிகம் தெரியாத காந்தியவாதியின் எளிய வாழ்க்கை வரலாறு. அப்பழுக்கற்ற தன்னலமற்றவர் என்று காந்தியடிகளாலே புகழப்பட்டவர். சுதந்தரப் போராட்ட வீரரின் வாழ்க்கை கதை. 'இப்படியும் கூட மனிதர்கள் இருந்திருப்பார்களா?' என்று அதிசயக்கத் தூண்டும்.

✣ ✣

சேற்றிலே முளைத்த செந்தாமரை, ருக்மணி சேஷசாயி, பக். 72, ரூ. 16/- செந்தூரான் பதிப்பகம், 6, ஜெய்சங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33.

பழமொழிகளுக்கேற்ற சிறுகதைகளாக பத்துச் சிறுகதைகள் உள்ளன. கதைகள் நீதியையும் பண்பையும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளன. கதைகளுக்கு சில அருமையான படங்களும் உள்ளன (ஓவியர் - சுப்பு). சிறுவர்கள் விரும்பிப் படிப்பார்கள் என்பது உறுதி.

— ரே

தானாக முடிந்த வழக்கு!



குமரபுரம் என்பது சிறிய கிராமம். அங்கு படித்த நீதிபதி ஒருவர் இருந்தார். அவர் மிகவும் எளிமையானவர். எல்லா வேலைகளையும் தாமே செய்பவர். எந்தக் கட்டணமும் இன்றி நீதி வழங்கியதால் சுற்றுப்புற கிராமங்களில் அவர் புகழ் பரவியிருந்தது.

பக்கத்து ஊரில் ராமையா வசித்து வந்தான். அவனுக்கு நிறைய ஆடுகள் இருந்தன. ஆடுகளை நிறுத்த இடம் இல்லாமல் பாதையை அடைத்துக் கொண்டு கட்டி வைத்திருப்பான்.

ராமையாவின் இந்தச் செயலால் சோமையாவும் அருகில் குடியிருந்த மற்றவர்களும் பெரும் தொல்லைக்கு ஆளாகினர்.

ஒரு நாள் ராமையாவுக்கும் சோமையாவுக்கும் பாதை பிரச்னையால் தகராறு ஏற்பட்டது.

இறுதியில் குமரபுரம் நீதிபதியிடம் வழக்கை எடுத்துச் செல்ல தீர்மானித்தனர்.

மறுநாள் இருவரும் குமரபுரத்தில் இருக்கும் நீதிபதியின் வீட்டிற்குச் சென்றனர்.

நீதிபதி விறகு வெட்டி வர போயிருப்பதாகத் தகவல் அறிந்தனர்.

இருவரும் அவர் விறகு வெட்டும் இடத்தை நோக்கிச் சென்றனர்.

எதிரில் ஒருவர் விறகை சுமந்தபடி வந்து கொண்டிருந்தார். அவரிடம் ''ஐயா நீதிபதி எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டான் சோமையா.

''நான்தான். உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்றார் நீதிபதி.

''ஐயா! இந்த விறகை சற்று இறக்கி வைத்து விட்டு எங்கள் வழக்கை விசாரியுங்கள்'' என்றான் ராமையா.

"இது என் தலையிலேயே இருக்கட்டும். பாதையில் இறக்கி வைத்து மக்களுக்கு இடையூறு செய்யக் கூடாது. நீங்கள் சொல்லுங்கள்" என்றார் நீதிபதி.

"வழக்கு முடிந்தது. நாங்கள் வருகிறோம்" என்றான் ராமையா.

"வழக்கைக் கூறவே இல்லையே எப்படி?" என்றார் நீதிபதி.

'பாதையில் விறகையே இறக்கி வைக்காதவர், ஆடுகளைக் கட்ட அனுமதிப்பாரா?' என்று நினைத்த ராமையா தன் தவறை உணர்ந்து நீதிபதியிடம் விடைபெற்றுச் சென்றான்.

— எம். ஜடாவர்மன்



வெற்றிகள் வந்தபோது...

காலை ஆறு மணிக்கு எழுந்தான் முகுந்தன். புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்தான். பத்தாம் வகுப்பு அறிவியல் பாடத்தில் 'பெர்னோலி தத்துவம்' படித்தான். படித்துப் படித்துப் பார்த்தான். பாதிதான் புரிந்தது. மீதியை ஆசிரியரிடம் கேட்டுக் கொள்ளலாம் என்று புத்தகத்தை மூடிவிட்டு சாப்பிட்டு பள்ளிக்குக் கிளம்பினான்.

பள்ளியில் முதல் வகுப்பு நடந்தது. ஆங்கில ஆசிரியர் பாடம் நடத்த ஆரம்பித்தார். ஆனால் காலாண்டு மதிப்பெண் தான் கிடைக்கும் என்று எதிர்பார்த்த முகுந்தனுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது. அடுத்த வகுப்புக்கு அறிவியல் ஆசிரியர் நுழைந்தார். 'பெர்னோலி தத்துவம்' கேட்கலாம் என்று நினைத்த அவனுக்கு ஆசிரியர் கையில் இருந்த மதிப்பெண் தாளைப் பார்த்தவுடன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தான். அறிவியல் பாடத்தில் 98 மார்க் வாங்கியிருந்தான். தான் அதிக மார்க் எடுத்ததால் அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. பக்கத்தில் இருந்த பிரகாஷ் 99 மார்க். ஒரு மார்க்தானே அதிகம் என்று முகுந்தனுக்கு அவன் மனம் ஆறுதல் கூறியது.

நான்கு நாட்கள் கழித்து ரேங்க் கார்டை ஆசிரியர் கொடுத்தார். முகுந்தன் மொத்தம் 93 சதவீதம் பெற்றிருந்தான். 14 மார்க் வித்தியாசத்தில் இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டான். கவலையில் ஆழ்ந்தான். ஆனால் மீண்டும் அவன் மனம் அவனுக்கு ஆறுதல் கூறியது. கவலை கலந்த மகிழ்ச்சியில் வீட்டிற்கு வந்து அப்பாவிடம் ரேங்க் கார்டை கொடுத்தான்.

அப்பா பார்த்து விட்டு "வெரி குட் அடுத்த தேர்வில் முதல் ரேங்க் வாங்க

வேண்டும்'' என்று கூறி கையொப்பம் இட்டுக் கொடுத்தார். பிறகு "ஆங்கிலத்தில் இன்னும் முயற்சி பண்ணணும்'' என்று சொல்லி எழுந்தார்.

மறுநாள் வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்தலானார். பாடத்தின் நடுவே 'யார் முதல் ரேங்க். எவ்வளவு மதிப்பெண்?' என்று கேட்க, பிரகாஷ் வெற்றி களிப்பில் பெருமிதத்துடன் எழுந்து நின்றான். 'கணிதத்தில் எவ்வளவு' என்று கேட்ட ஆசிரியரிடம் "நூறு சார்'' என்றான் புன்னகை சிந்தி. முகுந்தனை தோல்விகள் தாக்கிய போதும் 'அடுத்த தேர்வில் பார்த்துக் கொள்ளலாம்' என்றது அவன் மனம். இரவு பகலாகப் படித்தான். தேர்வும் வந்தது. வினாத்தாள் மிகவும் கடினமாக இருந்தது.

தேர்வு முடிந்து பள்ளி திறக்கப்பட்டது. சிறிது நாட்களில் ரேங்க் கார்டு வழங்கப்பட்டது. அதில் முகுந்தன் முதல் ரேங்க். அவனுக்குச் சொல்ல முடியாத ஆனந்தம். 'வெற்றி என்றால் இப்படி தானா?' என்று தனக்குள் ஒரு கேள்வி.


பள்ளி முடிந்து வேகமாக வீட்டிற்கு வந்தான். வெற்றிக் களிப்பில், அப்பாவிடம் ரேங்க் கார்டை காட்டினான். அப்பா பார்த்து விட்டு "போன தேர்வில் 464 மதிப்பெண். ஆனால் இப்போது 428. நீ முதல் ரேங்க் வாங்க வேண்டும் என்பது முக்கியமல்ல. அதிக மதிப்பெண்கள் வாங்க வேண்டும் என்பதுதான் அவசியம். நீ மற்ற மாணவனை விட அதிக மதிப்பெண் எடுக்க வேண்டும் என்று நினைப்பதை விட நிறைய மதிப்பெண் வாங்க வேண்டும் என்று நினை. ஒவ்வொரு பாடத்திலும் 95 மார்க்குக்கு மேலே வாங்க வேண்டும் என்று நினை'' எனக் கூறி கையெழுத்து இட்டார். முகுந்தனுக்கு வெற்றிகள் வந்த போதும் தோல்வி மனப்பான்மை அடைந்தான். நீண்ட நேர சிந்தனைக்குப் பின் அப்பா சொன்ன விஷயத்தை ஏற்றுக் கொண்டான்.

— கே. எஸ். சாமி,
சிதம்பரம்

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 த	வ	ளை		2 வி	க	3 ட	க	4 வி
க்		5 கு		ஜ		மா		மா
கா				5 ய		ர		ன
ளி	ள்	6 க		ம்		ம்		ம்
	7 தே						ன்	
ளி		ர்		8 வ		9 கு	10 ட	ம்
கி		த		ளை				ய
க்		ந்		கு		11 ஜ௦		வி
12 அ	ட்	13 லா	ண்	டா		ன்	ணா	14 ஓ



பூனை, நாய்களுக்கு மூக்குக் கண்ணாடி!

மிகப் பெரிய – சிறிய கரன்ஸி

14-ம் நூற்றாண்டில் சீனா அச்சடித்து வெளியிட்ட ஒரு குவான் என்னும் கரன்ஸி 9X13 அங்குலம் கொண்டதாக இருந்தது.

இதை விடப் பெரிய காகிதக் கரன்ஸியை இதுவரை எந்த நாடும் அச்சடிக்கவில்லை.




ரோமானிய நாடு வெளியிட்ட கரன்ஸிதான் உலகிலேயே மிகச் சிறியது.

75 ஆண்டுகளுக்கு முன்பு அச்சடிக்கப்பட்ட 10 பானி என்ற நோட்டுத்தான் அது.

வாலில்லா பூனை

ஐஸ்லாந்து தீவில் வாலில்லா பூனைகள் உள்ளன. இவைகளை வளர்ப்பதை மக்கள் அதிர்ஷ்டத்தின் சின்னமாகக் கருதுகின்றனர். 'மேக்ஸ் கேன்ஸ்' என அழைக்கப்படும் இந்த இனம் அழிந்து



விடாமல் இருக்க அந் நாட்டு அரசுப் பண்ணை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த அதிசயப் பூனைகளின் உருவம் தாங்கிய தபால்தலைகள் 1989-ல் வெளியிடப்பட்டன.

கம்ப்யூட்டரில் இயங்கும் இரயில்

ஜப்பானில் எல்லா ரயில்களும் கம்ப்யூட்டர் மூலம் இயங்குகின்றன. சக்கர நாற்காலியுடன் வருபவர்கள் யாருடைய உதவியுமின்றி இரயிலில் ஏறிக் கொள்ள



வசதி செய்துள்ளனர். அத்துடன் குறிப்பிட்ட இருக்கைகளை சக்கர நாற்காலியில் வரும் ஊனமுற்றோர்களுக்காக ஒதுக்கியுள்ளனர்.

பிராணிகளுக்குக் கண்ணாடி!



உலகிலேயே ஒரே ஒரு கண்ணாடி நிறுவனம்தான் பூனைகளுக்கும், நாய்களுக்கும் பலவிதமான மூக்குக் கண்ணாடிகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.


இந்தக் கண்ணாடியின் பெயர் மேர்வினமர். இந்தக் கம்பெனி பிரான்சில் பாரிஸ் நகரில் இருக்கிறது.

– ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.

சுத்தம் செய்யும் பறவை!

ப்ளோவர் என்ற ஒரு சிறு பறவை, முதலைகளுடைய பற்களை சுத்தம் செய்யும் வைத்தியராகப் பணியாற்றுகிறது.


ஆதாரம் : 'அதிசய உண்மைகள்'
தகவல் : பி. ராஜசேகரன்.





லாப்லாந்து மக்கள் கலைமான்களின் பாலை அருந்துகின்றனர். ஒரு கப் காப்பிக்கு ஒரு ஸ்பூன் பால் விட்டால் போதும். அவ்வளவு கெட்டியாக இருக்குமாம்!

தகவல் : தமிழ்துரைசாமி,
பாலசமுத்திரம்.



மாஸ்கோவில் மட்டும் 'கிரெம்லின்' இருப்பதாகக் கூறுவது தவறு. பல பெரிய ரஷ்ய நகரங்களில் கிரெம்லின் உண்டு. கிரெம்லின் என்றால் பெரிய கோட்டை என்றுதான் அர்த்தம்.

– பி. தியாகராஜன், நாமக்கல்.

வெள்ளிப் பாத்திரம்

வெள்ளியால் செய்யப்பட்ட ஆறடி உயரம் உள்ள மிகப் பெரிய ஜாடி ஜெய்ப்பூர் மகாராஜாவுக்குச் சொந்தமானது. ஏழாம் எட்வர்ட் முடிசூட்டும் விழாவிற்கு 1902-ம் ஆண்டு அவர் இங்கிலாந்து சென்ற போது அதில் குடிநீர் எடுத்துச் சென்றார். இன்றும் அது ஜெய்ப்பூர் அரண்மனையில் உள்ளது.

ஆதாரம் : அதிசயம் ஆயிரம்
தகவல் : மு. ருக்மணி



வானம் துக்கமாக இருக்கிறது!



பொழுது விடிந்தது. அங்கும் இங்கும் சின்னச் சின்ன பூக்கள் தலையாட்டிக் கொண்டிருந்தன. நான் கண் விழிக்கும் அந்நேரம் சூரியனும் எழுந்தான். மேகத்திலிருந்து மீண்டு வந்து நின்றான். அப்போதுதான் நான் வானத்தைப் பார்த்தேன்.

ஏனோ அன்று வானம் மிகுந்த துக்கத்துடன் காணப்படுவது போல உணர்ந்தேன். என் கண்களில் எதுவும் நல்ல விஷயமாகத் தெரியாது என்று நொந்து கொண்டு நான் பள்ளிக்குச் சென்றேன்.

எப்போதும் போல தோழிகளுடன் பேசிக் கொண்டிருந்த எனக்கு ஏனோ துக்கமாக இருந்தது. ஏன் இன்று வானம் இப்படி இருக்கிறது? என் தோழிகளிடம் என் துக்கத்தை விவரித்தேன். அவர்கள் நகைத்தார்கள். 'வானம் எவ்வாறு துக்கமாகக் காணப்படும்?' என்றனர்.

பள்ளி மணி அடித்தது. மாணவர்கள் அணிவகுத்து வழிபாட்டிற்குச் சென்று கொண்டிருந்தனர். என் வகுப்புத் தோழிகளும் நானும் சிறியவர்களை ஒழுங்காக அழைத்துச் செல்ல வேண்டும். அன்று எனக்கு அப்பணியில் கவனம் இல்லை. வழிபாட்டிலும் என் மனம் செல்லவில்லை.

வழிபாடு முடிந்ததும் வகுப்பிற்குச் சென்றேன். அங்கு இருந்த ஜன்னலிலிருந்து வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். பாடம் எனக்கு சரியாகப் புரியவில்லை.

இடைவேளையின் போது உணவு அருந்த வகுப்பிலிருந்து வெளியே வந்து ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்தோம். அப்போது நான் மறுபடியும் வானை நோக்கினேன். இப்போது கருமேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்தன. 'இன்னும் சற்று நேரத்தில் துக்கம் தாங்காமல் அழுது விடுமோ?' என்று நினைத்தேன்.


வகுப்பு நேரம் முடிந்ததும் நாங்கள் பள்ளியிலிருந்து வெளிப்பட்டோம். நான் என் வீடு நோக்கி நடந்தேன். எங்கள் தெருவில் நான்கு ஆட்கள் ஏதோ பணி செய்து கொண்டிருந்தனர். 'என்ன அது?' விரைந்து சென்றேன்.

என் வீட்டிற்கு எதிரே இருந்த எனக்குப் பிடித்த அந்த உயர்ந்த 'தூங்குமூஞ்சி' மரத்தை அவர்கள் வெட்டிக் கொண்டிருந்தனர். அங்கே சாலையைப் பெரிதாக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

என் கண்முன்னே அந்த மரம் சரிந்து விழுந்தது. அப்போது மழை பெய்ய ஆரம்பித்தது. என் மனமும் துக்கம் தாங்காமல் அழுதது.

சற்று நேரத்தில் மழை நின்றது. என் கண்கள் மரம் இருந்த இடத்திற்குச் சென்றன. அந்த மரம் இருந்த இடம் வெறுமையாகக் காட்சியளித்தது. மனதைத் தேற்றிக் கொண்டு அந்த இடத்தில் ஒரு சிறிய செடியை நட்டேன். மேகம் கலைந்தது. சூரியன் வெளிப்பட்டான். சூரியனின் கதிரொளி என் முகத்தில் விழுந்தது.

– ஆர். ஜெயஸ்ரீ , பத்தாம் வகுப்பு, ஸ்ரீ சங்கர வித்யாசரமம், திருவான்மியூர்.



கல்லில் விளைந்த விந்தைக் கந்தன்!

காஞ்சி முனிவர் தேசத்தின் தலைநகரான டில்லியில் முருகனுக்கு ஓர் ஆலயம் எழுப்ப விரும்பினார். ஆறுபடைவீடுகளில் நாலாவதான சுவாமிமலையில் விளங்கும் சுவாமிநாத சுவாமியின் அச்சாகவே அவ்வாலயத்தின் மூல மூர்த்தியை அமைக்க வேண்டுமென எண்ணினார்.

கோயிலெடுக்கும் பணியை மேற்கொண்ட புகழ்பெற்ற சிற்பியான கணபதி ஸ்தபதியாரிடம் காஞ்சி முனிவர், "திருநெல்வேலியில் குறுக்குத்துறைத் தாமிரபரணியில் நன்றாகத் தேடிப் பாருங்கள். நமக்குத் தேவையான நீள, அகல, கன பரிமாணமுள்ள ஒரு பாறை அகப்படும். முன்னூறு வருஷத்துக்கு முன் திருச்செந்தூர் ஆண்டவனுக்குப் புதிய மூர்த்தி செய்த பாறையின் மிச்சப் பகுதி அது. அப்போதே குறுக்குத்துறை சுப்பிரமணிய சுவாமிக்கும் அந்தப் பாறையில்தான் மூர்த்தி செய்தனர். அதன் மிஞ்சிய பகுதி ஆற்றிலேயே புதைந்து விட்டது. அதைக் கொண்டுதான் டில்லிக் கோயிலுக்கான மூல விக்கிரகம் செய்ய வேண்டும்" எனக் கூறினார்.

முனிவர் வாக்கு பொய்க்குமா? அவர் சொன்னவாறே மிகுதிப் பாறை கண்டெடுக்கப்பட்டது. ஆயினும் ஸ்தபதியாருக்கோ பெரும் ஏமாற்றம்! ஏன்?

கற்களில் ஆண், பெண், அஃறிணை என்று மூன்று விதமாகச் சிற்பிகள் அவற்றின் தன்மையைக் கொண்டு இனம் பிரிப்பார்கள். அவற்றில் ஆண் இனக் கற்களைக் கொண்ட ஆண் தெய்வ வடிவங்களையும், பெண்ணினக் கற்கள் கொண்டே பெண் தெய்வ வடிவங்களையும் செய்வார்கள். அஃறிணை கற்களைச் சுவர், பல வித டிசைன்கள் கொண்ட தூண் ஆகியவை செய்ய உபயோகிப்பார்கள். துரதிருஷ்டம், ஆற்றிலிருந்து கண்டெடுத்த கல் அஃறிணையாக இருப்பதை ஸ்தபதியார் தமது சோதனையில் கண்டார்!

அதை வேதனையுடன் முனிவரிடம் கூறினார். "முன்னரே இரண்டு புகழ்பெற்ற முருக வடிவங்களைச் செய்திருந்த கல்தான். என்றாலும், எதனாலோ இந்த எஞ்சிய பகுதி இனம் மாறி, நம் காரியத்திற்குப் பயனில்லை என்று ஆகிவிட்டது!" என்று துக்கத்துடன் கூறினார்.

முனிவர் அவரிடம் அமைதியாகக் கூறினார்: "அதற்காக வேறு கல்லில் சிலை அமைக்க வேண்டாம். இந்தக் கல்லை இங்கேயே வைத்துவிட்டுப் போ. கோயில் கட்டும் வேலையைக் கவனி. அது கணிசமான அளவு முன்னேறிய பின் வா. என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறேன்."


அவ்வாறே ஸ்தபதியார் முனிவரின் குடிலில் கல்லை வைத்துவிட்டு விடைபெற்றார். டில்லியில் கோயில் நிர்மாணத்தை மேற்கொண்டார். பிறகு மீண்டும் முனிவரிடம் வந்தார்.

முனிவர் அதே கல்லை அவரிடம் காட்டினார். "இப்போது பிரயோஜனப்படுமா பார்" என்றார்.


ஸ்தபதியார் அதைச் சோதித்துப் பார்த்தார். ஆச்சரியம்! அஃறிணைக் கல்லாக இருந்த அது இப்போது ஆண் கல்லாக மாறியிருந்தது.

டில்லியில் 'மலை மந்திர்' என்று வட இந்தியர் போற்றித் தொழும் உத்தர சுவாமிமலையில் சுவாமிநாத சுவாமியாக இருக்கிறார் முருகன்!

— ரா. கணபதி


கௌதம் ஸ்கூலுக்கு நேரமாச்சு..
கிளம்பு.. இப்போ திலக் வந்திடுவான்.
தீபாவளிக்குத் துணி எடுக்கலே... பொங்கலுக்காவது எடுத்துத் தரேன்னு சொன்னீங்களே!
இதோ புறப்படுறேன்.. அப்புறம்.. அம்மா..
என்னடா?
நானும் முயற்சி பண்ணித்தான் பார்க்கிறேன். முடியலையேடா!
பொங்கலோ பொங்கல்!
கதை: அழகனார்
இருக்கிற சட்டையெல்லாம் ரொம்பப் பழசாப் போச்சு.
நண்பர்களிடம் பொங்கலுக்குப் புதுசு போடுவேன்னு வேற சொல்லிட்டேன்...
கௌதம்! கௌதம்!
ம்..திலக் வந்துட்டான். நான் வர்றேம்மா.


பள்ளியில் —
திலக், பொங்கலுக்குத் துணி எடுத்தாச்சா?
நாங்க தீபாவளிக்கு மட்டும்தான் டிரஸ் வாங்குவோம்
ம்.. எடுத்தாச்சு ரமேஷ். ரெண்டு செட்!
அது சரி, நீ
ரமேஷ் கேலி செய்தான் —
கௌதம், நீ எப்படி? பொங்கலுக்காவது டிரஸ் உண்டா?
ஒண்ணும் தெரியலையேடா!
பொங்கலுக்கு முந்தின இரவு
வா, திலக்!.. கௌதம் கடைக்குப் போயிருக்கானே...
இந்தாங்க ஆன்ட்டி! நீங்க தப்பா நினைக்காதீங்க. இதில் கௌதமுக்கு ஒரு செட் டிரஸ் இருக்கு!
உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்..
என்ன, திலக்?


வேண்டாம் திலக்!
எனக்கு ரெண்டு செட் எடுத்திருந்தாங்க. அதான் கௌதமுக்கு ஒண்ணுன்னு சொல்லி...
அப்பா அம்மா சம்மதமும் வாங்கிட்டேன்! முடிஞ்சா அடுத்த பொங்கலுக்கு எனக்கு ஒரு சூட்டை வாங்கிக் கொடுங்க, சரியா?
நீயே அவனிடம் கொடுக்கலாமேப்பா?!
ஆன்ட்டி இதை நீங்களே வாங்கிக்கொடுத்ததா இருக்கட்டும்... இதைப்பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம்! ப்ளீஸ் ஆன்ட்டி!
சரி திலக்!... சரி ஏன் அப்படிச் சொல்றே?


என்னதான் நண்பனா இருந்தாலும். அவனுக்கு சங்கடமா இருக்கும்
ரொம்ப தாங்க்ஸ் திலக்!
பொங்கலுக்கு மறுநாள் பள்ளியில் ரமேஷ் 'கமெண்ட்' அடித்தான்
திலக், இங்க பாருடா...
..கௌதமோட டிரஸ்தான சூப்பர்.
அட, ஆமாண்டா!

செஸ் இளவரசி ஹம்பி



அவள் அப்போது முதல் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். வீட்டில் அப்பா செஸ் விளையாடும் போது சில 'நகர்த்தல்கள்' குறித்து கேள்வி கேட்பாள். அப்பாவும் செஸ் பற்றி விளக்கி ஊக்கப்படுத்தினார்.

இப்போது அவளுக்கு வயது 11. மூன்று வருடங்களுக்கு முன் செஸ்ஸில் 'தேசிய சிறுமியர் பட்டம்' பெற்றாள். அப்பாவுக்கு ஒரே மகிழ்ச்சி. மகளின் பயிற்சியாளராக முடிவு செய்தார். தனது விரிவுரையாளர் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றார். அப்பாவும் பெண்ணும் அன்று முதல் இன்றுவரை தினமும் ஆறு மணி நேரம் செஸ்ஸில் செலவழிக்கிறார்கள்.

கிரிக்கெட் டேட்டா

ஒரு நாள் போட்டிகளில் அதிக ரன்

யார்?	எந்த நாடு?	எத்தனை ஆட்டங்கள்	எத்தனை இன்னிங்ஸ்?	ஆட்டமிழக்கா ஆட்டங்கள்	மொத்த ரன்கள்	அதிகபட்ச ரன்கள்
1. எம். அசாருதீன்	இந்தியா	302	278	51	8649	153*
2. டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ்	மேற்கிந்தியத்தீவு	238	237	28	8648	152*
3. பி. அரவிந்த டிசில்வா	ஸ்ரீலங்கா	244	237	24	7691	145
4. சச்சின் டெண்டுல்கர்	இந்தியா	203	196	18	7457	143
5. ஜாவித் மியாண்டட்	பாகிஸ்தான்	233	218	41	7381	119*
6. சலீம் மாலிக்	பாகிஸ்தான்	274	248	37	7045	102
7. அர்ஜுன ரணதுங்க	ஸ்ரீலங்கா	247	233	46	7007	131*
8. விவியன் ரிச்சர்ட்ஸ்	மேற்கிந்தியத்தீவு	187	167	24	6721	189*
9. ஆலன் பார்டர்	ஆஸ்திரேலியா	273	252	39	6524	127*
10. ரிச்சி சிச்சர்ட்சன்	மேற்கிந்தியத்தீவு	224	217	30	6246	122
11. டி.எம். ஜோன்ஸ்	ஆஸ்திரேலியா	164	161	25	6068	145

* ஆட்டமிழக்காதவை/நவம்பர் 6, 1998 கணக்கீட்டுபடி.

அவள் திறமையும் மன உறுதியும் மிக்கவள். அப்பா பொறுமையும் விடாமுயற்சியும் உடையவர். இப்படிப் பட்ட இரண்டு பேரும் முயன்றால் வெற்றி கதவைத் தட்ட தயங்குமா என்ன? பிரான்சில் நடைபெற்ற பத்து வயதிற்குட்பட்டோருக்கான உலக சாம்பியன் பட்டம் அவளுக்குக் கிடைத்தது. தொடர்ந்து பன்னிரெண்டு வயதிற்குட்பட்டோருக்கான உலகச் சாம்பியன் பட்டமும் கைவசமாயிற்று.

அவள்தான் கோனேரு ஹம்பி. அப்பா பெயர் கோனேரு அசோக். ஆந்திர மாநிலம் குண்டூரில் ஏழாம் வகுப்பு படிக்கிறாள் ஹம்பி. அப்பா அசோக் செஸ்ஸில் நேஷனல் பி பிரிவு ஆட்டக்காரர்.

ஹம்பியின் தற்போதைய இலக்கு, உலக இளம் வயது மகளிர் சாம்பியன் பட்டம். இந்த இலக்கை எட்டுவது ஹம்பிக்கொன்றும் முடியாத காரியமில்லை!

குட்டிப் பெண் ஹம்பி உலக சாம்பியனாக இருந்தாலும் கூட, பள்ளியில் சராசரி மாணவிதான். செஸ்ஸே கதி என்று இருப்பதில்லை. ஹம்பியின் வயதையொத்த மற்ற குழந்தைகளைப் போலவே விருப்பு - வெறுப்புகள் உண்டு. உருளைக்கிழங்கு சிப்ஸ், தெலுங்கு திரைப்படங்கள் - இவை ஹம்பிக்கு ரொம்பப் பிடிக்கும்! ஹம்பியின் சகோதரி சந்திரஹாசாவிற்கோ செஸ் என்றால் பாகற்காய்!

ஆந்திரக் குட்டிப்பெண் ஹம்பி எதிர் காலத்தில் உலக செஸ் ராணியரில் ஒருவராக விளங்க வாழ்த்துவோம்!

— விளையாட்டுப் பையன்



குழந்தைக் கவிஞர் பிறந்த நாள் விழா!

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பிறந்த தினமான நவம்பர் 7ஆம் நாள், இந்த ஆண்டும் காரைக்குடியில் குழந்தை இலக்கிய தின விழாவாகக் கொண்டாடப் பெற்றது.

தேவி நாச்சியப்பன் அனைவரையும் வரவேற்றார். குழந்தை எழுத்தாளர் சங்கத் துணைத் தலைவர் வானொலி அண்ணா கூத்தபிரான் தலைமை தாங்கினார். கோனா பட்டு குழந்தை எழுத்தாளர் பால. நடராசன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். வி. பவானி லெக்ஷ்மி குழந்தைக் கவிஞரின் பாடல்களைப் பாடினார்.

விழா நிறைவில் கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற, அழகப்பா பள்ளிக் குழந்தைகளுக்கும், கவிமணி சங்கக் குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

தவித்தோர்

ரன் சராசரி	ஐம்பதுகள்	நூறுகள்	பூஜ்யங்கள்
38.10	53	7	9
41.38	57	17	13
36.10	51	11	12
41.89	43	19	8
41.70	50	8	8
33.39	46	5	18
37.47	47	4	13
47.00	45	11	7
30.63	39	3	11
33.40	44	5	8
44.62	46	7	6

சார்தபால்



விழுந்து, விழுந்து சிரித்தான்!

♦ தேசபந்து எழுதிய 'அதிசயச் சகோதரர்கள்' கதையைப் படித்து விட்டு என் தம்பிக்குக் கதை சொன்னேன். அவன் விழுந்து விழுந்து சிரித்தான். படமும் நன்றாக இருந்தது.

– நா. கயல்விழி, ஒன்பதாம் வகுப்பு, நன்னிலம்.

♦ டிசம்பர் மாத கோகுலத்தைப் பார்த்த போது மகிழ்ச்சியாக இருந்தது. அதற்கு காரணம் வெளிவந்திருக்கும் வண்ணப் படங்கள்தான்! விடுகதை பக்கமும் கோலப் போட்டிகளும் நிரந்தரமாக எதிர் பார்க்கிறேன். கோலங்களை அனுப்ப கடைசி தேதி முடிந்து விட்டதா?

– பி. ராதிகா, பெருந்தலையூர்.

ராதிகா, கோலப் போட்டிக்கு கடைசி தேதி எதுவும் இல்லை. நீங்கள் கோலங்களை அனுப்பி வைக்கலாம். (ஆர்.)

♦ நமது பாரம்பரிய கலைகளை போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற தலையங்கம் இன்றைக்கு மிகவும் அவசியமானது.

– டி. சந்திரன், சித்தோடு, ஈரோடு மாவட்டம்.

♦ 'பறக்கும் பட்டாம் பூச்சி'யை செய்து பார்த்தேன். 'படபட' என்ற சத்தத்துடன் நகர்ந்தது. இது போன்று நிறைய எதிர் பார்க்கிறேன்.

– சொ. ஆனந்த், திருக்காட்டுப்பள்ளி.

♦ சிந்துபாத்தின் கதையை இது வரை நான் படித்ததில்லை. 'கோகுலத்தில் வருமா?' என்று நினைத்ததுண்டு. என் எண்ணத்தை சொல்லாமலே உணர்ந்து படக் கதையாக போடுவதற்கு நன்றி. படங்களும் கதையும் அடுத்த அத்தியாயத்தை எதிர் பார்க்க வைத்து விட்டன.

– டி. சுதாராணி, பத்தாம் வகுப்பு, அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.

♦ கிறிஸ்துமஸுக்கு ஏற்ற நல்ல நாடகம் கிறிஸ்துமஸ் மரத்தில்.... கருணை, அன்பு, மரியாதை போன்றவற்றை எங்களுக்கு உணர்த்தும் விதத்தில் அமைந்திருந்தது.

– பால்ராஜ், திருத்துணி.

♦ விளையாட்டுச் செய்திகளை எங்களின் வேண்டுகோளிற்கு இணங்கி நான்கு பக்கங்களில் வெளியிட்டிருந்தீர்கள். நன்றி. மார்க் டெய்லரின் தியாகம் உண்மையில் பாராட்டப்பட வேண்டியது. எனக்கு இப்படி ஓர் வாய்ப்புக் கிடைத்திருந்தால் 'டெய்லர்' போல் நடந்து கொள்வேனா என்றால் சந்தேகம்தான்!

– அ. நைனா முகமது, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.

♦ 'வால்' பற்றிய சிறு செய்திகளும் வண்ணப்படங்களும் அசத்தல்!


– எஸ். பிரவீனா, ஆறாம் வகுப்பு, சிவகங்கை.

♦ 'மாதவனுக்கு எப்படி இந்த மாதிரி சக்தி வந்தது? இன்னும் எப்படியெல்லாம் மாட்டப் போகிறானோ?' என்றெல்லாம் எப்போதும் சிந்தித்தபடியே இருக்க வைத்து விட்டான் 'மின்கல மாதவன்'.

– வா. விஸ்வநாதன், பத்தமடை.


Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623 ; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

வரைந்து பழகுங்கள்!



பிருந்தாவனம்

வரிக்கோடுகளின் நடுவே ஒளிந்திருப்பவை என்னென்ன?



விடை : முயல், வரிக்குதிரை, அறுங்கோணம், முக்கோணம், சதுரம்.



பொம்மைகளின் அணிவகுப்பு!



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/08 • Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 • Registered as a Newspaper in Srilanka